# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பொருளாதார நிலைமாற்றம்

**பொருளாதார நிலைமாற்றம் மீதான தேசியக் கொள்கைக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கும், இலங்கை பொருளாதார ஆணைக்குழு, இலங்கை முதலீட்டு வலயங்கள், சர்வதேச வியாபாரத்திற்கான அலுவலகம், தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு, இலங்கைப் பொருளாதார மற்றும் சர்வதேச வியாபாரத்திற்கான நிறுவகம் ஆகியவற்றை தாபிப்பதற்கும், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தை நீக்கம் செய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்**

---

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2024, மே மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, மே மாதம் 14 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **260 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 288.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச.வ.- ஓ. 21/2024*

***பொருளாதார நிலைமாற்றம் மீதான தேசியக் கொள்கைக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கும், இலங்கை பொருளாதார ஆணைக்குழு, இலங்கை முதலீட்டு வலயங்கள், சர்வதேச வியாபாரத்திற்கான அலுவலகம், தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு, இலங்கைப் பொருளாதார மற்றும் சர்வதேச வியாபாரத்திற்கான நிறுவகம் ஆகியவற்றை தாபிப்பதற்கும், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தை நீக்கஞ் செய்வதற்கும், அவற்றோடு தொடர்பு பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.***

முகப்புரை

தொழினுட்ப முன்னேற்றங்கள், மாறுபடுகின்ற இனப்பரம்பல்கள், வளர்ந்துவருகின்ற சுற்றாடல்சார் சவால்கள் ஆகியவற்றினால் பூகோள பொருளாதார தோற்றப்பாடு துரிதமாக பரிணமித்து வருவதாதலாலும்:

பகிரப்பட்ட பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவம் மற்றும் தேசிய பொருளாதாரங்களுக்கிடையிலான தொடர்புகளை ஏற்றுக் கொள்வதாதலாலும்:

நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் சுபீட்சத்தை மேம்படுத்துவதற்கும், உற்பத்தித்திறனைச் செழிப்புறச் செய்வதற்கும், சமூக முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் எல்லாப் பிரசைகளுக்கும் ஒப்புரவான வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதற்கும் பொருளாதார நிலைமாற்றம் பிரதானமானதாக இருப்ப தாதலாலும்;

இலக்கிடப்பட்ட இடையீடுகள், உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடுகள், அத்தியாவசிய பொதுமக்கள் சேவை ஏற்பாடுகள் என்பவற்றின் ஊடாக உட்பட பொருளாதார நிலைமாற்றத்திற்காக இயலச்செய்கின்ற சுற்றாடலொன்றை தோற்றுவிப்பதில் இலங்கை அரசாங்கத்தின் வகிபாகத்தை புரிந்து கொண்டுள்ளதாதலாலும்:

பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதிலும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதலிலும் புத்தாக்கம் மற்றும் தொழினுட்ப மேம்பாடுகளை பேணுவதிலும் முதலீட்டின் முக்கிய வகிபாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாதலாலும்:

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை நியாயமாகவும் ஒப்புரவாகவும் நடாத்துதலை மேம்படுத்துகின்ற வெளிப்படைத்தன்மைமிக்க, உள்ளடக்கியதான விதிகள் அடிப் படையிலான முறைமையொன்றினைப் பேணுகின்ற இலங்கையின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவதாதலாலும்:

பொருளாதார அபிவிருத்தி, போட்டித்தன்மையை மேம்படுத்து தல், பூகோளச் சந்தையிடத்தில் பொருளாதாரங்களை ஒருங் கிணைப்பதற்கான வசதிப்படுத்தல் என்பவற்றிற்கான ஊக்கி யொன்றாக சர்வதேச வியாபாரத்தின் முக்கியத்துவத்தை அங்கீ கரிப்பதாதலாலும்:

முதலீட்டுக்கான உசிதமான சூழலொன்றையும் விரிவாக்கப்பட்ட வியாபார வாய்ப்புக்களையும் ஏற்படுத்துகின்றதும் வியாபார உடன்படிக்கைகளை முடிவுசெய்கின்றதும் அத்துடன் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கு ஏற்றுமதி - இறக்குமதிச் செயற்பாடு களை வசதிப்படுத்துகின்றதுமான சட்டவாக்கத்தை நிறைவேற்று வதற்கான கட்டாயமான தேவையை புரிந்துகொண்டுள்ளதாத லாலும்:

உலகளாவிய சவால்கள் மற்றும் பரஸ்பர நன்மைக்கான பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளை நிவர்த்திப்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் ஒன்றிணைவு என்பவற்றிற்கு இலங்கையின் அர்ப்பணிப்பை மீள் உறுதிப்படுத்துவதாதலாலும்:

அரசியலமைப்பின் 27 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் (இ) மற்றும் (ஈ) உட்பந்திகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக சனநாயக சோசலிச சமூகத்தின் குறிக்கோள்களை கருத்திற் கொள்வதாதலாலும்:

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பொருளாதார நிலைமாற்றச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

பாகம் I

அத்தியாயம் I

## பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசியக் கொள்கை

**2.** பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசியக் கொள்கையின் குறிக்கோள்கள் பின்வருமாறாதல் வேண்டும் –

பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசியக் கொள்கையின் குறிக்கோள்கள்

(அ) போதியளவு, உணவு, உடை, வீட்டுவசதி, வாழ்க்கை நிலைமைகளின் தொடர்ச்சியான சீர்திருத்தம், ஓய்வு நேரத்தை முழுமையாகத் துய்த்தல், சமூக, கலாசார வாய்ப்புக்கள் என்பன உட்பட எல்லாப் பிரசைகளுக்கும் அவர்களது குடும்பத்தினரும் போதியதான வாழ்க்கைத் தரத்தை அனுபவித்தலை உருவாக்குதல்;

(ஆ) பகிரங்கப் பொருளாதார முயற்சியின் மூலமும் தனியார் பொருளாதார முயற்சியின் மூலமும் அத்தகைய பகிரங்கப் பொருளாதார முயற்சியையும் தனியார் பொருளாதார முயற்சியையும் சமூகக் குறிக்கோள்களாகவும் பொதுமக்கள் நலனுக்காகவும் நெறிப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்காகவும் உகந்ததாக இருக்கக்கூடிய அத்தகைய திட்டமிடலையும் கட்டுப்பாடுகளையும் விதித்துரைக்கின்ற சட்டங்களின் மூலமும் நாடு முழுவதையும் விரைவாக அபிவிருத்தியை உருவாக்குதல்; அத்துடன்

(இ) பொருளாதார நெருக்கடிகளை தவிர்த்தல்.

பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசிய கொள்கை

**3.** (1) பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசிய கொள்கையானது பின்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் -

(அ) அரசாங்கத்திற்கு சொந்தமான கடனை மீள் கட்டமைத்தல் -

(i) 2032 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில் பொதுக் கடனானது தொண்ணூற்று ஐந்து வீதத்தை விட குறைவாக இருத்தல் வேண்டும்;

(ii) 2032 ஆம் ஆண்டிலும் அதற்கு பின்னரும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில் மத்திய அரசாங்கத்தின் ஆண்டு மொத்த நிதியிடுதல் தேவைகளானது பதின்மூன்று வீதத்தை விட குறைவாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(iii) 2027 ஆம் ஆண்டிலும் அதற்கு பின்னரும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில் மத்திய அரசாங்கத்தின் ஆண்டு கடன் சேவையானது வெளிநாட்டு நாணயத்தில் நான்கு தசம் ஐந்தை விட குறைவாக இருத்தல் வேண்டும், அத்துடன்

(ஆ) பின்வருவன உள்ளடங்கலாக உயர்வான போட்டி, ஏற்றுமதி மைய எண்ணிம பொருளாதாரத்திற்கு இலங்கையை நிலைமாற்றுதல் -

(i) போட்டித் தன்மையை அதிகரிக்கும் முகமாக தேசிய பொருளாதாரத்திற்கு பல்வகைமைகள் மற்றும் காத்திரமான கட்டமைப்பு மாற்றங்கள்;

(ii) 2050 ஆம் ஆண்டில் தேறிய பூச்சியத்தை அடைதல்;

(iii) பூகோள பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்புகளை அதிகரித்தல்;

(iv) உறுதியான நுண்பொருளியல் சமநிலைகள் மற்றும் நிலைபெறுதகு கடன் ஆகியவற்றை எய்துதல்;

(v) விவசாயி உற்பத்தித்திறன், விவசாய வருமானங்கள், கமத்தொழில் ஏற்றுமதிகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக விவ சாயத்தை நவீனமயப்படுத்தல்; அத்துடன்

(vi) உள்ளடங்கிய பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றங்களை மேம்படுத்துதல்.

(2) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, "தேறிய பூச்சியம்" என்பது, இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பசுமை இல்ல வாயுவின் அளவு மற்றும் வளிமண்டலத்திலிருந்து அகற்றப்படும் அளவு ஆகியவற்றுக்கிடையிலான சமநிலை எனப் பொருள்படும்.

பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசியக் கொள்கை தொடர்பில் அமைச்சரவையின் கடமைகள்

**4.** பின்வரும் இலக்குகள் தொடர்பில் பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசியக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் கீழ் அரசாங்கத்தின் பணிப்பு மற்றும் கட்டுப்பாடுகளுக்கு பொறுப்பாவது அமைச்சரவை யின் கடமையாக இருத்தல் வேண்டும்:-

(அ) பின்வருவனவற்றை அடைவதற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி –

(i) 2027 ஆம் ஆண்டில் ஆண்டு தோறும் ஐந்து சதவீதம் ; அத்துடன்

(ii) அதன் பின்னர் ஆண்டுதோறும் ஐந்து சத வீதத்திற்கு மேல்;

*விளக்கம்*

*2027 ஆம் ஆண்டானது நெருக்கடிகள் ஆரம்பித்ததிலிருந்து ஐந்து ஆண்டுகளை குறித்து நிற்கின்றது. இலங்கையின் சாதகமான மீண்டெழலானது 2027 ஆம் ஆண்டில் முழுமையான பொருளா தார மீண்டெழலை கொண்டிருத்தல் வேண்டும். 2048 ஆம்*

ஆண்டில் உயர்தர பொருளாதார அந்தஸ்தினை எய்துவதற்கு 2030 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஐந்து சதவீதத்திற்கு மேல் பொருளாதார வளர்ச்சி துரிதப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) 2025 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்படையில் ஐந்து சதவீதத்தை விட குறைவாக வேலை வாய்ப்பின்மையை அடைதல்;

*விளக்கம்*

இலங்கையின் வேலைவாய்ப்பின்மை விகிதமானது பொதுவாக குறைவாக உள்ளதுடன், ஐந்து சதவீத இலக்கு விகிதத்தை கொண்டதாக உள்ளது.

(இ) பின்வருவனவற்றை அடைவதற்காக பெண்கள் தொழிற்படை பங்குபற்றுதல்கள் -

(i) 2030 ஆம் ஆண்டில் நாற்பது சதவீதத்தை விட குறையாமல் இருத்தல்; அத்துடன்

(ii) 2040 ஆம் ஆண்டில் ஐம்பது சதவீதத்தை விட குறையாமல் இருத்தல்;

*விளக்கம்*

பெண்கள் தொழிற்படை பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கான வழிமுறைகளானவை குறிப்பிடக்கூடிய அளவில் பொருளாதாரத்தில் தொழில் உற்பத்தித்திறன் மற்றும் வளர்ச்சியை அதிகரிக்கும்.

(ஈ) ஆண்டுதோறும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கொடுப்பனவுகளின் சமநிலையில் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை ஒரு சதவீதத்தை விட விஞ்சுதலாகாது.

*விளக்கம்*

தொடர்ச்சியான நடைமுறைக் கணக்கு மிகையானது, நிலைபெறுதகு அடிப்படையில் அதனது வெளிவாரி கடன் சேவைக் கடப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு இலங்கைக்கு உதவுகின்றது. ஆயினும் தரப்பட்ட ஆண்டொன்றில் நடைமுறைக்

கணக்கு பற்றாக்குறையொன்றின் விடயத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதத்தை விட குறைவாக மட்டுப்படுத்தப் படுதல் வேண்டும்.

(உ) பின்வருவனவற்றை அடைவதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக பண்டங்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகள் -

(i) 2025 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருபத்தைந்து சதவீதத்தை விட குறையாமல் இருத்தல்;

(ii) 2030 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நாற்பது சதவீதத்தை விட குறையாமல் இருத்தல்; அத்துடன்

(iii) 2040 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அறுபது சதவீதம்;

*விளக்கம்*

இலங்கையை உள்வருகையை மையமாகக் கொண்ட பொருளாதாரத்திலிருந்து வெளிநிலை மைய பொருளாதாரமாக இலங்கையை மாற்றுவதற்கு 2030 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நாற்பது சதவீத இலக்கை தேவைப் படுத்தப்படுகின்றது.

(ஊ) பின்வருவனவற்றை அடைய மொத்த உள்நாட்டு உற்பத்திகள் சதவீதமொன்றாக தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடு-

(i) 2030 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐந்து சதவீதத்தை விட குறையாமல் இருத்தல்; அத்துடன்

(ii) 2030 ஆம் ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதிகள் அல்லது சேவைகளின் ஏற்றுமதிகளில் இருக்கவேண்டிய தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் ஆகக் குறைந்தது நாற்பது சதவீதம்;

*விளக்கம்*

பொருளாதாரத்திற்கு உள்வருகைகள் உருவாக்குகின்ற கடன்சாராததன் வளர்ச்சியை ஆதரவளிக்கும் நோக்கில் ஏற்றுமதி மைய வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு மாறுதல்.

(எ) 2032 ஆம் ஆண்டு வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு தசம் மூன்று சதவீதத்தை அடைவதற்கு அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் ஆரம்ப மிகுதி மற்றும் 2032 ஆம் ஆண்டு முதல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆகக் குறைந்தது இரண்டு சதவீதத்தை அடைதல் ;

*விளக்கம்*

அத்தகையவொரு பொருளாதார நெருக்கடி மீண்டெழுவதைத் தடுக்கும் நோக்கில், அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆகக் குறைந்தது இரண்டு சதவீத ஆரம்ப மிகையை உறுதிப்படுத்துவது அத்தியாவசியமாகும்.

(ஏ) 2027 ஆம் வருடத்திற்கு அப்பால் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் அரசாங்க வருமானமானது ஆகக் குறைந்தது பதினைந்து சதவீதத்தை அடைதல்; மற்றும்

*விளக்கம்*

வலுவான உள்நாட்டு வளங்கள் ஒன்றுதிரட்டலை பேணுதல்;

(ஐ) பல்பரிமாண வறுமை எண்ணிக்கை வீதமானது 2027 ஆம் ஆண்டில் பதினைந்து சதவீதத்தை விட குறைவாகவும், 2035 ஆம் ஆண்டில் பத்து சதவீதத்தை விட குறைவாகவும் இருத்தல்.

*விளக்கம்*

பொருளாதார நிலைமாற்றம் மூலம் உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு (கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, அடிப்படை சேவைகளை அணுகிப் பெறல் உள்ளடங்கலாக) பல்பரிமாண வறுமையை குறைத்தல்.

**5.** (1) மூன்றாம் மற்றும் 4 ஆம் பிரிவுகளில் தரப்பட்டவாறாக பொருளாதார நிலைமாற்றம் மீதான தேசிய கொள்கைக்கு பயன்கொடுப்பதற்கு கொள்கைக் கட்டமைப்பு மற்றும் செயல்நுணுக்கங்கள் மீதான அறிக்கையொன்றினை (முன்மொழிவு செய்யப்பட்ட சட்டம் உள்ளடங்கலாக) 2025 ஆம் ஆண்டு தொடக்கம் முதல் அமைச்சரவை தயாரித்து அதனை பாராளுமன்றத்திற்கு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் சமர்ப்பிப்பதனை சனாதிபதி உறுதி செய்தல் வேண்டும்.

*கொள்கை வரைவுச் சட்டகம் மற்றும் உபாய முறைகள் தொடர்பான அறிக்கை யொன்றினை அமைச்சரவை தயார் செய்தல்*

(2) அமைச்சரவையானது அத்தகைய அறிக்கைகளை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அத்தகைய மீளாய்வுகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கிணங்க, பொருளாதாரக் கொள்கை என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப் படுதல் வேண்டுமென்பதுடன் முதலாவது அறிக்கை 2025 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

**6.** அரசாங்கத்தின் சகல விதமான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், ஒழுங்குவிதிகள், சுற்றுநிருபங்கள், பணிப்புரைகள் ஆகியன அத்தகைய பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசிய கொள்கையுடன் ஒத்திருத்தல் வேண்டும்.

*பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசிய கொள்கையை உறுதிப் படுத்துவதற்கு அரசாங்கத்தின் கொள்கைகள்*

**7.** (1) அரசாங்கமானது, பொருளாதாரக் கொள்கை என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் ஊடாக பொருளாதார நிலைமாற்றம் மீதான தேசியக் கொள்கையின் ஒவ்வொரு இலக்கையும் எய்துவதை நோக்கி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை ஒவ்வொரு ஆண்டும் மார்ச் முப்பத்தோராம் திகதியில் பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும் முதலாவது அத்தகைய அறிக்கை இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டு காலாவதியாவதை உடனடுத்துப் பின்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

*கொள்கையின் முக்கிய இலக்குகளை எய்துவதற்கான அர்ப்பணிப்பும் இலக்குகளிலிருந்து ஏதேனும் விலக்குதலுக்கான நிவாரண நடவடிக்கை*

(2) இலக்கு எய்தியிராதவிடத்து, அரசாங்கம் சூழ்நிலையை நிவர்த்திக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் எப்போது இலக்கு எய்தப்படும் என்பதனைக் குறிப்பிட்டு பாராளுமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும். நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் பிணிக்கும் நிபந்தனையொன்றாகவிருக்க வேண்டிய இலக்குகளை எய்துவதற்கு உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் விசாலமான செயல்நுணுக்கத்தையும் பிரதிபலிக்க வேண்டும்.

பாராளுமன்றத்தின் மேற்பார்வை கட்டுப்பாடு

**8.** பாராளுமன்றம், அரசியலமைப்பின் 4, 43 மற்றும் 148 உறுப்புரைகள் ஆகியவற்றின் கீழ் இச்சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்களை பிரயோகிக்கையில், இச்சட்டத்தின்கீழ் அமைச்சரவையானது அதனது தத்துவங்கள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் இச்சட்டத்தின்கீழ் மேற்பார்வைக் கட்டுப்பாட்டை பாராளுமன்றம் கொண்டிருத்தல் வேண்டும்.

அரசாங்கத்திற்கு உதவுகின்ற முகவராண்மைகள்

**9.** தேசிய பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான துரித வளர்ச்சி குறிக்கோள்களை எய்துவதற்கு பின்வரும் முகவராண்மைகள் அரசாங்கத்திற்கு உதவுதல் வேண்டும் -

(அ) 11 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பொருளாதார ஆணைக்குழு;

(ஆ) 61 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வலயங்கள்;

(இ) 99 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட சர்வதேச வியாபாரத்திற்கான அலுவலகம்;

(ஈ) 132 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு; அத்துடன்

(உ) 162 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பொருளாதாரம் மற்றும் சர்வதேச வியாபார நிறுவகம்.

பாகம் II

அத்தியாயம் II

**இப்பாகத்தின் ஏற்புடைமை**

**10.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகள் முதலீடுகள் மற்றும் இலங்கையிலிருந்து சர்வதேச வியாபாரம் ஆகியவற்றிற்கு ஏற்புடையதாக இருக்கும்.

இப்பாகத்தின் ஏற்புடைமை

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகள் 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்திற்கு ஏற்புடையதாதலாகாது.

அத்தியாயம் III

**இலங்கைப் பொருளாதார ஆணைக்குழுவை தாபித்தல்**

**11.** (1) (இச்சட்டத்தில் "பொருளாதார ஆணைக்குழு" என குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைப் பொருளாதார ஆணைக்குழு வென அழைக்கப்பட வேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

பொருளாதார ஆணைக் குழுவை தாபித்தல்

(2) பொருளாதார ஆணைக்குழுவானது அதற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இடையறாவழி உரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும் அத்துடன் அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்கு தொடுக்கவும் படலாம்.

(3) ஆணைக்குழு அதனது பிரதான அலுவலகத்தை இலங்கையில் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் ஏனைய கிளை அலுவலகம் அல்லது ஏனைய பிரதிநிதித்துவத்தை இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே தாபிக்கலாம்.

பொருளாதார ஆணைக் குழுவின் குறிக்கோள்கள்

**12.** பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் பின்வருவாதல் வேண்டும்–

(அ) வலுவான முதலீட்டு சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் பேணுதல், ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் மூலமும் இலங்கையின் பிரசைகளுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலமும் சர்வதேச வியாபாரத்தை தூண்டும் நிலைபெறுதகு வெளிநாட்டு நேரடி முதலீட்டினை மேம்படுத்துதல் மற்றும் வசதிப்படுத்துதல் என்பவற்றுக்கு பங்களித்தல்;

(ஆ) இலங்கையில் முதலீட்டு வலயங்களுக்கான தேவையை மதிப்பீடு செய்தலும் இலங்கை வலயங்கள் அல்லது பாகம் III இனால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட வேறு அமைப்பிற்கு அத்தகைய முதலீட்டு வலயங்களின் தொழிற்பாடு மற்றும் முகாமைக்கான வழிகாட்டி மற்றும் ஒழுங்குபடுத்துதல் மேற்பார்வை என்பவற்றை ஏற்பாடு செய்தல்;

(இ) முதலீட்டாளர்கள், முதலீடுகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் செய்கின்ற வியாபாரத்தின் எளிதாக்கலை மேம்படுத்துதலும் இயலயச் செய்தலும்;

(ஈ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதும், வெளிநாட்டு நேரடி முதலீடு, பண்டங்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி மற்றும் இலங்கையினுள் பெருமளவு தொழிலை உருவாக்குதல் என்ற வாயிலாக இலங்கையினுள் வெளிநாட்டு செலாவணியின் முக்கியத்துவமான உள்வருகையை உள்ளடக்குகின்றதுமான அத்துடன் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் முக்கியத்துவமான நன்மைகளில் முடிவுறுகின்றதுமான முதலீடுகளைத் தீர்மானித்தல்;

(உ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகவிருப்பதாக (ஈ) என்னும் பந்தியின்கீழ் பொருளாதார ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றவாறாக முதலீடு

களின் மேம்படுத்தலுக்கென அமைச்சருக்கு ஊக்கு விப்புகளுக்கு மீளாய்வு செய்து விதப்புரை செய்தல்;

(ஊ) முதலீடுகளை இயலுமையாக்குவதற்கான சுமூகமான வினைத்திறன்மிக்க செயன்முறையை வசதிப்படுத்தல்;

(எ) முதலீடுகளை வசதிப்படுத்துவதன் மூலமும் வெளிநாட்டு அன்னியச் செலாவணியில் மூலங்களை பன்முகப்படுத்துவதனால் ஏற்றுமதிகளை அதிகரிப்பதன் மூலம் சர்வதேச வியாபாரத்தை தூண்டும் கொள்கைகளை உருவாக்குவதன் மூலமும் இலங்கையின் பொருளாதாரத்தை விஸ்தரித்து பலப்படுத்துதலும், ஏற்றுமதி உழைப்புகளை அதிகரிப்பதும் அமைச்சரவைக்கு அத்தகைய கொள்கைகளை விதப்புரை செய்தலும்; அத்துடன்

(ஏ) இலங்கையினுள் கைத்தொழில் மற்றும் வர்த்தக தொழில் முயற்சிகளை தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்கு ஊக்கமளித்தலும் உற்சாகப்படுத்தல் மற்றும் வளர்த்தலும்.

பொருளாதார ஆணைக்குழுவின் தத்துவங்கள்

**13.** பொருளாதார ஆணைக்குழுவானது தனது கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் பின்வரும் தத்துவங்களை பிரயோகித்தல் வேண்டும் –

(அ) அமைச்சருக்கு முதலீட்டு வலயங்களை பிரகடனப் படுத்துவது தொடர்பிலான விதப்புரைகள்;

(ஆ) இப்பாகத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வலயங்களின் ஒழுங்குபடுத்தலிலான மேற்பார்வைக்கென சுயாதீன ஒழுங்கமைப்பாளரை நியமிப்பதற்கான அவசியத் தன்மையை அல்லது காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மாற்றீடான வழிமுறைகள் ஊடாக ஆனால் பின்வருவனவற்றிற்கு வரையறுக்கப்பட்டதல்ல – அடையாளங்கண்டு அமைச்சரவைக்கு விதப்புரைகளை செய்தல்;

(i) வலயத்தினுள் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் சிக்கலானதன்மை மற்றும் நோக்கெல்லை;

(ii) பொதுமக்கள் நலன், சூழல், பங்குதாரர்கள் மீதான சாத்தியமான தாக்கம்;

(iii) சட்டக்கட்டமைப்புகள் மற்றும் தராதங்கள் ஆகியவற்றுடனான இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தலிலான மேற்பார்வையின் அவசியத்தன்மை;

(iv) வலயங்களினுள் நிலைபெறுதகு அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி, முதலீடு ஆகியவற்றை வசதிப்படுத்தல்;

(v) நியாயமான போட்டி, போட்டியான நடத்தைக் கெதிரானவற்றை மற்றும் சமத்துவமான வாய்ப்புகளை உருவாக்குதல்; அத்துடன்

(vi) பொருளாதார ஆணைக்குழுவினால் அவசியமானது எனக் கருதப்பட்டவாறான வேறு ஏதேனும் பொருத்தமான கருத்திற்கெடுத்தல்கள்;

(இ) முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்கென மறுசீரமைப்புகளின் நடைமுறைப்படுத்தலை உருவாக்குதல், மேற்பார்வை செய்தல் மற்றும் பணித்தல்

(ஈ) முதலீடுகள், சர்வதேச வியாபாரம் மற்றும் ஏற்றுமதிகள் தொடர்பான கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை திருத்துதல் அல்லது வழங்குவதன் மூலம் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவை என கருதப்படுகின்ற நடைமுறைகள் மீது அமைச்சருக்கு மதியுரையளித்தல்;

(ஊ) பாரிய ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி, பொருளாதார பல்வகைப்படுத்துதல் மற்றும் தொழினுட்பவியல்சார் முன்னேற்றம் என்பவற்றை எய்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சர்வதேச வியாபாரத்தினை மேம்படுத்த எல்லா அவசியமான நடவடிக்கைகளையும் எடுத்தல்;

(ஊ) முதலீடு மற்றும் வியாபாரத்துடன் தொடர்புடைய விடயங்களை கையாளுகின்ற ஏனைய அரசாங்க அல்லது ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் அல்லது சர்வதேச முகவர்கள் அல்லது நிறுவனங்கள் ஆகியவற்றுடன் தனியாகவோ அல்லது கூட்டாகவோ அதனது கடமைகள் மற்றும் பணிகளின் முன்னேற்றத்தில் ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்;

(எ) அதனது தத்துவங்கள், கடமைகள், பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலில் அவசியமாகக்கூடியவாறான எவரேனும் ஆளுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல்;

(ஏ) இப்பாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக முதலீடுகளை அல்லது தொழில்முயற்சிகளை அங்கீகரித்தல் அல்லது பதிவுசெய்தல்;

(ஐ) பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கும் பொருளாதார ஆணைக்குழுவின் ஏதேனும் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் அவசியமாகவிருக்கக் கூடியவாறான 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் வேறான சட்ட அமைப்புகளை உட்பட அமைப்புகளை தாபித்து உருவாக்குதலும்; அல்லது நிறுவனங்களை தோற்றுவித்தலும்;

(ஒ) அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக பொருளாதார ஆணைக்குழு தீர்மானிக்கக் கூடிய

வாறாக (i) என்னும் பந்தியின்கீழ் உருவாக்கப்பட்ட அத்தகைய அமைப்புகளுக்கு அத்தகைய தத்துவங் களை, கடமைகளை அல்லது பணிகளை கையளித்தல்;

(ஓ) அதனது குறிக்கோள்கள் அல்லது பணிகளை நிறை வேற்றும் நோக்கத்திற்காக பொருளாதார ஆணைக் குழுவினால் உருவாக்கப்பட்ட ஏதேனும் அமைப்பிற்கு விசேடமான அல்லது பொதுவான பணிப்புரைகளை வழங்குதல்;

(ஔ) அதனது ஆணையை நிறைவேற்றுவதில் பொருளாதார ஆணைக்குழுவிற்கு உதவுவதற்கு மதியுரை குழுக்களை நியமித்தல்;

(க) முதலீடு மற்றும் சர்வதேச வியாபாரம் தொடர்பில் சான்றுப்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்தும் அமைப்புகளை அங்கீகரித்தல்;

(ங) பொருளாதார ஆணைக்குழுவின் நிதியத்தில் வரவு வைக்கப்படவேண்டிய பாகம் III இன் கீழ் ஏதேனும் உரிமத்தை வழங்குவதற்கு இலங்கை வலயங்களினால் அறவிடப்பட்ட கட்டணங்களில் பத்து வீதம் வரையிலான தொகையொன்றினை தீர்மானித்தல்;

(ச) கொள்வனவு செய்தல், ஏதேனும் சொத்தை எடுத்தல், வைத்திருத்தல், அதற்கு உரிமையளிக்கப்பட்டதனால் அல்லது ஏதேனும் கொள்வனவின் காரணமாக மற்றும் விற்பனை செய்தல், ஈடு, குத்தகை, கொடை, மாற்றுதல், சாதனமளித்தல், விருப்பமான நன்கொடை அளித்தல், பரிமாற்றம் ஆகியவற்றின் காரணமாக அசையக் கூடிய அல்லது அசையாத சொத்துக்கள் அல்லது அத்தகைய அசையக் கூடிய அல்லது அசையாத ஏதேனும் சொத்துக்களை பராதீனம் செய்தல்;

(ஞ) இப்பாகத்தின் கீழ் அதனது கடமைகளை நிறைவேற்று வதற்கு அதனை இயலச்செய்ய பொருத்தமானது எனப் பொருளாதார ஆணைக்குழு கருதக்கூடியவாறான

அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக ஆலோசகர்கள் மற்றும் மதியுரையாளர்கள் உள்ளடங்கலாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாட்டொகுதியினரை நியமித்தல்;

(ட) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற்படுதல் மற்றும் முடுதல் உள்ளடங்கலாக பொருளாதார ஆணைக்குழு அவசியம் என கருதுகின்ற அத்தகைய முறையில் அதனது நிதியை முதலீடு செய்தல்;

(ண) இப்பாகத்தின் கீழான கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்குதல் மற்றும் வழிகாட்டிகளை வழங்குதல்; அத்துடன்

(த) இப்பாகத்தின் கீழ் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானது அல்லது உசிதமானது என கருதக்கூடியவாறான வேறு ஏதேனும் செயல்களை செய்தல்.

**14.** பொருளாதார ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பணிகள் பின்வருமாறாதல் வேண்டும் - பொருளாதார ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகள்

(அ) முதலீடுகள் தொடர்பான தேசிய கொள்கைகளை வடிவமைத்தல், விதந்துரைத்தல் மற்றும் நடைமுறைப் படுத்தல் மற்றும் தேசிய பொருளாதார முக்கிய நிலைமைகளை அடைவதற்கு சர்வதேச வியாபாரம் மற்றும் ஏற்றுமதிகளை தூண்டுதல்;

(ஆ) இலங்கையில் தற்போதுள்ள முதலீட்டாளர்கள் தங்கியிருத்தல், மீள் முதலீடு செய்தல், தமது முதலீடுகளை விரிவுபடுத்தல் ஆகியவற்றுக்காக தூண்டுதல்;

(இ) பதிவு செய்வதற்கான செயன்முறைகள், முதலீடுகளுக்கான ஒப்புதல்கள் உள்ளடங்கலாக சீர் செய்தல், எண்ணிமப்படுத்துதல், வெளிப்படைத் தன்மைமிக்க

ஒழுங்கமைப்பு மற்றும் தொழிற்பாட்டு சூழல் ஆகிய வற்றை உருவாக்கி முதலீடுகளை இலகுபடுத்தக் கூடிய அவசியமான நடைமுறைகளை எடுத்தல்;

(ஈ) வியாபார பேச்சுவார்த்தைகளானது இலங்கையின் உபாய ரீதியான ஏற்றுமதி மற்றும் முதலீட்டு கொள்கைகள் ஆகியவற்றிற்கு நேரடியாக இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடைமுறைகளை எடுத்தல். அத்தோடு வியாபார முதலீட்டு தொடர்பு நிலைகளில் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை பெற்றுக் கொள்ளல்;

(உ) அமைச்சருக்கு நிலைமாற்று முதலீடுகளை கவர்வதற்கும் தூண்டுவதற்கும் அவசியமான உபாய ரீதியான கொள்கை நடவடிக்கைகளை பிரேரித்தல்;

(ஊ) முதலீட்டு வலயங்கள் உருவாக்கப்படுவதை விதந் துரைத்தல்;

(எ) முதலீட்டு வலயங்களில் முதலீடுகள் மற்றும் முதலீட்டு பாய்ச்சல்கள் தொடர்பான காலப்பகுதிக்கான செய லாற்றுகை மீளாய்வுகளை பொறுப்பேற்றல்;

(ஏ) அரசாங்கக் கொள்கை உருவாக்கத்திற்கு உதவும் முகமாக வியாபாரம், ஏற்றுமதிகள், முதலீடுகள் தொடர்பான செயலாற்றுகை மற்றும் எதிர்கால வாய்ப்புகள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளல்;

(ஐ) பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அரசாங்க நிறுவனங்கள் இடையில் ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்; மற்றும்

(ஒ) பொருளாதார ஆணைக்குழுவின் ஏதேனும் அல்லது சகல விதமான நோக்கங்களையும் அடைவதற்கு அவசியமான அல்லது உகந்த ஏனைய அல்லது அத்தகைய சகல செயல்கள்.

முதலீட்டு வலயங்களை அமைச்சர் பிரகடனப் படுத்தல்

**15.** (1) அமைச்சர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் முதலீட்டு வலயம் ஒன்றை பிரகடனப்படுத்துவதற்கு 14 ஆம் பிரிவின் (உ) பந்தியின் கீழ் விதப்புரைகள் கிடைக்கப்பெற்றதன் மேல், பின்வருவனவற்றை குறித்துரைப்பதன் மூலம் அத்தகைய முதலீட்டு வலையத்தை வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்தல் வேண்டும் -

(அ) அத்தகைய வலையத்தினுள் வரவேண்டிய காணி இடப்பரப்பின் எல்லைகளும் வரையறைகளும்; அத்துடன்

(ஆ) எத்துறையில் அத்தகைய வலையம் வருகின்றதென்பதுடன் அது (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக தனியான துறையொன்றாக உள்ளதா அல்லது பல்துறை வலயமாக உள்ளதா என்பது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காணி இடப்பரப்பு, அதன்கண் வேறுவகையாகக் குறித்துரைத்தாலொழிய, இலங்கை முதலீட்டு வலயத்திற்கு உரித்தாக்கப்பட்டதாதல் வேண்டுமென்பதுடன், (450 ஆம் அத்தியாயமான) காணிக் கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காணியொன்றினுள் வருகின்ற ஏதேனும் தனிப்பட்ட காணி தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதன் மேல், III ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய வலயங்கள் தாபிக்கப்படுவதை மேம்படுத்தி மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பு இலங்கை முதலீட்டு வலயத்திற்கு இருத்தல் வேண்டும்.

(4) முதலீட்டு வலயம் ஒன்றானது தனியான துறையொன்றாக அல்லது பல்துறை வலயமாக கையளிக்கப்படலாம் மற்றும் பின்வருவனவற்றை உள்ளடக்கிய பொழுதிலும் அவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுதப்பட்டதல்ல -

(அ) கைத்தொழில்கள்;

(ஆ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழில் முயற்சிகள்;

(இ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தொழில்முயற்சிகள்;

(ஈ) உயர் தொழில்நுட்ப விவசாய தொழில்முயற்சிகள்;

(உ) சுற்றுலாத் துறை மற்றும் பொழுது போக்கு தொழில் முயற்சிகள்;

(ஊ) வியாபார சேவை தொழில்முயற்சிகள்; அல்லது

(எ) கால்நடை தொழில்முயற்சிகள்.

(5) ஏதேனும் அரச காணியை முதலீட்டு வலயமாக அமைச்சர் பிரகடனப்படுத்தலாம். அபிவிருத்தியாளார்கள், தொழில்முயற்சியாளர்கள் அல்லது ஏதேனும் பிரகடனப்படுத்தப்பட்ட வலயத்தினுள் தாபிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆட்கள் தவிர தனியார் பயன்பாட்டிற்காக ஏதேனும் வலயத்திலுள்ள ஏதேனும் அரச காணிகள் பராதீனப்படுத்தக் கூடாது.

(6) (அ) II ஆம் பாகம் அல்லது III ஆம் பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இலங்கை முதலீட்டு வலயத்தினால் விநியோகிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் கீழ் தவிர ஏதேனும் வேறு எழுதப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் படி, ஆள் ஒருவர் வலய அபிவிருத்தியாளர், தொழிற்பாட்டாளர் அல்லது தொழில் முயற்சி அல்லது செயற்பாடுகளை வழங்குதல் அல்லது பேணுதல், வலயம் ஒன்றினுள் வசதிகளை வழங்குதல் ஆகிய வியாபாரங்களை ஆள் ஒருவர் மேற்கொள்ளக் கூடாது.

(ஆ) வியாபார இயலுமை கொள்கைகள், ஒருங்கிணைக்கப்பட்ட காணி பயன்பாடுகள் மற்றும் துறைக்கு பொருத்தமான தளத்தின் உள்ளும் தளத்திற்கு வெளியிலுமான உட்கட்டமைப்பு வசதிகள், மற்றும் பயன்பாடுகளை வழங்கக்கூடிய புவியியற் பிரசேத்தினுள் வலயம் ஒன்று ஒதுக்கப்படுதல். அரசாங்க, அரசாங்க-தனியார் பங்காண்மை அல்லது ஏதேனும் பண்டங்களை அறிமுக்பபடுத்துதல் மற்றும் விசேட சேவைகள் வழங்கப்படுவதை கருத்திற் கொள்கின்ற தனியார் அடிப்படைகள் இவற்றுள் எதனை அபிவிருத்தி

செய்யப்படுவதற்கான ஆற்றல்கள் காணப்படுகின்றதோ அதனை மேற்கொள்ளுதல் மற்றும் இதுவரையில் இறக்குமதி தீர்வைகள் மற்றும் வரிகள் ஆகியன சுங்கக் கட்டளை சட்டத்தினுள் (அத்தியாயம் 235) வெளியிலே வருகின்ற பிரதேசம் என கருதப்பட்டது, மற்றும் இப்பாகத்தின்கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகள் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் IV

## பொருளாதார ஆணைக்குழுவின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்

பொருளாதார ஆணைக் குழுவின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்

**16.** *(1)* பொருளாதார ஆணைக்குழுவின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அலுவல்களானது சபை உறுப்பினர்களுக்கு கையளிக்கப்படும் (இப்பாகத்தின், "பொ.ஆ. சபை" என அழைக்கப்படும்).

*(2)* பொருளாதார ஆணைக்குழுவின் அலுவல்களை நிருவாகம் செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் நோக்கத்திற்காக பொ.ஆ. சபையானது இப்பாகத்தின் மூலம் பொருளாதார ஆணைக் குழுவிற்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட, தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை செயற்படுத்தல், செயலாற்றுகை செய்தல், நிறைவேற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

*(3)* பொ.ஆ. சபையானது பின்வருவன உள்ளடங்கலாக பத்திற்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் -

(i) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது திறைசேரியின் பிரதி செயலாளர் தரத்திற்கு குறையாத அலுவலராக இருக்கவேண்டிய அவரது பிரதிநிதி;

(ii) முதலீடு என்ற விடயம் கையளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது மேலதிக செயலாளர் தரத்தை விட குறையாத வராக அலுவலராக இருக்கவேண்டிய அவரது பிரதிநிதி;

(iii) சர்வதேச வியாபார அலுவலகத்தின் தவிசாளர்;

(iv) இலங்கை வலயங்களுக்கான தவிசாளர்; மற்றும்

(ஆ) பொருளாதாரம், முதலீடு, சர்வதேச வியாபாரம், நிதி, சட்டம், தகவல் தொழினுட்பம், ஏற்பாட்டு வசதிகள், உற்பத்தி, வியாபாரம் ஆகிய துறைகளில் தேசிய ரீதியாக அல்லது சர்வதேச ரீதியான அங்கீகாரங்களைப் பெற்ற அறிவு, நிபுணத்துவம், அனுபவமுடைய ஆறுக்கு மேற்படாத சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆட்கள் (இப்பாகத்தின் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என அழைக்கப்படும்)

(4) பொருளாதார ஆணைக்குழுவினால் பதவிப் பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது முதலீட்டு வலயங்கள், ஏற்றுமதி ஊக்குவிப்பு, அபிவிருத்தி தொடர்பில் வேறு ஏதேனும் சட்டத்தினால் பொறுப்பு கையளிக்கப்பட்ட பொருளாதார ஆணைக்குழுவினால் பதவிப் பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்கள் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் வேறு அதிகார அமைப்பிற்கு தலைமை தாங்குவதற்கு, அவர்களுக்கு வாக்களிப்பதற்கான உரித்து இல்லை என்பதன் பிரகாரம், பொருளாதார ஆணைக்குழுவின் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு பொ.ஆ. சபை அழைக்கலாம்.

**17.** (1) நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை பொ.ஆ. சபையின் தவிசாளராக சனாதிபதி நியமித்தல் வேண்டும். பொ. ஆ. சபையின் தவிசாளர்

(2) தவிசாளர் தனது தவிசாளர் பதவியை இராஜினாமம் செய்யலாம். அச்சந்தர்ப்பத்தில் தனது இராஜினாமம் பற்றி கடிதம் மூலம் சனாதிபதிக்கு அறிவிப்பதுடன் அத்தகைய இராஜினாம

மானது சனாதிபதியினால் எழுத்து மூலமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய திகதியிலிருந்து செல்லுபடியாகும்.

(3) வழங்கப்பட்ட காரணிகளின் நிமித்தம் சனாதிபதி தவிசாளர் பதிவியிலிருந்து நீக்கலாம்.

(4) (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளின் படி தவிசாளரின் பதவிக் காலமானது பொ.ஆ. சபையில் உறுப்பினராக பதவி வகிக்கின்ற காலப்பகுதி வரை இருத்தல் வேண்டும்.

(5) மோசமான ஆரோக்கியம், ஏனைய நோய்ப்படுதல், மூன்று மாதங்களுக்கு குறையாத காலப்பகுதியில் இலங்கையில் இல்லாதிருத்தல் அல்லது வேறு காரணிகளினால், தவிசாளருக்கு தற்காலிகமாக தனது பதவியில் செயலாற்ற முடியாத சந்தர்ப்பங்களில் வேறு எவரேனும் நியமிக்கப்பட்ட ஆளை அவரது சாதாரண கடமைகளுக்கு மேலதிமாக தவிசாளராக சனாதிபதி நியமிக்கலாம்.

பொ.ஆ. சபை உறுப்பினராக இருப்பதற்கான தகைமையீனம்

**18.** ஆள் ஒருவர் பொ.ஆ. சபை உறுப்பினராக தொடர்வதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்கு அல்லது பெயர் நியமனம் செய்யப்படுவதற்கான தகைமையை பின்வரும் காரணிகளினால் இழக்கின்றார் –

(அ) பாராளுமன்ற உறுப்பினராக அல்லது ஏதேனும் மாகாண சபையின் உறுப்பினராக அல்லது ஏதேனும் உள்ளூராட்சி சபையின் உறுப்பினராக வருதல்;

(ஆ) இலங்கை பிரசையாக இல்லாதிருத்தல் அல்லது இழத்தல்;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள சட்டத்தின் மூலம் மனச் சீர்கேடுற்றவராக கண்டறிதல் அல்லது பிரகடனப்படுத்தல்;

(ஈ) இலங்கையில் நடைமுறையிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவர் என அல்லது வங்குரோத்தான ஆள் என பிரகடனம் செய்யப்பட்டவர்

அல்லது வேறு ஏதேனும் நாட்டினால் விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்குரோத்தான ஆள் என பிரகடனப்படுத்தப்பட்டவர்;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாடொன்றின் நீதிமன்றத்தினால் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருப்பவர் அல்லது அனுபவித்தர்;

(ஊ) பொருளாதார ஆணைக்குழுவின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமை அல்லது நன்மையை பெற்றிருப்பவர் அல்லது அனுபவித்துக் கொண்டிருப்பவர்;

(எ) பொ.ஆ. சபை உறுப்பினராக அத்தகைய ஆள் தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு, செயலாற்றுவதற்கு, பிரயோகிப்பதற்கு குந்தகமாக பாதிக்கக்கூடிய நேரடியான அல்லது மறைமுகமான ஏதேனும் நிதி அல்லது வேறு விதமான நலன்கள் அல்லது

(ஏ) ஏற்கனவே பதவியிலிருந்து அகற்றப்பட்டவர்.

பதவிக் காலம்

**19.** பொ.ஆ. சபைக்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் இறப்பு, பதவிவிலகல், பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகிய காரணியினால் முன்கூட்டியே அவரது பதவி வெற்றிடமாகாத பட்சத்தில் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதிக்கு பதவி வகிக்க முடியும். அத்தோடு தொடர்ச்சியாகவோ அல்லது வேறு விதமாகவோ மேலும் ஒரு பதவிக் காலத்திற்கு அதிகப்படாமல் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினரை அகற்றுதல், இராஜினாமம் போன்றன

**20.** (1) பொ.ஆ. சபைக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சனாதிபதிக்கு முகவரியிட்ட கடிதத்தின் மூலம் எந்த நேரத்திலும் தனது பதவியை பதவிவிலகல் செய்யலாம், சனாதிபதி எழுத்து மூலமாக பதவிவிலகலை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து அத்தகைய பதவிவிலகல் செல்லுபடியாகும்.

(2) பொ.ஆ. சபையில் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை சனாதிபதி பின்வருமாறு பதவியிலிருந்து அகற்றலாம்-

(அ) மோசமான உடல் நிலை அல்லது ஆற்றலின்மை ஆகியவற்றினால் அத்தகைய ஆள் தனது கடமைகளை வினைத்திறன்மிக்க முறையில் செயலாற்றுவதற்கு ஆற்றலற்றவராக மாறுகின்ற பொழுது எழுத்து மூலமான அறிவித்தல் மூலம்; அல்லது

(ஆ) மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவங்களை பரசீலனை செய்ததன் பின்னர், திருப்தியுறும் பொழுது, அத்தகைய ஆள் மோசடிக் குற்றவாளி பாரதூரமான மோசமான நடத்தை அல்லது ஒட்டுமொத்த புறக்கணிப்பு அல்லது அத்தகைய ஆள் மீது வழங்கப்பட்ட பொறுப்புகளை வினைத்திறன்மிக்க முறையில் நிறைவேற்றுவதற்கான ஆற்றலின்மை (கூட்டங்களுக்கு முறையாக வருகை தராமை உள்ளடங்கலாக) அத்தகைய ஆளை உடனடியாக பதவியிலிருந்து அகற்றுவதற்கான தேவை ஏற்படும் பொழுது.

(3) அத்தகைய ஆள் மூன்று பொ.ஆ. சபை கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக சமூகமளிக்காதவிடத்து அல்லது ஏதேனும் கலண்டர் ஆண்டில் மூன்றில் ஒரு கூட்டங்களுக்கு அத்தகைய வருகை தராமைக்கு பொ.ஆ. சபையினால் மன்னிப்பு வழங்கப்படாத பட்சத்தில் தொடர்ச்சியாக பொ.ஆ. சபை நியமிக்கப்பட்ட உறுப்பினராக பதவி வகிப்பதற்கான தகைமையை இழக்கின்றார்.

(4) பொ.ஆ. சபை எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறத்தல், பதவிவிலகல் செய்தல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகியவற்றினால் பதவி வெற்றிடமாகின்ற பொழுது, சனாதிபதி, 16 மற்றும் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை கருத்திற் கொண்டு அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக வேறொரு ஆளை நியமிக்கலாம். அத்தகைய ஆள் யாரை பின்தொடர்ந்து பதவி வகிக்கின்றாரோ அவரது எஞ்சிய காலப்பகுதிக்கு பதவி வகிக்க முடியும். அத்தோடு இவர் பதவியிலிருந்து அகற்றப்படாத பட்சத்தில் மேலும் ஒரு முறை பதவிக் காலத்திற்கு அதிகப்படாத காலப்பகுதிக்கு தொடர்ச்சியாகவோ அல்லது வேறு விதமாகவோ மீள் நியமிக்கப்படுவதற்கான தகுதியுடையவர்.

(5) பொ.ஆ. சபைக்கு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் மோசமான உடல் நிலை அல்லது வேறு காரணிகளினால் தனது கடமைகளை தற்காலிகமாக நிறைவேற்ற முடியாத பொழுது அல்லது மூன்று மாதங்களுக்கு குறையாத காலப்பகுதியில் அவர் இலங்கையில் இல்லாத பொழுது, 16 மற்றும் 18 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளை கருத்திற் கொண்டு, அவர் இல்லாத காலப்பகுதியினுள் அவருக்கு பதிலாக செயற்படுவதற்காக வேறு எவரேனும் ஆளை சனாதிபதி நியமிக்கலாம்.

அக்கறை முரண்பாடு

**21.** (1) பொ.ஆ. சபையை சேர்ந்த எவரேனும் உறுப்பினருக்கு எவரேனும் ஆள், கம்பனி, முதலீடு, ஏற்றுமதி, வியாபாரம், பொருளாதார ஆணைக்குழுவின் கடமையை நிறைவேற்றுவதன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயங்களுடன் அல்லது அதனது வாக்கெடுப்பு அல்லது நெறிப்படுத்தல் ஆகியவற்றோடு நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வம் காணப்படும் பட்சத்தில் எழுத்து மூலம் அத்தகைய ஆர்வத்தின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றை குறிப்பிட்டு உடனடியாக பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய வெளிப்படுத்தல்களானது பொ.ஆ. சபை கூட்டங்களின் பொழுது முறையாக பதிவு செய்யப்படுதல் வேண்டும். அவற்றின் கலந்தாராய்வுகள் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விடயங்கள் கலந்தாராயப்படுகின்ற கூட்டத்தில் அல்லது அத்தகைய ஆர்வத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தீர்மானம் மேற்கொள்கின்ற வாக்கெடுப்பு நடைபெறுகின்ற பொழுது அத்தகைய ஆள் கூட்டங்களில் பங்குபற்றுதல் கூடாது.

(2) மேற்படி (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட அக்கறை முரண்பாட்டினை பிரகடனப்படுத்துவதற்கு எவரேனும் பொ.ஆ. சபை உறுப்பினர் தவறுதல் அல்லது புறக்கணிக்கும் பட்சத்தில் அத்தகைய உறுப்பினர் சபையில் உறுப்பினராக இருப்பதற்கான தகைமையை இழக்கின்றார்.

பொ.ஆ. சபைக் கூட்டங்கள் மற்றும் கூட்ட நடப்பெண்

**22.** (1) பொ.ஆ. சபைக் கூட்டங்களானது ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்தல் வேண்டும் அல்லது இப்பாகத்தின் மூலம் பொ.ஆ. சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக அல்லது செயலாற்றுகின்ற

நோக்கத்திற்காக தேவைப்படுகின்ற இப்பாகத்தின் மூலம் பொ.ஆ. சபைக்கு வழங்கப்பட்டவைகள் அல்லது விதிக்கப்பட்டவைகள்.

(2) பொ.ஆ. சபையின் ஏதேனும் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(3) பொ.ஆ. சபைக் கூட்டங்கள் பின்வருமாறு நடக்கலாம் -

(அ) கூட்ட நடப்பெண்ணில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட இடத்தில், திகதியில், நேரத்தில் ஒன்று கூடல் அல்லது

(ஆ) கூட்டம் நடைபெறும் காலப்பகுதியில் ஒவ்வொரு உறுப்பினரும் கூட்ட நடப்பெண்ணின் படி பங்கு பற்றுகின்ற சகல உறுப்பினர்களையும் சம காலத்தில் பார்க்கவும் கேட்கவும் கூடியதாக இருப்பதுடன் பங்குபற்றும் சகல உறுப்பினர்களும் ஒலி மற்றும் ஒளி தொடர்பாடல் மூலம் பங்குபற்றுதல்.

(4) பொ.ஆ. சபை ஏதேனும் கூட்டங்களின் பொழுது தீர்மானம் மேற்கொள்கின்ற சகல விடயங்களும் சமூகமளித்திருக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கு மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் வாக்குகள் சமநிலை ஏற்படும் பொழுது தவிசாளர் தனது வாக்கிற்கு மேலதிகமாக அரிதி வாக்கொன்றை செலுத்தலாம்.

(5) தவிசாளர் சமூகமளித்திருக்கின்ற சந்தர்ப்பங்களில் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். பொ.ஆ. சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமூகமளிக்காதவிடத்து, சமூகமளித்திருக்கின்ற உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய பொ.ஆ. சபை கூட்டங்களுக்கு தலைமை வகித்தல் வேண்டும்.

(6) இந்த பிரிவின் முந்தைய ஏற்பாடுகளின் பிரகாரம், பொ.ஆ. சபை கூட்டங்களை நடாத்துதல், அவற்றிற்கான அழைப்பு விடுத்தல்,

தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை பொ.ஆ. சபை ஒழுங்குபடுத்தலாம். அத்தோடு அத்தகைய கூட்டங்களுக்கான அலுவல்களையும் ஒழுங்குபடுத்தலாம்.

*ஏதேனும் வெற்றிடத்தின் காரணமாக பெறுமதியற்றது என கருதக் கூடாத பொ.ஆ. சபை நடவடிக்கைகள் அல்லது செயல்கள்*

**23.** அதனது உறுப்பினர்கள் மத்தியில் ஏதேனும் வெற்றிடம் எவ்வாறு இருந்த பொழுதிலும் மற்றும் பொ.ஆ. சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கைகள் தனது உறுப்பினர்கள் மத்தியில் வெற்றிடத்தின் காரணமாக மாத்திரம் அல்லது உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் காணப்படும் ஏதேனும் குறைபாடுகளின் காரணமாக மாத்திரம் பெறுமதியற்றதாக அல்லது பெறுமதியற்றதாக கருதப் படக் கூடாது.

*பொ.ஆ. சபை உறுப்பினர் களுக்கான ஊதியம்*

**24.** நிதி விடயம் வழங்கப்பட்ட அமைச்சரின் ஒருங்கிணைவுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு தீர்மானிக்கப்பட்ட விதத்தில் அத்தகைய தீர்மானிக்கப்பட்ட முறையில் பொ.ஆ. சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோருக்கு அத்தகைய ஊதியத்தை செலுத்தலாம்.

*பொருளாதார ஆணைக் குழுவின் முத்திரை*

**25.** (1) பொருளாதார ஆணைக்குழுவின் முத்திரையை பொ.ஆ. சபையினால் தீர்மானிக்கலாம்.

(2) பொருளாதார ஆணைக்குழுவின் முத்திரையானது பின்வருமாறு -

(அ) பொருளாதார ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் பட்டதன் படி அத்தகைய முறையில் மாற்றலாம்;

(ஆ) பொருளாதார ஆணைக்குழு அவ்வப்பொழுது தீர்மானிக்கின்றதன் படி அத்தகைய ஆள் அல்லது ஆட்களின் பாதுகாப்பில் வைத்திருக்கலாம்.

(3) பொ.ஆ. சபையின் அனுமதி மற்றும் தவிசாளர் மற்றும் பொ.ஆ. சபையின் மற்றுமொரு உறுப்பினர் பிரசன்னத்தை தவிர ஏதேனும் கருவிகள் அல்லது ஆவணத்துடன் பொருளாதார ஆணைக்குழுவின்

முத்திரை பொருத்தப்படக் கூடாது. அத்தோடு தமது பிரசன்னம் பற்றி கருவியில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிட வேண்டும்:

ஆயின், ஏதேனும் கருவி அல்லது ஆவணத்தில் பொருளாதார ஆணைக்குழுவின் முத்திரை பதிக்கப்படுகின்ற தருணத்தில் தவிசாளரினால் சமூகமளிக்க முடியாதவிடத்து தவிசாளரினால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட பொ.ஆ. சபையின் வேறு எவரேனும் உறுப்பினர் அதன் சார்பாக அத்தகைய கருவியில் அல்லது ஆவணத்தில் இதன் உட்பிரிவின் முந்தைய ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பமிடுவதற்கு தகைமை படைத்தவராவார்.

(4) கருவிகள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான பதிவுப் புத்தகம் ஒன்றை பொ.ஆ. சபை பேணுதல் வேண்டும். இதில் பொருளாதார ஆணைக்குழுவின் முத்திரை பதிக்கப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் V

## பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் பணியாட்டொகுதியினர்

பணிப்பாளர் தலைமையதிபதி

**26.** (1) பொ.ஆ. சபையின் விதப்புரையின் படி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி (இதன் பின்னர், ‘‘பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதி’’ என அழைக்கப்படுவார்) இருத்தல் வேண்டும். இவரே பொருளாதார ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும், கணக்கீட்டு அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதி பொ.ஆ. சபையின் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகள் மற்றும் கட்டுப்பாட்டின் பிரகாரம் பின்வருமாறு இருத்தல் –

(அ) நிருவாகம் மற்றும் பணியாட்டொகுதியினரை கட்டுப்படுத்தல் உள்ளடங்கலாக பொருளாதார ஆணைக் குழுவின் அலுவல்களை நிருவாகம் செய்வதற்கு பொறுப்பாக இருத்தல்;

(ஆ) பொ.ஆ. சபையின் சகல தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக இருத்தல்;

(இ) பொ.ஆ. சபையினால் அவருக்கு வழங்கப்பட்டதன் படி அத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

(3) சபையின் ஏதேனும் கூட்டங்களில் பங்குபற்றி உரையாற்றுவதற்கான அருகதை பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதிக்கு இருத்தல் வேண்டும், ஆயின் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கான உரித்து அவருக்கு இல்லை.

(4) பொ.ஆ. சபையானது இப்பாகத்தின் கீழ் அத்தகைய அதனது தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை தீர்மானிக்கின்ற வாறு பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதி, பொருளாதார ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலர் மற்றும் பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதி, பொருளாதார ஆணைக்குழுவின் அலுவலர் ஆகியோருக்கு கையளிக்கலாம். இவர்கள் பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்புரை மற்றும் மேற்பார்வை ஆகியவற்றின் பிரகாரம் அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பயன்படுத்துதல், செயலாற்றுதல், நிறைவேற்றுதல் ஆகியவற்றை செய்யலாம்.

(5) பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி பொ.ஆ. சபையின் ஒப்புதலுடன், பொருளாதார ஆணைக்குழுவின் ஏதேனும் நிருவாகப் பிரிவு அல்லது அலுவலகம் அல்லது ஊழியரை எழுத்து மூலமாக கையளிக்கலாம், அவ்வப்போது அவசியமானது என பரிசீலிக்கின்ற பொருளாதார ஆணைக்குழு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை கையளிப்பதுடன் அத்தகைய நிருவாகப் பிரிவு அல்லது அலுவலகம் அல்லது ஊழியர் யாருக்கு அத்தகைய தத்துவங்கள், கடமைகள், பணிகள் கையளிக்கப்பட்டதோ அவர் அதற்கு பொறுப்பாக இருப்பதுடன், பொ.ஆ. சபை அல்லது பொருளாதார ஆணைக்குழு பணிப்பாளர் தலைமையதிபதி ஆகியோரது பணிப்புரை மற்றும் மேற்பார்வையின் பிரகாரம் அவற்றை பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் மற்றும் புரியலாம்.

(6) இப்பாகத்தின் கீழ் தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றுதல், நிறைவேற்றல் ஆகியவற்றுக்கு பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி பொறுப்பாக இருப்பதுடன் பொ.ஆ. சபைக்கு பதிலளிக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

(7) பொ.ஆ. சபையின் கலந்தாராய்வுடன் (8) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொருளாதார ஆணைக்குழு பணிப்பாளர் தலைமையதிபதியை பதவியிலிருந்து அமைச்சர் நீக்கலாம் -

(அ) தனது கடமைகளை செயலாற்றுவதற்கு நிரந்தரமாக ஆற்றலற்றவராக வருகின்ற பொழுது;

(ஆ) பொ.ஆ. சபையின் கருத்துப் படி ஏதேனும் மோசடியான அல்லது சட்டவிரோதமான பண்புடைய அல்லது பொருளாதார ஆணைக்குழுவின் நலன்களுக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளை அவர் மேற் கொண்ட பொழுது; அல்லது

(இ) சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைகளுக்கு இணங்க தவறும் பட்சத்தில்.

(8) (7) ஆம் உட்பிரிவின் கீழ் அகற்றுவதற்கு முன்னர், அவர் பதவியிலிருந்து ஏன் விலக்கப்படக் கூடாது என்பதற்கான காரணிகளை தெரிவிக்கும் படி எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றை பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி வழங்குதல் வேண்டும் மற்றும் அவருக்கு எதிரான குற்றச் சாட்டுகளுக்கு எதிராக கருத்துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

(9) இறப்பு, (7) ஆம் உட்பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றுதல் அல்லது அப்பதவியை வகிப்பவர் அமைச்சருக்கு முகவரியிட்டு பதவிவிலகல் கடிதத்தை சமர்ப்பித்தல் ஆகியவற்றின் படி பொருளாதார ஆணைக்குழு பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவி வெற்றிடமாகின்றது.

(10) பொருளாதார ஆணைக்குழு பணிப்பாளர் தலைமையதிபதி பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுகின்ற பொழுது, அமைச்சரானவர், பொ.ஆ. சபையின் கலந்தாராய்வுடன், (7) ஆம் உட்பிரிவின் கீழ் நியமனம் ஒன்று மேற்கொள்ளப்படும் வரை பொருளாதார ஆணைக்குழு பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றுதல், நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்காக சபையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

(11) அமைச்சரின் கலந்தாராய்வுடன் பொ.ஆ. சபையின் தீர்மானத்தின் பிரகாரம் அத்தகைய ஊதியத்தை பொருளாதார ஆணைக்குழு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்க முடியும்.

பொருளாதார ஆணைக் குழுவின் பணியாட் டொகுதியினர்

**27.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் தனது கடமைகள் மற்றும் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்காக அதனது கடமைகளை வினைத்திறன்மிக்க முறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமானது என பரிசீலிக்கின்ற பதவிநிலைகளை உருவாக்கி அலுவலர்களையும் ஊழியர்களையும் பொருளாதார ஆணைக்குழுவினால் வேலைக்கு அமர்த்தலாம்.

(2) பொ.ஆ. சபையானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம் -

(அ) அத்தகைய ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் தொடர்பான வேலைக்கான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல்

(ஆ) நிதி விடயம் வழங்கப்பட்ட அமைச்சரின் கலந்தாராய்வுடன் அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்தல்

(இ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளை பிரயோகித்தல்;

(ஈ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஏற்புடைய ஒழுக்காற்றுக் கோவையொன்றை நடைமுறைப்படுத்தல்.

(3) (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சகல விதமான அல்லது ஏதேனும் விடயம் தொடர்பான விதிகளை பொ.ஆ. சபை உருவாக்கலாம்.

(4) முதலீடு, வியாபாரம், ஏனைய தொடர்புடைய விடயங்கள் ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப ஆளணியினரை பயிற்சிகளை மேம்படுத்தி அதற்கான அனுசரணைகளை பொருளாதார ஆணைக்குழு மேற்கொள்ளலாம். இந்த நோக்கத்திற்காக அத்தகைய அலுவலர்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் செலவுகளை செலுத்துவதற்கான அங்கீகாரத்தை பொருளாதார ஆணைக்குழுவிற்கு வழங்குதல் வேண்டும்.

(5) பின்வரும் சந்தர்ப்பங்களில் பொருளாதார ஆணைக் குழுவானது பொருளாதார ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு அத்தகைய எந்த ஆளையும் நியமித்தல் கூடாது, அத்தகைய ஆள் -

(அ) சிவில் நீதிமன்றம் அல்லது நியாய சபையினால் குற்றமொன்றிற்காக அல்லது கடும் மோசமான நடத்தைக்காக ஏற்கனவே குற்றவாளியாக காணப்படும் பட்சத்தில் அல்லது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஒழுங்குபடுத்தினரினால் ஒழுங்கு படுத்தல், நன்னடத்தை கோவை அல்லது ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாகியிருத்தல்; அல்லது

(ஆ) இப்பாகம் அல்லது ஒழுங்குவிதிகள் அல்லது விதிகள் அல்லது அதனோடு மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகள் ஆகியவற்றை அல்லது அவற்றின் ஏற்பாடுகளை மீறியிருத்தல்.

*அரசாங்க அலுவலர்களை பொருளாதார ஆணைக்குழு பணியாட் டொகுதிக்கு நியமித்தல்*

**28.** (1) பொருளாதார ஆணைக்குழுவின் கோரிக்கையின் படி அரசாங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அலுவலர் மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் சம்மதத்துடன் தற்காலிகமாக பொருளாதார ஆணைக்குழுவின் பணியாட் டொகுதிக்கு நியமிக்கப்படலாம். அத்தகைய காலப்பகுதியானது பொருளாதார ஆணைக்குழுவினால் தீர்மானிக்கலாம் அல்லது அத்தகைய பணியாளரின் சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப் படலாம்.

(2) அரசாங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் தற்காலிகமாக பொருளாதார ஆணைக்குழுவின் பணியாட் டொகுதிக்கு நியமிக்கப்படுகின்ற பொழுது, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளானது அத்தகைய அலுவலர் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(3) அரசாங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிரந்தரமாக பொருளாதார ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுகின்ற பொழுது, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளானது அத்தகைய அலுவலர் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(4) அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்ட நபரை பொருளாதார ஆணைக்குழு வேலைக்கு அமர்த்துகின்ற பொழுது குறிப்பிட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்கு சேவை யாற்றுவதற்கு அவர் இணங்குகின்ற பொழுது, அந்த ஆள் எவ்வளவு காலம் பொருளாதார ஆணைக்குழுவில் பணியாற்றுகின்றாரோ, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுகின்ற நோக்கத்திற்காக அந்த ஆள் அரசாங்கத்திற்கு சேவையாற்றியவராக கருதப்படுவார்.

## அத்தியாயம் VI

## நிதி

பொருளாதார ஆணைக் குழுவின் நிதி முகாமைத்துவம்

**29.** (1) பொருளாதார ஆணைக்குழுவின் நிதி முகாமைத்துவம் மற்றும் இப்பாகத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்ட பொ.ஆ. நிதியத்தின் உரிய தொழிற்பாடு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றிற்கு பொ.ஆ. சபை பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

பொருளாதார ஆணைக் குழுவின் நிதியம்

**30.** (1) பொருளாதார ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தை கொண்டிருத்தல் வேண்டும். (இதன் பின்னர் "பொ.ஆ. நிதியம்" என அழைக்கப்படும்).

(2) பொ.ஆ. நிதியத்திற்கு பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) பொருளாதார ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்காக பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடிய அத்தகைய சகல பணம்;

(ஆ) இப்பாகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நேரடியாகவோ அல்லது நிறுவனங்கள் மூலமாகவோ அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றுகை செய்தல், நிறைவேற்றல் மூலமாக பொருளாதார ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்ற அத்தகைய சகல விதமான பணம்;

(இ) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் கட்டணங்களாக செலுத்தப்பட்ட அத்தகைய சகல விதமான பணம் அத்துடன்;

(ஈ) 13 ஆம் பிரிவின் (ங) பந்தியின் கீழ் பொருளாதார ஆணைக்குழுவினால் தர்மானிக்கப்பட்டவாறு III ஆம் பாகத்தின் கீழ் ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்காக இலங்கை வலயங்களினால் அறவிடப்பட்ட கட்டணங்களின் பத்து சதவீதம்.

(3) இப்பாகத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் தனது தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றல், நிறைவேற்றல் தொடர்பில் பொருளாதார ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட செலவுகளை கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவையான சகல பணத்தையும் பொ.ஆ. நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) பொ.ஆ. நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை பொ.ஆ. சபையினால் தீர்மானிக்கப்பட்டதன் படி அத்தகைய முறையில் பொருளாதார ஆணைக்குழுவானது முதலீடு செய்யலாம்.

**பொருளாதார ஆணைக் குழுவின் நிதியாண்டும், கணக்குகளின் கணக்காய்வும்**

**31.** (1) பொருளாதார ஆணைக்குழுவின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பொருளாதார ஆணைக்குழுவின் வருமானமும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புகளும் மற்றும் அதன் வேறெல்லா நிதிசார் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனை பொருளாதார ஆணைக்குழு செய்வித்தல் வேண்டும்.

(3) அரசாங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதுடன் தொடர்புடைய அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பொருளாதார ஆணைக்குழுவின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கும் ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(4) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் கூற்றுகளை கணக்காய்வாளரின் அறிக்கையுடன் சேர்த்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சருக்கு பொ.ஆ. சபை சமர்ப்பித்தல் வேண்டும்.

## அத்தியாயம் VII

## முதலீடு மற்றும் ஏற்றுமதிகள் தொடர்பான தேசிய கொள்கைகள்

**முதலீடு, சர்வதேச வியாபாரம் மற்றும் ஏற்றுமதிகள் தொடர்பான தேசிய கொள்கைகள்**

**32.** (1) 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டதன் படி பொருளாதார நிலைமாற்றம் தொடர்பான தேசிய கொள்கையை மெய்யாக்குவதற்கு இயலுமையாக்குவதற்காக முதலீடு, சர்வதேச வியாபாரம், முதலீட்டு வலயங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை பொருளாதார ஆணைக்குழு உருவாக்கி அமைச்சரவைக்கு விதப்புரை செய்து அதனை சனாதிபதி மற்றும் அமைச்சருக்கு முன்னிலைப்படுத்தல் வேண்டும்.

(2) அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அமைச்சர் அதனை வர்த்தமானியில் பிரசுரிப்பதுடன் ஒப்புதலுக்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் பாராளுமன்றத்தின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதன் பின்னர், அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய கொள்கையானது முதலீடு, சர்வதேச வியாபாரம், முதலீட்டு கொள்கைகள் தொடர்பான தேசிய கொள்கைகளாக இருத்தல் வேண்டும்.

(4) முதலீடு, சர்வதேச வியாபாரம், சர்வதேச வலயங்கள் தொடர்பான தேசிய கொள்கைக்கு இணங்குவது பொருளாதார ஆணைக்குழு, ஏனைய சம்பந்தப்பட்ட, நியாயாதிக்க அமைப்புகள், மாகாண சபைகள், மாகாண அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் வேறு ஏதேனும் உள்ளூராட்சி அதிகார அமைப்பகளின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(5) முதலீடு, சர்வதேச வியாபாரம், முதலீட்டு வலயங்கள் தொடர்பான தேசிய கொள்கையை உருவாக்குவது முதலீடு மற்றும் சர்வதேச வியாபாரத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் கணிசமான பொறுப்புகளையுடைய ஏனைய நிறுவனங்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டு ஒருங்கிணைப்புகளை பொருளாதார ஆணைக்குழு உறுதி செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் VIII

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான தகைமைகள்

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான தகைமைகள் மற்றும் தடைகள் மற்றும் மட்டுப்பாடுகள்

**33.** (1) (அ), (1) (இ) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், வெளிநாட்டு முதலீடுகளானது சகல துறைகள் மற்றும் இலங்கையின் பிராந்தியங்கள் ஆகியவற்றிற்கு அனுமதிக்கப்படும். இப்பாகத்தின் ஏற்பாடுகள் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் வேறு விதமாக தீர்மானிக்கப்பட்டால் அன்றி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நூறு சதவீத பங்குகளை அத்தகைய துறைகள் மற்றும் பிராந்தியங்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் சொந்தமாக கொண்டிருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் புதிய முதலீடு உள்ளடங்கலாக இலங்கை சட்டங்களினால் அங்கீகரிக்கப்பட்டதன்

பிரகாரம் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்படலாம்.

(இ) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தடை செய்யப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட விடயங்கள் பற்றி இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் விதிக்கப்படலாம். இது பற்றிய எதிர்மறையான பட்டியலானது துறைகள் மற்றும் கைத்தொழிற்துறைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(2) தேசிய பாதுகாப்பு, பொது அவசரகால நிலைமை, பொதுமக்கள் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு அவசியமானது என கருதும் பட்சத்தில் இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொடர்பான புதிய உள்வருகை தேவைப்பாடுகள் அல்லது மட்டுப்பாடுகளை இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளவற்றுக்கு முரணாக ஏதேனும் எவ்வாறு இருந்த பொழுதிலும் அமைச்சரவை யின் ஒப்புதலுடன் அவற்றை அமைச்சர் அறிமுகம் செய்யலாம்.

வெளிநாட்டு முதலீடுகளை பதிவு செய்தல்

**34.** (1) 33 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறு இருந்த பொழுதிலும் கூட, இப்பாகத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் முதலீடுகளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புகளை இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பெற்றுக் கொள்வதற்கான தகுதியை பெறுவதற்கு பொருளாதார ஆணைக்குழுவிடம் தமது வெளிநாட்டு முதலீடுகளை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பதிவு செய்தல் வேண்டும்.

(2) சந்தேகத்தை தவிர்க்கும் முகமாக, இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தினால் விதிக்கப்பட்ட வேறு ஏதேனும் தேவைப்பாடுகள் அல்லது நிபந்தனைகளுக்கு பணிதல் அல்லது இணங்குதலிலிருந்து அதன் கீழ் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அல்லது வெளிநாட்டு முதலீகள் ஆகியவற்றிற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்தலிருந்து விலக்களிக்கப்படவில்லை.

(3) உள்நாட்டு முதலீட்டாளர்கள் இப்பாகத்தின் கீழ் மற்றும் அதன் நடைமுறைப்படுத்தல் ஒழுங்குவிதிகளின் கீழ் இலகுபடுத்தல் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு தமது முதலீடுகள் தொடர்பில் பொருளாதார ஆணைக்குழுவில் தம்மை பதிவு செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## அத்தியாயம் IX

## முதலீட்டு உத்தரவாதங்கள்

இப்பாகத்தின் ஏற்பாடுகள் மற்றும் இருபுடை மற்றும் பல்புடை முதலீட்டு உடன்பாட்டு ஒப்பந்தம் முதலியவற்றுக்கு ஏற்புடையன வாகாது

**35.** இப்பாகத்தின் ஏற்பாடுகள், ஏதேனும் இறைமையுடைய அரசுடன் இலங்கையினால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் இருபுடை மற்றும் பல்புடை முதலீட்டு உடன்பாட்டு ஒப்பந்தங்களுக்கு அல்லது ஏதேனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் முதலீட்டு அத்தியாயங்களுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

முதலீட்டு உத்தரவாதங்கள்

**36.** (1) இலங்கையில் தாபிக்கப்பட்ட சகல முதலீடுகளும் நேர்மையான நியாயமான நடத்துதல்களை பெற்றுக் கொள்ளும். அத்தோடு முழுமையான பாதுகாப்பு மற்றும் நுண்ணாய்வுகளை அனுபவிக்க முடியும்.

(2) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக-

''நீதியாக நேர்மையாக நடாத்துதல்'' என்பது, இலங்கையின் சட்டங்கள் மற்றும் உரிய செயன் முறைகள் ஆகியவற்றின் பிரகாரம் ஏதேனும் குற்றவியல், குடியியல், நிருவாக நடவடிக்கைகளில் நீதியை மறுக்காமல் இருப்பதற்கான கடப்பாடு எனப் பொருள்படும்; மற்றும்

“முழுமையான பாதுகாப்பு மற்றும் நுண்ணாய்வு” என்பது இலங்கையின் சட்டங்களின் கீழ் தேவைப்படுத்தப் பட்ட முதலீடுகளுக்கான பௌதீக ரிதியான பாதுகாப்பு ஏற்பாடு என பொருள்படும்.

பெறுதல், விரிவாக்கம், முகாமைத்துவம், நடத்துதல்

**37.** (1) (அ) பெறுதல், விரிவாக்கம், முகாமைத்துவம், நடத்துதல், தொழிற்படுதல், விற்பனை அல்லது முதலீடுகள் பற்றிய ஏனைய ஏற்பாடுகள் போன்ற உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட சாதகமான விடயங்களை விட எத்தகைய குறைவான நடத்து

தல்களும் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான வருவாய்கள் ஆகியவற்றுக்கு குறைவாக வழங்கப்பட மாட்டாது.

(ஆ) பாரிய நிச்சயத்தன்மை தொடர்பில் "போன்ற சூழ்நிலைகள்" என்பது ஒவ்வொரு சூழ்நிலைகளையும் தனித்தனியாக ஆராய்ந்து புறவயத்தன்மை அடிப்படையில் மதிப்பிடப்படும். இவற்றுள் முதலீட்டுத் துறை, முதலீடு செய்யப்படும் இடம், முறைப்பாடு செய்யப்படும் ஏதேனும் செயல் அல்லது நடைமுறை நோக்க ஒழுங்குகள், சம்பந்தப்பட்ட செயல் அல்லது நடவடிக்கை தொடர்பிலான பொதுவாக ஏற்புடைய ஆளுகை அல்லது சட்ட செயன்முறைகள் உள்ளடங்கும். இந்த மதிப்பீடானது ஏதேனும் ஒரு துறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதோ அல்லது பக்கச் சார்புடையதோ அல்ல.

(2) எந்த வடிவத்திலும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பாரபட்சம் காட்டப்படமாட்டாது, இவற்றுள் அவர்களது பிரசா உரிமை, வாழ்விடம், மதம், பதிவு செய்த இடம், முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட மூல நாடு ஆகியன உள்ளடங்கிய பொழுதிலும் இவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

(3) இலங்கையானது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவற்றுக்கு மேற்படி (1) ஆம் மற்றும் (2) உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை வழங்குவதற்கான கடப்பாடு உள்ளது என பொருள் கோடக் கூடாது. ஏதேனும் நடத்தை, முன்னுரிமைகள், சிறப்புரிமைகளின் விளைவாக கிடைக்கின்ற நன்மைகள் பின்வருமாறு அமையும்–

(அ) தற்போது காணப்படுகின்ற அல்லது எதிர்கால பழக்க வழக்கங்கள், பொருளாதார அல்லது பணம் சார்ந்த சங்கம், சுதந்திர வியாபார பிரதேசம் அல்லது இலங்கை தற்பொழுது தரப்பாக இருக்கின்ற அல்லது ஒத்த சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது

(ஆ) முழுமையாக அல்லது பகுதியாக வரி விதித்தலுடன் தொடர்புடைய ஏதேனும் சர்வதேச உடன்படிக்கை

அல்லது ஏற்பாடு அல்லது ஏதேனும் உள்நாட்டு ஒழுங்குவிதி அல்லது

(இ) நடைமுறையில் வலுவிலுள்ள ஏதேனும் இரு தரப்பு உடன்படிக்கை அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் இரு தரப்பு உடன்படிக்கை அல்லது

(ஈ) இலங்கையின் சட்டங்களின் பிரகாரம் உள்நாட்டவர்களுக்கு மாத்திரம் முழுமையாக ஒதுக்கப்பட்ட ஏதேனும் துறைகள் அல்லது சேவைகள்.

வெளிநாட்டு முதலீட்டிடுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் தடையின்றி மாற்றப்படுதல்

**38.** (1) வெளிநாட்டு முதலீட்டுடன் தொடர்புடைய சகல கொடுப்பனவுகளும் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம், தாமதமின்றி, தடையற்ற முறையில் நாணயமாக இலங்கைக்குள்ளேயும், இலங்கைக்கு வெளியேயும் மாற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும். அத்தகைய மாற்றங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். குறிப்பாக:-

(அ) முதலீட்டை அதிகரிக்கக்கூடிய அல்லது பேணக் கூடிய ஆரம்ப மூலதனம் மற்றும் மேலதிக தொகைகள்;

(ஆ) மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு வருவாய்கள்;

(இ) கடன் உடன்படிக்கை, உரிமைத் தொகை வருமானம், கட்டணங்கள் தொடர்பான மீள் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் கொடுப்பனவுகள்;

(ஈ) விற்பனையால் கிடைக்கும் இலாபம் அல்லது முதலீடு ஒன்றின் எல்லாப் பகுதிகளையும் அல்லது ஏதேனும் பகுதியை கலைத்தல்;

(உ) 39 ஆம் பிரிவின் கீழ் நட்டஈடு கொடுப்பனவுகள்;

(ஊ) முதலீட்டு பிணக்கு தீர்வொன்றினால் ஏற்படுகின்ற கொடுப்பனவுகள்;

(எ) முதலீட்டுடன் தொடர்புடைய வெளிநாட்டில் ஈடுபட்டுள்ள ஆளணியினருக்கான சம்பாத்தியங்கள் மற்றும் ஏனைய ஊதியங்கள்.

(2) (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட மாற்றங்களானது ஏதேனும் கொடுப்பனவுகள், நிலுவைகள், கட்டணங்கள், விதிப்புகள், மற்றும் அத்தகைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நிலுவையில் உள்ள வேறு ஏதேனும் ஒத்த கடப்பாடுகள். இந்த பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகையானது இங்கு குறித்துரைக்கப்பட்ட நிதி ரிதியான கடப்பாடுகளின் படி கழித்ததன் பின்னரான எஞ்சிய தொகையாகும்.

(3) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக மாற்றம் நடைபெறுகின்ற திகதியில் இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட பணப் பரிமாற்ற சந்தை விகிதமானது ஏற்புடையதாக இருத்தல் வேண்டும் மற்றும் வெளிநாட்டு நாணய மாற்று தொடர்பான சந்தை இல்லாத சந்தர்ப்பங்களில் மிக அண்மையில் பயன்படுத்தப்பட்ட விகிதமானது விசேட ஈர்ப்பு உரிமைகளின் கீழ் மாற்றங்களுக்கான விலை வீதமாக பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) முந்திய எவற்றிற்கும் பங்கம் ஏற்படாமல் இலங்கைக்கு வெளியே நிதி மாற்றத்தை தற்காலிகமாக மட்டுப்படுத்தப்படுகின்ற நியாயமான, பாரபட்சம் காட்டாத, நன்நோக்கு செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியன இந்த பிரிவை மீறியன என பொருள் கோடப்படக் கூடாது. குறிப்பாக பின்வரும் நிகழ்வுகள் ஏற்படும் பட்சத்தில்–

(அ) கடும் சென்மதி நிலுவை சார் சிரமங்கள்;

(ஆ) மூலதனத்தை நகர்த்துவதானது பேரினப் பொருளியல் முகாமைத்துவத்திற்கு கடும் சிரமங்களை ஏற்படுத்துதல்;

(இ) வங்குரோத்து, கடனிருக்க வகையற்றமை அல்லது கடன் கொடுத்தோரின் உரிமைகளை பாதுகாத்தல்;

(ஈ) பிணைகளை வழங்குதல், வியாபாரம் செய்தல் அல்லது கையாளுதல்;

(உ) குற்றவியல் மற்றும் தண்டனைச் சட்டக் கோவை குற்றங்கள் மற்றும் குற்றத் தொகைகளை அறவிடல் அல்லது

(ஊ) தீர்ப்பளித்தல் நடவடிக்கைகளின் பொழுது தீர்ப்புகளின் திருப்தியை உறுதிப்படுத்தல

(5) (4) ஆம் உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் மாற்றத்துடன் தொடர்புடைய மட்டுப்பாட்டு காலப்பகுதியானது சென்மதி நிலுவை நிலைமைகளை சீர் செய்வதற்கு அவசியமான காலப்பகுதிக்கு மாத்திரம் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

**39.** (1) பொதுநலன் மற்றும் சர்வதேச சட்டத்தின் பொது கொள்கைகள் ஆகியவற்றை தவிர எந்த முதலீடும் பறிக்கப்படவோ தேசிய மயப்படுத்தப்படவோ கூடாது, தேசிய மயப்படுத்தல் அல்லது பறித்தலுக்கு நிகரான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படக் கூடாது (இதனகத்து, “பறித்தல்” என அழைக்கப்படும்)- பறித்தல்

(அ) பாரபட்சம் காட்டாமை அடிப்படை;

(ஆ) விகிதாசார கோட்பாட்டில்

(இ) உரிய சட்ட செயன்முறை மூலம்; மற்றும்

(ஈ) போதியளவு மற்றும் வினைத்திறன்மிக்க நட்டஈட்டு துரித கொடுப்பனவுடன் சேர்த்து

(2) பறித்தலை பொறுத்தவரையில் –

(அ) பறித்தல் திகதிக்கு முன்னரான திகதியில் பறிக்கப்பட்ட முதலீட்டின் நேர்மையான சந்தை பெறுமதி தொகை நட்டஈட்டுத் தொகையாக இருத்தல் அல்லது பறித்தல் நடைபெறவிருக்கின்ற பொழுது அல்லது பகிரங்கமாக அறியப்படுகின்ற பொழுது எது முன்னதாக நடக்கின்றதோ, எதிர்பார்க்கப்பட்ட பறித்தலானது பகிரங்கமாக முன்கூட்டியே அறியப்பட்டதன்

காரணமாக பெறுமதியில் ஏற்படுகின்ற எத்தகைய மாற்றமும் பிரதிபலிக்கப்படக் கூடாது. பெறுமதியிடல் நடவடிக்கையானது உணரக் கூடிய சொத்துக்களின் பிரகடனப்படுத்தப்பட்ட வரி பெறுமதி, நேர்மையான சந்தை பெறுமதியை தீர்மானிக்கக்கூடிய, பொருத்த மான ஏனைய நெறிமுறைகள்;

(ஆ) சந்தைப் பெறுமதி உறுதிப்படுத்தப்பட முடியாத சந்தர்ப்பங்களில், முதலீடு செய்யப்பட்ட மூலதனம், முதலீட்டின் தன்மை, காலப்பகுதி, பிரதியீடு மற்றும் புத்தகப் பெறுமதி, மதிப்பீடு பற்றிய சர்வதேச தராதரத்தின் படி நேர்மையான சந்தைப் பெறுமதி போன்ற சகல காரணிகள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு நட்டஈடு தீர்மானிக் கப்படுதல் வேண்டும்

(இ) நட்டஈடு தாமதமின்றி, வினைத்திறன்மிக்க முறையில் உணரக் கூடிய விதத்தில், தடையின்றி மாற்றக் கூடிய விதத்தில் வழங்கப்படுதல் வேண்டும். பறித்தல் நடைபெற்ற திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டும். நட்டஈடு செலுத்தப்படும் வரை, முதலீடானது தொடர்ச்சியாக தொழிற்படலாம்.

(3) பறித்தலினால் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர் ஒருவர் தனது விடயத்தை உடனடியாக மீளாய்வு செய்வதற்கான உரிமை யுடையவர். இவற்றுள் தனது முதலீட்டை மதிப்பிடல், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நட்டஈட்டு கொடுப்பனவுகள் தொடர்பில் தீர்மானம் ஒன்றினால் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர் நேரடியாக இலங்கை உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

(4) நடவடிக்கைகளின் தாக்கம் அல்லது தொடர் நடவடிக்கை களின் தாக்கமானது அதன் நோக்கத்தை விட மிக அதிகம் என வெளிப்படையாக தோன்றுகின்ற சூழ்நிலைகளை தவிர, சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றாடல் போன்ற சட்ட ரீதியான பொதுமக்கள் நலன் குறிக்கோள்களை பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டு

பிரயோகிக்கப்படுகின்ற ஏதேனும் பக்கச்சார்பற்ற நடைமுறைகள் போன்றன பறித்தல் அல்லது தேசிய மயப்படுத்தலை கொண்டிருத்தல் கூடாது.

(5) (450 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் பறித்தல் விடயத்தில், நட்டஈட்டுக் கொடுப்பனவு அச்சட்டங் களுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

முன் தாபித்தல் உரிமைகள்

**40.** சந்தேகத்தை தவிர்க்கும் முகமாக, 36, 37, 38, 39 ஆம் பிரிவுகளின் எந்த ஏற்பாடும் எவரேனும் வெளிநாட்டு முதலீட்டாளர் அல்லது முதலீட்டிற்கு முன் தாபித்தல் உரிமைகளை வழங்கியதாக கருதப்படக் கூடாது.

வெளிநாட்டு முதலீட்டாளர் களுக்கான கடப்பாடுகள்

**41.** (1) அத்தகைய முதலீடுகளை தாபித்தல், பெற்றுக் கொள்ளல், முகாமைத்துவம், தொழிற்பாடு, விற்றல், தொடர்பில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களது முதலீடுகள் ஆகியன இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நிருவாக வழிகாட்டிகள், கொள்கைகள் ஆகியவற்றிற்கு இணங்குதல் வேண்டும்.

(2) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களது முதலீடுகள் ஆகியன முதலீடுகள் தாபிக்கப்படுவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ, முதலீட்டிற்கு பொறுப்பான அலுவலர், முதலீடு தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் உடைய வேறு எவரேனும் ஆள் அல்லது அரசாங்க அலுவலர், முதலீடுகளுக்கு பொறுப்பான அலுவலர் ஆகியோருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த விதத்திலும் பரிசுகள், வாக்குறுதி, வேறு ஏதேனும் தகாத முறையிலான பணம் சார்ந்த நன்மைகள், நன்கொடைகள், அல்லது ஊக்குவிப்புகளை வழங்குதல், ஏதேனும் உத்தியோகபூர்வ பணிகளை மேற்கொள்வதற்காக அல்லது செய்யாமல் இருப்பதற்கான பரிசுகளை வழங்குதல் அல்லது ஏனைய முறையற்ற சாதகத் தன்மைகளை பெற்றுக் கொள்ளுதல் அல்லது பேணுதல், அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தூண்டுதல், உதவுதல், சதித் திட்டமிடல் ஆகியவற்றை மேற்கொள்ளக் கூடாது.

(3) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களது முதலீடுகள் ஆகியன ஏற்புடையதாக இருக்கின்ற வகையில் சட்டங்களுக்க இணங்குதல் வேண்டும், தமது வரி சார்ந்த பொறுப்புகளை உரிய நேரத்தில் செலுத்துவது உள்ளடங்கலாக வரிகளையும் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

(4) முதலீடு அல்லது புள்ளிவிபரம் சார் நோக்கங்களுக்காக தீர்மானம் மேற்கொள்ளல் நோக்கங்களுக்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அத்தகைய தகவல்கள் கோரப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அவற்றை வழங்குதல் வேண்டும்.

(5) தமது நடைமுறைகள் மற்றும் உள்ளக கொள்கைகள் ஆகியவற்றை கூட்டுறவு சமூகங்கள் பற்றிய சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தராதரங்களை கூட்டிணைப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களது முதலீடுகள் ஆகியன தாமாகவே முன் வந்து முயற்சித்தல் வேண்டும். இத்தகைய கோட்பாடுகளானது தொழில், சுற்றாடல், மனித உரிமைகள், சமூக உறவுகள், துஷ்பிரயோகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ஆகியன தொடர்பில் செயற்பட வேண்டும்.

## அத்தியாயம் X

## வெளிப்படைத் தன்மை மற்றும் பிணக்கு தீர்த்தல்

**42.** (1) (அ) முதலீட்டாளர்கள் அத்தகைய தகவல்களையும் விடயங்களையும் இலகுவாக அணுகிப் பெற்றுக் கொள்வதற்காக தனியான இணையத்தளம் ஒன்றில் அனைத்து சட்டங்கள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள், விதிகள், மற்றும் சட்ட ரீதியாக அனுமதிக்கும் பட்சத்தில், தீர்ப்புகள் மற்றும் ஏனைய நிருவாக ரீதியான விதிகள் ஆகியவற்றை வெளியிடுவதற்கான முயற்சிகளை பொருளாதார ஆணைக்குழு மேற்கொள்ளல் வேண்டும். வெளிப்படைத் தன்மை

(ஆ) சாத்தியமானவிடத்து, பொருளாதார ஆணைக்குழு முதலீட்டாளர்களாக அவர்களுடன் கலந்தாலோசிக்கலாம் என்பது டன் அவர்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற முன்மொழிவு செய்யப்படும் ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புகளை மற்றும் கட்டளைகள் மீது பிரதிநிதித்துவம் செய்வதற்கு சந்தர்ப்பமொன்றை முதலீட்டாளர்களுக்கு ஏற்பாடும் செய்யலாம்.

(2) ஏதேனும் முதலீட்டாளர் அல்லது முதலீட்டு எதிராக ஏதேனும் நிருவாக ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் எவரேனும் பிரசைக்கு வழங்கப்பட்ட சகல விதமான உரிமைகள், செயன்முறைகள், உரிய செயன்முறைகள் போன்றன அத்தகைய செயன்முறைகள் தொடர்பான சட்டத்தின் கீழ் முதலீட்டாளருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் அரசிற்கு இடையிலான பிணக்குகளை தடுத்தல்

**43.** (1) பொருளாதார ஆணைக்குழுவானது தானாகவோ அல்லது தனது முகவர்கள் மூலமாகவோ துன்பம் கலைவதற்கான குழுவொன்றை உருவாக்குதல் வேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளர் மற்றும் அரசிற்கு இடையில் எழுகின்ற (வெளிநாட்டு முதலீட்டுடன் தொடர்புடைய ஏதேனும் பிணக்கு, வித்தியாசம், உடன்பாடின்மை, அல்லது வேறு ஏதேனும் விடயங்கள் கலந்தாலோசனை செயன்முறை மூலம் தீர்ப்பதற்காக தொடர்பு கொள்ளலாம். துன்பம் கலைந்தெறியும் குழுவின் பொறுப்புகள் மற்றும் தத்துவங்களை குறிப்பிடல் உள்ளடங்கலாக இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டங்களின் பொருளாதார ஆணைக்குழு வானது அத்தகைய நோக்கங்களுக்கான ஆக்கஅமைவு மற்றும் செயன்முறைக்கான ஏற்பாடுகள் ஆகியவற்றை உருவாக்குவதற்காக ஏற்பாடுகளை உருவாக்கலாம்.

(2) துன்பம் கலைந்தெறியும் குழி மற்றும் அலுவலர்கள் வெளிநாட்டு முதலீட்டார்களின் துன்பங்களை இணக்கமாகவும் கலந்தாலோசனை முறையொன்றிலும் தீர்வுக்கான அவர்களின் அதிசிறந்த முயற்சிகளைச் செய்தல் வேண்டும்.

(3) துன்பம் கலைந்தெறியும் குழு, அது அவசியமெனக் காண்கின்ற விசாரணைகளுக்கு தெளிவுபடுத்துதல்கள், ஆவணங்கள் மற்றும் மறுமொழிகளை வேண்டுகோள் விடுப்பதற்கு விடயத்திலுள்ள திறத்தவர்கள் மற்றும் தகுதியான நிருவாக அலுவலர்களை தொடர்பு கொள்ளலாமென்பதுடன் அது வேறுபட்ட நிபுணத்துவம் மற்றும் விசேடத்துவம் மீது பொருளாதார ஆணைக்குழுவுக்கு அல்லது வேறு நிருவாக அலுவலர்களுக்கு கிடைக்கச்செய்ய கவனம் செலுத்த லாம்.

பிணக்கு தீர்த்தல்

**44.** (1) இப்பாகத்தின் கீழான முதலீட்டு பிணக்குகள் தரப்பினர்களுக்கிடையிலான கலந்தாலோசனை மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் உடனடியாக சுமுகமாக தீர்க்கப்படுதல் வேண்டும்.

(2) சுமுகமான தீர்வை அடைய முடியாத பொழுது எவரேனும் முதலீட்டாளர் இலங்கையின் சட்டங்களின் கீழ் ஏனைய அனைத்து பரிகார முறைகளையும் பிரயோகிப்பதற்கு உரிமையுடையவர்:

ஆயின், பிணக்கானது, வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருக்கும் அரசிற்கும் இடையிலான ஒன்று தொடர்புபட்டதாகவுள்ளவிடத்து, திறத்தவர்கள் வேளைக்கேற்ப நடுத்தீர்ப்பு மற்றும் நிறுவனம்சார் நடுத்தீர்ப்பு உள்ளடங்கலாக மாற்றீடான பிணக்குத் தீர்வு பொறிமுறையூடாக பிணக்குகளுக்கான தீர்வை நாடுவதற்கு உடன்படலாம்.

(3) ஏதேனும் தீர்த்தளிப்பு வெளிநாட்டு நடுத்தீர்ப்பிலான நியாயசபையொன்றின் மூலம் செய்யப்படுமிடத்து, அத்தகைய தீர்த்தளிப்பு 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நடுத்தீர்ப்புச் சட்டம் உட்பட இலங்கைச் சட்டங்களுக்கிணங்க இலங்கையில் ஏற்றங்கீகரிக்கப்பட்டு வலுவிற்கிட பாலதாக இருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "திறத்தவர்கள்" என்பது, முதலீட்டாளர் மற்றும் முதலீட்டாளர் அவரது முதலீடு தொடர்பில் கையாளுகைகளை கொண்டிருக்கின்ற ஏதேனும் அரசாங்க நிறுவனம் எனப் பொருள்படும்.

## அத்தியாயம் XI

## ஊக்குவிப்புகள்

ஊக்குவிப்புகள் மற்றும் விலக்களித்தல்கள்

**45.** முதலீட்டாளர்களுக்கு அவ்வப்போது அனுமதிப்பதற்காக இப்பாகத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களிலிருந்து ஊக்குவிப்புக்களையும் விதிவிலக்குகளையும் பொருளாதார ஆணைக்குழு விதந்துரைக்கலாம். அத்தகைய ஊக்குவிப்புகளும் விதிவிலக்குகளும் இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அமைச்சர் விதிக்கின்ற பொழுது ஏற்புடையதாகின்றது:

ஆயின், பொதுவாக ஏனைய ஏற்புடைய சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டதன் படி சகல விதமான ஊக்குவிப்புகள் மற்றும் விலக்களித்தல்கள் ஆகியவற்றுக்கு அத்தகைய முதலீட்டாளர்கள் தகுதியுள்ளவராக காணப்படுகின்றனர்.

## அத்தியாயம் XII

## பொருளாதார ஆணைக்குழுவின் விசேட தத்துவங்கள்

ஒப்புதல்களை துரிதப்படுத்துவதற்காக பொருளாதார ஆணைக் குழுவின் விசேட தத்துவங்கள்

**46.** (1) முதலீட்டு ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்த முதலீட்டாளர் ஒருவர் அல்லது பொருளாதார ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட முதலீடு ஒன்று ஆகியவற்றுக்கு ஏதேனும் ஒப்புதல்கள் அதிகாரமளித்தல்கள் அல்லது அனுமதிகள் ஆகியன அமைச்சர்கள், அரசாங்க திணைக்களங்கள், நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், ஒழுங்கமைப்பு அலுவலர்கள் அல்லது அமைச்சரின் விதப்புரையுடன் அமைச்சரவையினால் பெயரிடப்பட்ட அமைப்புகள் மற்றும் இப்பாகத்தின் கீழ் ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்டவைகள் (இதன் பின்னர் ''குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்கள்'' என அழைக்கப்படும்) அத்தகைய ஒப்புதல்கள், அதிகாரமளித்தல்கள் அல்லது அனுமதிகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துவதற்கு பொருளாதார ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(2) (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒப்புதல் அளித்தல், அதிகாரமளித்தல் அல்லது அனுமதி தொடர்பில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பொருளாதார ஆணைக்குழு விசாரணையொன்றை அல்லது கோரிக்கையை மேற்கொள்ளும் பொழுது, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட நிறுவனமானது அத்தகைய விசாரணை அல்லது கோரிக்கை தொடர்பில் சம்மதத்தை தெரிவித்து அல்லது ஆட்சேபனையை தெரிவித்து அத்தகைய விசாரணை மற்றும் அல்லது கோரிக்கை தொடர்பில் அத்தகைய விசாரணை அல்லது கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் பதிலளிப்பதற்கு கடப்பாடுடையது. குறித்துரைக்கப்பட்ட நிறுவனமானது அத்தகைய விசாரணை அல்லது கோரிக்கைக்கு பதிலளிக்க மறுக்கும் பட்சத்தில் அத்தகைய

மறுப்பு அல்லது ஏற்றுக் கொள்ளாமைக்கான காரணத்தை அத்தகைய விசாரணை அல்லது கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள் எழுத்து மூலமாக வழங்குதல் வேண்டும்.

(3) சகல குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களும் பொருளாதார ஆணைக்குழு தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலுமை யாக்குகின்ற வகையிலும் அதன் நோக்கத்தை அடையக் கூடிய விதத்தில் கூட்டிணைந்து செயற்படுவதற்கு தேவைப்படுத் தப்பட்டுள்ளன.

(4) இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் படி அமைச்சர், அத்தகைய கூட்டிணைவுகளுக்கான நடைமுறைகளை விதிக்கலாம், கலந்தாலோசனை செயன்முறை மூலம் பொருளாதார ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட முதலீட்டு கருத்திட்டங்க ளுக்கான ஒப்புதல்களை வழங்குதல் தொடர்பான நிலையியல் தொழிற்பாட்டு செயன்முறைகளின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினால் இணங்குதல் வேண்டும்.

(5) (2) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் விசாரணை அல்லது கோரிக்கை ஒன்றுக்கு பதிலளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் மறுக்கின்ற அல்லது புறக்கணிக்கின்ற பொழுது பொருளாதார ஆணைக்குழு பொருத்தமானது என கருதுகின்ற பட்சத்தில், அதனது சொந்த விதப்புரைகளை குறிப்பிட்டு, அதனது மறுத்தலை அல்லது ஒப்புதலை அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தலாம். நிதி என்ற விடயம் வழங்கப்பட்ட அமைச்சருடன் கலந்தாலோசனைகளை மேற்கொண்டு அமைச்சரானவர் இது தொடர்பான தீர்மானத்தை மேற்கொண்டு அத்தகைய தீர்மானத்தை நடைமுறைப்படுத்து வதற்காக அமைச்சரவைக்கு அறிவித்தல் வேண்டும்.

தகவல்களை கோரு வதற்கான தத்துவம்

**47.** (1) இப்பாகத்தின் கீழ் பொருளாதார ஆணைக்குழுவானது தனது பணிகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புடைய ஏதேனும் விடயங்கள் பற்றி பொருளாதார ஆணைக்குழுவிற்கு அவசியப் படுகின்ற தகவல்கள், விபரங்கள், ஆவணங்கள், விபரங்கள் ஆகியவற்றை வழங்கும் படி ஏதேனும் அரசாங்க முகவர்,

உள்ளூராட்சி அமைப்பு, அமைப்பு, அதிகார அமைப்பு அல்லது ஆள் ஆகியோரை பொருளாதார ஆணைக்குழு அழைக்கலாம். அவ்வாறு கோரப்படும் பட்சத்தில் அத்தகைய தகவல்களை தாமதமின்றி பொருளாதார ஆணைக்குழுவிற்கு வழங்குதல் வேண்டும்.

(2) இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளின் அந்தஸ்தினை ஏதேனும் அரசாங்க நிறுவனம், உள்ளூராட்சி அமைப்பு, அதிகார அமைப்பு அல்லது ஆள் ஆகியவற்றை கண்காணிப்பதற்கும் மற்றும் ஒருங்கிணைப்பதற்குமான தத்துவம் பொருளாதார ஆணைக் குழுவிற்கு இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் XIII

## முதலீட்டு இலங்கையை தாபித்தல்

**48.** (1) பொருளாதார ஆணைக்குழுவானது நிறுவனம் ஒன்றை தாபிக்கலாம். இது "முதலீட்டு இலங்கை" என அழைக்கப்படு வதுடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படும். *முதலீட்டு இலங்கையை தாபித்தல்*

(2) முதலீட்டு இலங்கையானது பணிப்பாளர்கள் சபையினால் ஆளுகை செய்யப்படும் (இதன் பின்னர் முதலீட்டு இலங்கை சபை என அழைக்கப்படும்). இது திறைசேரி திணைக்களத்தின் செய லாளரின் கலந்தாலோசனையுடன் பொருளாதார ஆணைக்குழு வினால் நியமிக்கப்படும் மூன்றிற்கு குறையாத ஐந்திற்கு அதிகமாகாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

(3) முதலீட்டு இலங்கை சபை உறுப்பினர்களிலிருந்து பொருளா தார ஆணைக்குழுவினால் முதலீட்டு இலங்கை சபையின் தவிசாளர் நியமிக்கப்படுவார்.

(4) (அ) முதலீட்டு இலங்கையின் பிரதான நிறைவேற்று அலுவலர் பொருளாதார ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர். இவரே கணக்கீட்டு அலுவலர்களாகவும் இருப்பார்.

(ஆ) முதலீட்டு இலங்கையின் அன்றாட முகாமைத்துவம் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அதிகாரமளிக்கப்படும். கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்

மற்றும் பணியாட்டொகுதியினர் மற்றும் வளங்கள் ஆகியவற்றை முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றிற்கு பிரதான நிறைவேற்று அலுவலர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். பிரதான நிறைவேற்று அலுவலரின் வேலை வாய்ப்புடன் தொடர்புடைய தகைமைகள், ஊதியம், படிகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன அவ்வப்போது முதலீட்டு இலங்கை சபையினால் தீர்மானிக்கப் படலாம்.

(5) முதலீட்டு இலங்கையின் பணியாட்டொகுதியினரின் சம்பளங்கள் உள்ளடங்கலாக சகல விதமான செலவுகளும் பொருளாதார ஆணைக்குழுவினால் ஒதுக்கப்படும்.

(6) முதலீட்டு இலங்கையின் தொழிற்பாட்டு செயன்முறைகளை அவ்வப்போது குறைநிரப்பு செய்வதற்கு அவசியமான ஒழுங்குவிதிகளை பொருளாதார ஆணைக்குழுவின் விதப்புரையுடன் அமைச்சர் உருவாக்கலாம்.

முதலீட்டு இலங்கை சபையின் தத்துவங்கள்

**49.** முதலீட்டு இலங்கை சபையானது பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கான தத்துவங்களை கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) ஏதேனும் அரசாங்க முகவர், உள்ளூராட்சி சபை, வேறு ஏதேனும் அமைப்பு, அதிகார அமைப்பு அல்லது ஆள் ஆகியோரிடமிருந்து ஏதேனும் தகவல்கள், விபரங்கள், ஆவணங்கள், குறிப்புகள் ஆகியவற்றை ஏதேனும் முதலீடுகள் தொடர்பில் முதலீட்டு இலங்கைக்கு தேவையானவற்றை கோரி பெற்றுக் கொள்ளல், அத்தோடு அத்தகைய அரசாங்க நிறுவனம், உள்ளூராட்சி அமைப்பு அல்லது வேறு அமைப்பு அல்லது அலுவலர் அல்லது ஆள் ஆகியோர் எவ்வித தாமதமோ, மறுப்போ இன்றி அவற்றை முதலீட்டு இலங்கை சபைக்கு வழங்குதல் வேண்டும்;

(ஆ) வெளிநாட்டு முதலீடுகள் முக்கிய கருத்திட்டங்கள் மற்றும் இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றின் அந்தஸ்தினை கண்டறிந்து தொகுப்பதற்காக அரசாங்க திணைக்களங்களுடன் ஒருங்கிணைதல்;

(இ) தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு உதவுவதற்கு பொருத்தமானது என கருதுகின்ற ஆலோசனைச் சபைகளை நியமித்தல் மற்றும்;

(ஈ) அவசியமானது என கருதுகின்ற அத்தகைய தத்துவங்களை பொருத்தமானது என கருதுகின்றவற்றிற்கு கையளிப்பதற்காக அத்தகைய ஆட்களை உள்ளடக்கிய ஏதேனும் குழுவை நியமித்தல். இப் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு குழுவும் அவ்வப்போது வழங்கப்படுகின்ற பணிப்புரைகளை உறுதிப்படுத்துவதுடன் முதலீட்டு சபையினால் வழங்கப்படுகின்றவற்றை அத்தகையவற்றை உறுதிப் படுத்தல் வேண்டும் மற்றும் குறிப்பிடப்பட்ட முதலீட்டு இலங்கை சபையானது அவ்வாறு நியமிக்கப்பட்ட ஏதேனும் குழுவின் யாப்பினை திருத்தலாம் அல்லது அத்தகைய நியமனத்தை இரத்துச் செய்யலாம்;

(உ) போட்டித் தன்மைமிக்க சந்தையில் முதலீட்டு இலங்கையின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் செயலாற்றுகைகளை மேற்கொள்வதற்கும் அவசியமானது என கருதுகின்ற பொழுது திறன் படைத்த ஆட்கள், நிபுணர்கள், ஆலோசகர்கள் ஆகியோரை நியமித்தல்; மற்றும்

(ஊ) 50 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு அல்லது செயலாற்றுவதற்கு அவசியமான அத்தகைய ஏனைய செயல்கள் அல்லது விடயங்களை பொதுவாக மேற்கொள்ளல் மற்றும் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தல் மற்றும் இலகுபடுத்தல்.

**50.** முதலீட்டு இலங்கை சபையின் தத்துவங்கள் மற்றும் பணிகள் பின்வருமாறு -

*முதலீட்டு இலங்கை சபையின் தத்துவங்கள் மற்றும் பணிகள்*

(அ) இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை இனங் காணல்;

(ஆ) இலங்கையை முதலீட்டிற்கான தளமாக மேம்படுத்துதல்;

(இ) மற்றவற்றிற்கிடையில், முதலீட்டு சூழல், சட்டங்கள், ஒழுங்குவிதிகள், வியாபார வாய்ப்புகள் உள்ளடங்கலாக விடயங்கள் தொடர்பில் வாய்ப்புள்ள எதிர்கால முதலீட்டாளர்களுக்கு தகவல்களையும் வழிகாட்டிகளையும் வழங்குதல்;

(ஈ) ஒழுங்குபடுத்தல் ஒப்புதல்கள், அனுமதிகள், அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றுடன் உதவிகளை வழங்குவதன் மூலம் முதலீடுகளை தாபித்தல், தேக்கி வைத்திருத்தல், விரிவுபடுத்தல் ஆகியவற்றை இலகுபடுத்துதல்;

(உ) சாத்தியமான முதலீட்டாளர்களை உள்ளூர் வியாபாரங்கள் மற்றும் பங்காளர்களுடன் இணைத்தல்;

(ஊ) சர்வதேச முதலீட்டு கூட்டங்கள் மற்றும் மாநாடுகளில் நாட்டின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்தல்

(எ) அரசாங்கம், தனியார் துறை, முதலீட்டுச் சமுதாயம் ஆகியவற்றுக்கிடையில் கூட்டிணைவுகளை மேம்படுத்துதல்

(ஏ) தேசிய முதலீட்டு மேம்பாட்டு உபாயமுறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும்

(ஐ) முதலீட்டு மேம்பாட்டு நோக்கங்களுக்க அவசியமான ஏனைய அரசாங்க முகவர்களுடன் ஒருங்கிணைதல்.

## அத்தியாயம் XIV

## பொதுவான ஏற்பாடுகள்

*பொருளாதார ஆணைக் குழுவின் உறுப்பினர்கள், அலுவலர்கள், ஏனைய ஊழியர்கள் ஆகியோரை அரசாங்க சேவையாளர்களாக கருதுதல்*

**51.** பொ.ஆ. சபையின் சகல உறுப்பினர்கள், பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதி, பொருளாதார ஆணைக்குழுவின் அலுவலர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள், மற்றும் முதலீட்டு இலங்கைச் சபையின் சகல உறுப்பினர்கள் ஆகியோர் தண்டனைச் சட்டக் கோவை (19 ஆம் அத்தியாயமான) நோக்கங்களுக்காக கருத்தெல்லையினுள் அரசாங்க சேவையாளர்களாக கருதப்படுதல் வேண்டும்.

**52.** 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் அர்த்தப்பாட்டினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாக பொருளாதார ஆணைக்குழு கருதப்படுதல் வேண்டும் மற்றும் அந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அதன் பிரகாரம் பொருள் கோடல்.

*பொருளாதார ஆணைக்குழு வானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவகம் என கருதப்படுதல்*

**53.** நன்னோக்கின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல்கள் அல்லது இந்த சட்டத்தின் கீழ் அவரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ற விடயங்கள் அல்லது பொருளாதார ஆணைக்குழு அல்லது பொ.ஆ. சபையின் பணிப்புரையின் படி எது ஏற்புடையதோ அதன் படி, அவர் நன்னோக்குடன் நடந்ததாகவும் உரிய கவனத்தை பிரயோகித்த தாகவும், நியாயபூர்வமான கவனம் மற்றும் திறன்களை பயன் படுத்தியதாகவும் நிரூபிக்கின்ற பட்சத்தில் பொ.ஆ. சபையின் எவரேனும் உறுப்பினர்கள், பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதி, அலுவலர் அல்லது பொருளாதார ஆணைக்குழுவின் ஊழியர் அல்லது முதலீட்டு இலங்கை சபையின் எவரேனும் உறுப்பின் ஆகியோருக்கு எதிராக எத்தகைய சிவில் அல்லது குற்றவியல் செயற்பாடுகளை எடுத்தல் கூடாது.

*இந்த சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை களுக்கான பாதுகாப்பு*

**54.** (1) பொருளாதார ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட ஏதேனும் செலவுகள் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் பொருளாதார ஆணைக்குழுவிற்கு எதிராக கொண்டு வரப்பட்ட ஏதேனும் வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை, தொடர்பான செலவுகள் பொ.ஆ. நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதுடன் மற்றும் பொருளாதார ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்ட செலவுகள் அல்லது அறவிடப்பட்டவைகள் அத்தகைய வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை தொடர்பில் பொ. ஆ. நிதியத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை தொடர்பான செலவினங்கள் பொருளாதார ஆணைக் குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல்*

(2) பொ.ஆ. சபையின் எவரேனும் உறுப்பினரினால், பொ.ஆ. பணிப்பாளர் தலைமையதிபதி, அலுவலர் அல்லது பொருளாதார ஆணைக்குழுவின் ஊழியர் அல்லது முதலீட்டு இலங்கை சபையின் எவரேனும் உறுப்பினர் ஆகியோரால் ஏதேனும் வழக்கு அல்லது அந்த ஆளுக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாய சபையில் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் தொடர்பில்

மற்றும் இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய ஆளினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ற ஏதேனும் செயல் அல்லது பொருளாதார ஆணைக்குழுவின் பணிப்புரையின் படி மேற்கொண்ட செயல்கள் ஆகியன தொடர்பில் அத்தகைய செயலானது நன்னோக்கின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக நீதிமன்றம் கருதுகின்ற பொழுது அத்தகைய வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை தொடர்பில் அத்தகைய ஆளிடமிருந்து அத்தகைய செலவுகள் அறவிடப்படாத பட்சத்தில் பொ. ஆ. நிதியத்திலிருந்து அவை செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**55.** (1) இந்த சட்டத்தின் கீழ் விதிக்கப்படுவதற்கு தேவைப் படுத்தப்பட்ட அல்லது எவை தொடர்பில் ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அத்தகைய சகல விடயங்கள் தொடர்பிலும் பொ.ஆ. சபையின் கலந்தாராய்வுடன் அமைச்சர் ஒழுங்குவிதிகளை உருவாக்கலாம்.

(2) குறிப்பாக, (1) ஆம் உட்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பொதுவான தன்மைக்கு பங்கம் ஏற்படாமல், பொ.ஆ. சபையின் கலந்தாராய்வுடன் இவை தொடர்பான ஒழுங்குவிதிகளை அமைச்சர் உருவாக்கலாம் –

(அ) இப்பாகத்தின் நோக்கங்களை அடைவதற்கு அவசியமான விசேடமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மேம்படுத்தல் மற்றும் இலகுபடுத்தல் ஆகியவற்றுக்காக இப்பாகத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களில் சீர் செய்தல் அல்லது நோக்கெல்லை மற்றும் ஏதேனும் விலக்களித்தலின் அளவு ஆகியவற்றை தீர்மானித்தல்;

(ஆ) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியம் என கருதப்படுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் உள்ளடங்கியதாக காணப்பட்ட பொழுதிலும் இவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத் தப்பட்டதல்ல-

(i) முதலீட்டு மேம்பாட்டிற்கான செயன்முறை களை குறிப்பிடல், இலகுபடுத்தல் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளின் பின்னர் சட்ட நிறுவனங்களை உருவாக்குவதன் மூலமான மற்றும் வேறு விதமாக;

(ii) ஏதேனும் பிரகடனப்படுத்தப்பட்ட முதலீட்டு வலயம், உரிமம் பெற்ற தொழில்முயற்சிகள் அல்லது பதிவு செய்யப்பட்ட தொழில்முயற்சி கள் ஆகியவற்றுக்கு கொண்டுவரப்படுகின்ற அல்லது வெளியில் கொண்டுசெல்லப்படு கின்ற பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான முறைகள் மற்றும் நடைமுறை களை குறிப்பிடல்;

(iii) சர்வதேச வியாபார மேம்பாட்டிற்கான செயன் முறைகளை குறிப்பிடல்;

(iv) 48 ஆம் பிரிவு தொடர்பில் அதனுடன் தொடர்பு பட்ட பணியாட்டொகுதிக்கான நடவடிக்கை முறை மற்றும் எல்லா வேறு கருமங்களைக் குறித்துரைத்தல்:

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவியை வகிக்கின்ற இலங்கை முதலீட்டுச் சபை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் எந்த தொழில் நியதி, நிபந்தனைக்கு 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரித்துடையவர் களாக இருந்தார்களோ அந்த நியதி, நிபந்தனை களிலும் பார்க்க குறைந்த சாதகமான நியதி நிபந்தனைகளை வழங்குகின்ற ஒழுங்கு விதிகளை வழங்குகின்ற ஒழுங்குவிதிகளை இப்பிரிவின்கீழ் ஆக்குதலாகாது;

(v) இப்பாகத்தின் அட்டவணையில் திருத்தம், சேர்த்தல் அல்லது மாற்றங்கள்;

(vi) இப்பாகத்தின் கீழ் வழங்கப்படுகின்ற ஏதேனும் சேவைகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் விதிப்பணம் ஆகியவற்றை குறிப்பிடல்;

(vii) இப்பாகத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் அனுமதித்தல் தொடர்பான வகைகள் மற்றும் நெறிமுறைகளை குறிப்பிடல்;

(viii) அத்தகைய பணியாட்டொகுதியினரை பொருளாதார ஆணைக்குழுவிற்கு ஒதுக்குதல் மற்றும் அத்தகைய ஒழுங்குவிதிகளின் படி செல்லுபடியாகும் திகதியிலிருந்து பொருளாதார ஆணைக் குழுவினால் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும் என கருதுபவர்கள்; மற்றும்

(ix) *1978* ஆம் ஆண்டின் *4* ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் வருகின்ற அனைத்து வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் பொருளாதார ஆணைக்குழுவிடம் தம்மை பதிவு செய்தல்.

(*3*) இப்பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்கு விதியும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட பிந்திய திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(*4*) இப்பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்கு விதியும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள், ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதேவேளை ஒப்புதல்

அளிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும் இரத்துச் செய்யப் பட்டதாக ஒப்புதல் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து கருதப்படும், ஆயின் அதன் கீழ் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட எதற்கும் பங்கம் ஏற்படாது.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும் திகதி தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப் படுதல் வேண்டும்.

**56.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இப்பாகத்தின் கீழ் எத்தகைய விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அத்தகைய சகல விடயங்கள் தொடர்பான விதிகளை பொருளாதார ஆணைக்குழு உருவாக்கலாம்: விதிகள்

(2) பொருளாதார ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு பிரசுரித்ததிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**57.** இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதேனும் சிரமங்கள் எழும் பட்சத்தில் பொ.ஆ. சபையின் கலந்தாராய்வுடன், வர்த்தமானியில் பிரசுரிக்கின்ற கட்டளை மூலம், இப்பாகத்தின் ஏற்பாடுகள் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் ஆகியவற்றுக்கு முரணாகாத அமைச்சருக்கு அவசியமானது என தோன்றுகின்ற அல்லது சிரமத்தை அகற்றுவதற்கு துரிதப் படுத்த வேண்டும் என தோன்றுகின்ற ஏற்பாடுகளை அமைச்சர் உருவாக்கலாம்: சிரமங்களை அகற்றுதல்

ஆயின், இப்பாகம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலப்பகுதி காலவதியான பின்னர் அத்தகைய கட்டளை ஆக்கப்படுதலாகாது.

**58.** இப்பாகத்தின் ஏற்பாடுகள் மற்றும் முதலீடுகள் அல்லது சர்வதேச வியாபாரத்தை மேம்படுத்துதல் அல்லது முதலீட்டு வலயங்கள் தொடர்புடைய வேறு ஏதேனும் சட்ட ஏற்பாடுகளுக் கிடையில் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலோங்கியிருத்தல் வேண்டும். இப்பாகம் மேலோங்கி யிருத்தல்

**59.** (1) இப்பாகத்தின் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப் படுத்தினால் ஒழிய- பொருள் கோடல்

''வெளிநாட்டு முதலீடு'' என்பது இப்பாகத்தின் பிரகாரம் வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவரினால் மேற்கொள் ளப்பட்ட முதலீடு என பொருள்படும்;

''வெளிநாட்டு முதலீட்டாளர்'' என்பது வெளிநாடு ஒன்றின் ஏற்புடைய சட்டங்களின் பிரகாரம் சட்ட நிறுவனம் என அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர், இப்பாகத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கையில் முதலீட்டை கொண்டிருத்தல் என பொருள்படும்;

''முதலீட்டாளர்'' என்பது ஏற்புடைய சட்டங்களின் படி சட்ட ரீதியான நிறுவனம் என அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர், இப்பாகத்தின் பிரகாரம் இலங்கையில் முதலீடு ஒன்றை மேற்கொண்டிருத்தல்;

''முதலீடு'' என்பது பின்வருவன உள்ளடங்கலாக மூலதன அர்ப்பணிப்புகள் அல்லது ஏனைய வளங்கள், குறிப்பிட்ட காலப்பகுதிக்கான இலாபம் அல்லது வருவாய் பற்றிய எதிர்பார்ப்புகள் அல்லது இடர் சார் ஊகங்கள் ஆகிய வற்றை உள்ளடக்கிய முதலீடு ஒன்றின் பண்புகளைக் கொண்ட நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முதலீட்டாளர் ஒருவருக்கு சொந்தமான அல்லது கட்டுப்படுத்துகின்ற சகல விதமான சொத்துக்கள் என பொருள்படும்-

(அ) தொழில்முயற்சி ஒன்று;

(ஆ) பிணைகள் சந்தை அல்லது பங்குச் சந்தை ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டை தவிர நிறுவனம் ஒன்றில் பங்குகள், இருப்பு, ஏனைய வடிவிலான உரிமை முதல் பங்கு பற்றுதல்;

(இ) முறிகள், தொகுதிக் கடன்கள், நிறுவனம் ஒன்றின் கடன்கள் மற்றும் ஏனைய கடன் கருவிகள்;

(ஈ) முழுமைப் பணி ஒப்பந்தம், நிர்மாணம், முகாமைத்துவம், உற்பத்தி, சலுகை, வருமானப் பகிர்வு மற்றும் ஏனைய ஒத்த ஒப்பந்தங்கள்;

(உ) பணம் சார் கோரிக்கைகள் அல்லது ஏனைய சொத்துக்கள், முதலீட்டுடன் தொடர்புடைய பொருளாதார பெறுமதிமிக்க ஏதேனும் ஒப்பந்தம் சார்ந்த செயலாற்றுகைகள்;

(ஊ) சம்பந்தப்பட்ட உள்நாட்டு சட்டங்களின் பிரகாரம் புலமைச் சொத்து உரிமைகள்;

(எ) ஏற்புடைய உள்நாட்டு சட்டங்களின் பிரகாரம் மாற்றப்பட்ட அனுமதிப் பத்திரங்கள், அங்கீகாரமளித்தல்கள், அனுமதிகள் மற்றும் ஒத்த உரிமைகள்; அல்லது

(ஏ) ஏனைய தொற்று உணரக் கூடிய அல்லது தொற்று உணர முடியாத சொத்துக்கள், அசைய மற்றும் அசைய முடியாத சொத்துக்கள், குத்தகைகள், அடகுகள், மீள் உரிமைகள், வாக்குறுதிகள் போன்ற சம்பந்தப்பட்ட சொத்து உரிமைகள்.

ஆனால் இவற்றுள் பின்வருவன உள்ளடங்காது-

(i) எந்த வடிவத்தை எடுத்த பொழுதிலும் முதலீட்டு பண்புகள் இல்லாத சொத்தொன்று;

(ii) நன்கொடை; மற்றும்

(iii) நீதி அல்லது நிருவாக நடவடிக்கைகளினால் வழங்கப்பட்ட கட்டளை அல்லது தீர்ப்பு;

‘‘முதலீட்டு வலயங்கள்’’ என்பது இந்த சட்டம் அல்லது இப்பாகத்தில் குறிப்பிடப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட

சட்டத்தில் குறிப்பிடப்பட்டஉரிமம் பெற்ற வலயங்கள் உள்ளடங்கலாக ஏற்றுமதி செயன்முறை வலயங்கள், கைத்தொழில்துறை பூங்காக்கள், விசேட பொருளாதார வலயங்கள் மற்றும் முதலீடுகளை தாபிப்பதற்கான ஏனைய ஒத்த பிரதேசங்கள் என பொருள்படும்;

“பதிவு செய்யப்பட்ட நிறுவனம்” என்பது 13 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என பொருள்படும்

“வருவாய்” என்பது இலாபங்கள், பங்கிலாபங்கள், வட்டி, மூலதன பெறுகைகள், உரிமத் தொகை கொடுப்பனவுகள், புலமைச் சொத்து உரிமையுடன் தொடர்புடைய மற்றும் ஏனைய சகல சட்ட ரீதியான வருமானம் ஆகியவற்றுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக முதலீட்டு ஒன்றினால் பெறப்பட்ட அல்லது சம்பாதிக் கப்பட்ட தொகை என பொருள்படும்;

“குறித்துரைக்கப்பட்ட நிறுவனம்” என்பது 46 ஆம் பிரிவின் கீழ் ஒழுங்குவிதியினால் பெயரிடப்பட்ட ஏதேனும் நிறுவனங் கள் என பொருள்படும்.

(2) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக -

(அ) “கடன்கள் மற்றும் ஏனைய கடன் சார் கருவிகள்” மற்றும் “பணக் கோரிக்கைகள் அல்லது ஏதேனும் ஒப்பந்தம் சார்ந்த செயலாற்றுகைகள்” முதலீட்டுடன் தொடர்புடைய வியாபார நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட சொத்துக்களாகும். தனிப்பட்ட சொத்துக்களையோ அல்லது முதலீட்டுடன் தொடர்புடைய அதேவேளை ஏதேனும் வியாபார செயற்பாடுடன் தொடர்பற்ற சொத்துக்களை குறித்து நிற்கவில்லை;

(ஆ) “பணக் கோரிக்கைகள்” பின்வருவனவற்றை உள்ளடக்கவில்லை-

(i) பண்டங்கள், சேவைகள் விற்பனைக்காக வர்த்தக ஒப்பந்தங்களிலிருந்து முழுமையாக எழுகின்ற பணக் கோரிக்கைகள்;

(ii) அத்தகைய ஒப்பந்தங்கள் தொடர்பாக உள்ளூர் நிதியிடல்;

(iii) *(1)* அல்லது *(2)* ஆவது உட் பிரிவுகளுடன் தொடர்புடைய ஏதேனும் கட்டளை தீர்ப்பு அல்லது நடுத் தீர்ப்பளித்தல்.

***அட்டவணை*** (பிரிவுகள் 45 மற்றும் 55)

1. சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)
2. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்
3. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
4. 4. 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டம்
5. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி சட்டம்
6. 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன சட்டம்
7. 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்
8. 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்
9. 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபை சட்டம்
10. 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டம்

11. 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டம்

12. 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்

பாகம் II

அத்தியாயம் XV

**இப்பாகத்தின் ஏற்புடைமை**

**60.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகள் இலங்கை முதலீட்டு வலயங்களுக்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும். இப்பாகத்தின் ஏற்புடைமை

(2) 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பு துறைமுக விசேட பொருளாதார வலயத்திற்கு இப்பாகத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதல்ல.

அத்தியாயம் XVI

**இலங்கையில் முதலீட்டு வலயங்களை தாபித்தல்**

**61.** (1) தாபிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று இருத்தல் வேண்டும். இது இலங்கை முதலீட்டு வலயம் என அழைக்கப்படுதல் வேண்டும் (இந்த சட்டத்தில், ''இலங்கை வலயங்கள்'' என அழைக்கப்படும்). இலங்கையில் முதலீட்டு வலயங்களை தாபித்தல்

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பெயரான இலங்கை வலயமானது கூட்டுத்தாபன அமைப்பாக இருப்பதுடன் தொடர் உரிமை மாற்றத்தையும் கொண்டிருக்கும். அத்தோடு இதற்கு பொதுவான இலச்சினை இருப்பதுடன் அத்தகைய பெயரிலேயே வழக்கு தொடுக்கப்படவோ அல்லது வழக்கு போடவோ முடியும்.

இலங்கை வலயத்தின் கீழ் பிரதான அலுவலகம் மற்றும் திணைக் களங்கள்

**62.** (1) இலங்கை வலயமானது அதனது பிரதான அலுவலகத்தை இலங்கையில் கொண்டிருப்பதுடன் வேறு ஏதேனும் அலுவலகம் அல்லது பிரதிநிதித்துவங்களை இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியிலேயோ தாபிக்கலாம்.

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வினைத்திறன்மிக்க செயற்படுத்துகை, செயலாற்றுகை மற்றும் அதனது தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை வினைத்திறன்மிக்க முறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமான அத்தகைய எண்ணிக்கையிலான நிருவாக பிரிவுகளை இலங்கை வலயம் தாபிக்கலாம்.

இலங்கை வலயத்தின் தத்துவங்கள்

**63.** (1) இலங்கை வலயமானது தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் மற்றும் புரிகையில் பின்வரும் தத்துவங்களை பிரயோகிக்கக் கூடியதாய இருத்தல் வேண்டும் -

(அ) முதலீட்டு வலயங்களை உருவாக்கி அவற்றை விரிவுபடுத்துவதற்கு அவசியம் என கருதுகின்ற ஆய்வுகளை மேற்கொள்ளல்;

(ஆ) முதலீட்டு வலயங்களின் அவசியம் அல்லது விரிவாக்கம் தொடர்பான விதப்புரைகளை பொருளாதார ஆணைக்குழுவிற்கு வழங்குதல்;

(இ) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக முதலீட்டு வலயங்களை தொழிற்படுத்தி முகாமைத்துவம் செய்தல் மற்றும் வீதிகள், மின்சாரம், நீர் விநியோகம், வீடமைப்பு ஏனைய அவசியமான வசதிகள், சிறப்பு ஏற்பாடுகள் அத்தகைய சலுகைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவை யானவைகள் மற்றும் இந்த சட்டத்தின் கீழ் பொருளாதார ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவைகள் உள்ளடங்கலாக அங்கு காணப்படுகின்ற முதலீட்டு வசதிகளுக்கான மிக நவீன அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கு தல்;

(ஈ) முதலீட்டு வலயங்கள் மூலமாக பொருளாதார அபிவிருத்திக்காக விரிவான ஆய்வுகளை மேற் கொள்ளல்;

(உ) ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் முதலீட்டு வலயங்கள் மற்றும் விசேட அபிவிருத்தி பிரதேசங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஒவ்வொரு அமைச்சு, திணைக்களம், மாகாண சபை, மாகாண அமைச்சு, திணைக்களம், உள்ளூராட்சி சபை, ஏனைய ஆட்கள் அல்லது குழுக்கள், தனியார் அல்லது அரசாங்க குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் மற்றும் நிறுவனங்களுக்கிடையில், கூட்டுறவுகளை தாபித்து மேம்படுத்துதல்;

(ஊ) முதலீட்டு வலயங்களின் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்துதல்;

(எ) முதலீட்டு வலயங்கள் தொடர்பான மேற்பார்வை ஒழுங்கமைப்பு தொழிற்பாடு முகாமைத்துவம் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்காக அமைச்சருக்கு விதப்புரைகளை வழங்குதல்;

(ஏ) முதலீட்டு வலயங்கள் அல்லது விசேட அபிவிருத்தி பிரதேசங்கள் ஆகியவற்றினுள் ஏதேனும் பொருளாதா அபிவிருத்தி கருத்திட்டங்கள், திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பதற்கு வழி செய்தல்;

(ஐ) பிரகடனத்தின் சகல அம்சங்களுடன் தொடர்புடைய கொள்கை விடயங்கள், ஒப்புதல் அளித்தல் அல்லது தாபித்தல், தொழிற்பாடு, முகாமைத்துவம், மேற்பார்வை, பிரகடனப்படுத்தப்பட்ட முதலீட்டு வலயங்களுக்கான ஒழுங்குவிதிகள் மற்றும் இந்த பாகத்தின் கீழ் முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் அமைச்சருக்கு விதப்புரைகளை மேற்கொள்ளல்;

(ஒ) முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு முதலீட்டு வலயமும் சுற்றாடல் ஒன்றை பேணுவதை உறுதி செய்தல். அதன் மூலம் வேலை வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்தல்;

(ஓ) குறித்துரைக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி வலயங்களை அபிவிருத்தி செய்து முகாமைத்துவம் செய்யும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்ட அரசாங்க-பங்காண்மை நிறுவனங்களில் பங்குகளை வைத்தி ருத்தல்;

(ஔ) குறித்துரைக்கப்பட்ட முதலீட்டு வலயங்களினுள் இலங்கை வலயங்களினால் வழங்கப்பட்ட சேவை களுக்காக கட்டணம் அல்லது அறவீட்டை விதித்தல்;

(க) இந்த சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு முதலீட்டு வலயங்களுக்கும் முதலீட்டு வலய அபிவிருத்தியாளரை நியமித்தல் மற்றும் கையகப் படுத்திய காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அதன் மூலம் மாறுபட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்;

(ங) முதலீட்டு வலயங்களை தாபிப்பதற்காகவும் மற்றும் முதலீட்டு வலயங்களில் சேவைகளை வழங்கு வதற்காகவும் ஏற்புடைய முதலீட்டாளர்களுக்கு காணி, கட்டிடங்கள், தளங்கள் விதந்துரைக்கப்பட்டவாறு வர்த்தக ரீதியான அடிப்படையில் அவற்றை ஒதுக்குதல்;

(ச) முதலீட்டு வலய அபிவிருத்தியாளர்களது பணிகளை சுயமாக மேற்பார்வை செய்வதன் மூலம் குறித்துரைக்கபபட்ட காலப்பகுதியினுள் முதலீட்டு வலயங்களது உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை உறுதி செய்தல்;

(ஞ) திறன் படைத்த தொழிற்படையை விருத்தி செய்தல் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்;

(ட) சுற்றாடல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் அர்ப்பணிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்காக வினைத்திறன்மிக்க முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்களை உற்சாகப் படுத்துதல்

(ண) கொள்வனவு, நன்கொடைகள், பரிசுகள் அல்லது விற்பனை செய்தல், அடகு பிடித்தல், குத்தகை, மாற்றம், சாதனம், வழங்குதல், அத்தகைய ஏதேனும் அசையக் கூடிய அல்லது அசையாத சொத்துக்களை பரிமாற்றம் செய்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகியவற்றின் மூலம் கையளிக்கப்பட்ட அசையக் கூடிய அல்லது அசையாத சொத்துக்களை பெற்றுக் கொள்ளல், எடுத்தல் மற்றும் வைத்திருத்தல்;

(த) அத்தகைய முதலீட்டு வலயங்கள் அல்லது ஏதேனும் வசதிகளை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்காக அவசியம் என கருதுகின்ற ஏதேனும் தரப்பிடம் ஏதேனும் உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்;

(ந) முதலீட்டு வலயங்களினுள் அங்கீகரிக்கப்பட்ட இடங் களினுள் முதலீட்டாளர்களுடன் குத்தகை ஒப்பந்தங் களை மேற்கொள்ளல்;

(ப) முதலீட்டு வலயங்களுள் முதலீட்டு இடங்கள் தொடர்பான விற்பனைகள், விநியோகம், குத்தகை, அல்லது முகாமைத்துவம் தொடர்பான உடன்படிக்கை களை மேற்கொள்ளல்;

(ம) மின்சாரம், நீர், எரிபொருட்கள், குறித்துரைக்கப்பட்ட முதலீட்டு வலயங்களினுள் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு ஏனைய சக்தி மூலங்கள் விநி யோகிப்பதற்காக மற்றும் பொருத்தமான வகையில் அத்தகைய பயன்பாட்டிற்காக கட்டணங்களை அறிவிடல், கைத்தொழிற்துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளில் இணங்கி சுற்றாடல் தராதரங்களை பேணல் உள்ளடங்கலாக

மொத்த விநியோகம், களஞ்சியப்படுத்தல், மீள் செலுத்துதல் ஆகியவற்றுக்காக ஏனைய நிறுவனங்கள் அல்லது முகவர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்

(ய) முதலீட்டு வலயத்தினுள் இலங்கை வலயத்தினால் வழங்கப்பட்ட குத்தகை வாடகைகள் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பில் ஏதேனும் கட்டணங்கள் அறவீடுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை விதித்தல் மற்றும் அறவிடல்

(ர) அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் இப்பாகத்தின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலச் செய்வதற்கு பொருத்த மானது என பரிசீலிக்கின்ற விடயங்களுக்காக அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாட் டொகுதியினர் ஆலோசகர்கள் மற்றும் மதியுரைஞர்கள் ஆகியோரை வேலைக்கு அமர்த்தல்;

(ல) வங்கிக் கணக்குகளை திறத்தல், தொழிற்படுத்தல், மூடுதல் உள்ளடங்கலாக இலங்கை வலயம் அவசியமானது என கருதுகின்ற அத்தகைய முறையில் நிதியை முதலீடு செய்தல்;

(வ) உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து கொடைகள், பரிசுகள், நன்கொடைகளை பெறல்;

(அஅ) மேற்குறிப்பிடப்பட்டவாறு அதனது குறிக்கோள்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகின்ற நோக்கத்திற்காக எவரேனும் ஆட்கள் அல்லது நிறுவனத்திற்கு விசேட அல்லது பொதுவான பணிப்புரைகளை வழங்குதல்;

(அஆ) வலய மட்டத்தில் விசேட நோக்கங்களுக்கான வாகனங்களை தாபித்தல் அல்லது பல்வேறு வகையான முதலீட்டு வலயங்களை கூட்டிணைத்து தாபித்தல் மற்றும் தனியார் துறைக்கு அவசியமாயின் முதலீட்டி லிருந்து வெளியேறல்;

(அஇ) முதலீட்டு வலயங்களில் தொழிலாளர்களுக்கான தங்குமிட வசதிகள் உள்ளடங்கலாக அவசியமான சமூக உட்கட்டமைப்பு விருத்திகளை தாபித்தல்;

(அஈ) அதனது பணிகளை அறிவார்ந்த முறையில் வெளியேற்றுவதற்கு அவசியமானது என கருதுகின்ற நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களை நியமித்தல்; மற்றும்

(அஉ) இப்பாகத்தின் கீழ் இலங்கை வலயத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு மற்றும் குறிக்கோள்களை எய்துவதற்கும் உசிதாமனவை எனக் கருதுகின்ற அல்லது அவசியமான ஏனைய செயல்களை மேற்கொள்ளல்;

(2) இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் ஆகியவற்றின் பிரகாரம் இலங்கை வலயத்தின் குறிக்கோள்களை அடைவதற்கு முதலீட்டு வலயம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்காக ஏதேனும் கூட்டுத்தாபன அமைப்பிற்கு 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட ஏதேனும் வலயத்தினுள் ஏதேனும் காணியை பராதீனம் செய்தல்.

(3) ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் படி இலங்கை வலயமானது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட முதலீட்டு வலயத்தின் எல்லைக்குள் பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நிதி ரீதியான உதவிகளை அபிவிருத்தி, தொழிற்பாடு, பேணுதல் ஆகியவற்றுக்காக பொறுப்பேற்றல் அல்லது ஒப்புதல் அளித்தல்.

(4) இந்த பிரிவின் நோக்கங்களுக்காக, ‘‘விசேட நோக்கங்களுக்கான வாகனங்கள்’’ என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்று என பொருள்படும்.

**64.** இலங்கை வலயத்தின் கடமைகள் மற்றும் பணிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் - இலங்கை வலயத்தின் குறிக்கோள் மற்றும் பணிகள்

(அ) பொருளாதார ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட முதலீடு தொடர்பான தேசிய கொள்கைகள், சர்வதேச வியாபாரம், ஏற்றுமதிகள், முதலீட்டு வலயங்கள் ஆகியவற்றை இலகுபடுத்துவதற்கு முதலீட்டு வலயங்களின் தேவை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்;

(ஆ) முதலீட்டு வலயங்களை தாபிப்பதற்கான தளங்களை இனங்கண்டு தெரிவு செய்தல்;

(இ) அமைச்சரவையின் ஒப்புதலை பெற்று அவற்றை தாபிப்பதற்கான பணிகளை முன்னெடுப்பதற்காக பொருளாதார ஆணைக்குழுவிற்கு அத்தகைய முதலீட்டு வலயங்கள் பற்றி விதந்துரைத்தல்

(ஈ) முதலீட்டு வலயங்களை தாபிப்பதற்கான நோக்கங்களுக்காக சொத்துக்களை பெற்றுக் கொள்ளல்

(உ) அத்தகைய முதலீட்டு வலயங்களை நேரடியாகவோ அல்லது ஏதேனும் பங்காண்மை மூலமாகவோ அல்லது இணை நிறுவனங்கள் அல்லது முகாமைத்துவ உடன்படிக்கை அல்லது பொருளாதார ஆணைக்குழு வினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேறு விதமான ஏற்பாடுகள் மூலம் முகாமைத்துவம் செய்தல் மற்றும் தொழிற்படுத்தல்;

(ஊ) சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளினால் ஏற்பாடு செய்யப்பட்டதன் பிரகாரம் ஒப்புதல்கள் மற்றும் அதிகாரமளித்தல்களை வழங்குவதற்காக ஏதேனும் தத்துவங்களை பிரயோகித்தல்;

(எ) முதலீட்டு வலயத்தினுள் தொழிற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு அவசியமான ஏதேனும் அரசாங்க அதிகார அமைப்புகளுடன் கூட்டிணைந்து தொடர்புகளை மேற்கொள்ளல்; மற்றும்

(ஏ) மேற்குறிப்பிடப்பட்ட சகல குறிக்கோள்கள் அல்லது ஏதேனும் குறிக்கோளை அடைவதற்கு அல்லது சாதகமாக இருக்கின்ற அவசியமான அத்தகைய ஏனைய சகல செயல்களையும் மேற்கொள்ளல்.

### அத்தியாயம் XVII

### இலங்கை வலயங்களின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம்

**65.** (1) இலங்கை வலயங்களின் நிருவாகம் மற்றும் அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் ஆகியன சபையொன்றிடம் கையளிக்கப்படும் (இப்பாகத்தின், ''இலங்கை வலயங்கள் சபை'' என அழைக்கப்படும்).

*இலங்கை வலய சபையின் ஆக்க அமைவு*

(2) இலங்கை வலயங்கள் சபையானது இலங்கை வலயங்களின் அலுவல்களை நிருவகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக இலங்கை வலயங்களின் அலுவல்களை நிருவகித்தல் நோக்கங்களுக்காக பாகம் II இன் கீழ் பொருளாதார ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்ட அல்லது இப்பாகத்தின் மூலமாக இலங்கை வலயங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட, கையளிக்கப்பட்ட, விதிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றுதல், நிறைவேற்றுதல் ஆகியவற்றை மேற்கொள்ளலாம்.

(3) இலங்கை வலயங்கள் சபையானது 7 உறுப்பினர்களுக்கு மேற்படாத வகையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) பின்வரும் பதவி வழி உறுப்பினர்கள் -

(i) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமனம் செய்யப் பட்டவர், அவ்வாறு பெயர்குறித்து நியமனம் செய்யப்படுபவர் நிதி என்ற விடயம் வழங்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் பிரதி செயலாளர் தரத்தை விட குறையாதவராக இருத்தல் வேண்டும்;

(ii) அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் பெயர் நியமனம் செய்யப்பட்டவர், அவ்வாறு பெயர் நியமனம் செய்யப்பட்டவர் பிரதி

செயலாளர் பதவியை விட குறையாதவராக இருத்தல் வேண்டும்;

(iii) *1978* ஆம் ஆண்டின் *41* ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் அல்லது அவரினால் பெயர் நியமனம் செய்யப்படுபவர். இவ்வாறு பெயர் நியமனம் செய்யப்படுவர் நிதி என்ற விடயம் வழங்கப்பட்ட அமைச்சரின் அமைச்சில் திணைக்களம் ஒன்றின் பணிப்பாளர் தலைமையதிபதி தரத்தை விட குறையாதவராக இருத்தல் வேண்டும்; மற்றும்

(iv) பொருளாதார ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலர்; அத்துடன்

(ஆ) பொருளாதார ஆணைக்குழுவின் விதப்புரையுடன் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவம், முதலீடு, நிதி, சட்டம், தகவல் தொழில்நுட்பம், உற்பத்தி அல்லது வியாபாரம் ஆகிய துறைகளில் அறிவு, நிபுணத்துவம், அனுபவம், தேசிய மற்றும் சர்வதேச ரீதியான அங்கீகாரம் ஆகியவற்றை கொண்ட நான்கு ஆட்கள்.

இலங்கை வலயங்களின் தவிசாளர்

**66.** (1) பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை இலங்கை வலயங்கள் சபையின் தவிசாளராக அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர் அமைச்சருக்கு முகவரியிட்டு அனுப்பப்படும் கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகுகை அமைச்சரினால் எழுத்து மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற திகதியிலிருந்து செல்லுபடியாதல் வேண்டும்.

(3) அமைச்சர் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளரின் பதவியிலிருந்து தவசாளரை அகற்றலாம்.

(4) (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய தவிசாளரின் பதவிக் காலம் சபையில் அவரது உறுப்பாண்மை காலப்பகுதியாக இருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், சுகயீனம், வேறு உடற் தகுதியீனம், இலங்கையில் மூன்று மாதங்களுக்கு குறையாத காலப்பகுதியினுள் இல்லாமை அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக தனது பதவிக்குரிய நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்ற விடத்து அமைச்சர் வேறு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை, நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக தவிசாளராக கடமையாற்றுவதற்கு நியமிக்கலாம்.

இலங்கை வலயங்கள் சபை உறுப்பினராக இருப்பதற்கான தகைமை யீனங்கள்

**67.** இலங்கை வலயங்கள் சபைக்கு நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்கு தகைமை யற்றவராதல் வேண்டும் -

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கை பிரசை ஒருவராக இல்லாதிருந்தால் அல்லது இலங்கை பிரசை ஒருவராக இல்லாதொழிந்தால்;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீன மற்றவர் என காணப்பட்டால் அல்லது வெளிப்படுத் தப்பட்டால்;

(ஈ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்குரோத்தானவர் என வெளிப்படுத்தப்பட்ட ஆள் ஒருவராக இருந்து பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்குரோத்தான வராக இருந்தால்;

(உ) இலங்கை அல்லது வேறு ஏதேனும் நாடொன்றின் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருப்பவர் அல்லது அனுபவித்தவர்;

(ஊ) இலங்கை வலயத்தினால் அல்லது அதன் சார்பாக மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தங்களின் கீழ் ஏதேனும் உரிமை அல்லது நன்மைகளை வைத்திருப்பவர் அல்லது அனுபவித்துக் கொண்டிருப்பின்;

(எ) இலங்கை வலயங்கள் சபையின் உறுப்பினர் ஒருவராக அவரது தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் நிதி சார் அல்லது வேறு அக்கறையை கொண்டிருப்பின்; அல்லது

(ஏ) பதவியிலிருந்து முன்பதாக பதவி நீக்கப்பட்டிருப்பின்.

பதவிக் காலம்

**68.** இலங்கை வலய சபைக்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும், அவர் பதவி விலகுவதன் மூலம் அவரது இறப்பின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அவரது நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டால் ஒழிய தொடர்ச்சியாக அல்லது வேறு வகையாக மேலதிக ஒரு காலத்திற்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்கு தக உடையவராதலும் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி அகற்றல் மற்றும் பதவி விலகுதல்

**69.** (1) இலங்கை வலயங்கள் சபைக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட அப்பொருள்பட்டதுமான கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகுகை எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) இலங்கை வலயங்கள் சபையிலிருந்து நியமிக்கப்பட்ட எந்த உறுப்பினரையும் அமைச்சர் பதவியிலிருந்து அகற்றலாம் -

(அ) சுகயீனம் அல்லது உடற் தகுதியீனத்தின் காரணமாக அத்தகைய ஆள் தனது பதவியின் கடமைகளை வினைத்திறன்மிக்க முறையில் செயலாற்றுவதற்கு முடியாத விடத்து எழுத்து மூலம் அறிவித்தல்; அல்லது

(ஆ) பிரதிநிதித்துவம் மேற்கொள்ளப்பட்டு பரிசீலனைகள் செய்து அத்தகைய ஆள் மோசடி தவறிழைத்துள்ளார், பாரதூரமான பிழையான நடத்தை அல்லது மொத்த புறக்கணிப்பு அல்லது அந்த ஆள் மீது பணிக்கப்பட்ட பொறுப்புகளை வினைத்திறன்மிக்க முறையில் நிறைவேற்ற முடியாமை (கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக சமுகமளிக்காமை) இவை தொடர்பில் திருப்தியுறுகின்ற பட்சத்தில் உடனடியாக பதவியிலிருந்து அகற்றுவதற்கான தேவை ஏற்படுகின்ற பொழுது.

(3) இலங்கை வலயங்கள் சபையின் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு அத்தகைய ஆள் வருகை தராதவிடத்து அல்லது சபையினால் அவரது வருகை தராமைக்கு மன்னிப்பளிக்கப்படாமல் ஏதேனும் பஞ்சாங்க வருடத்தில் மூன்றில் ஒரு கூட்டத்திற்கு அத்தகைய ஆள் வருகை தராதவிடத்து அத்தகைய உறுப்பினர் இலங்கை வலயங்கள் சபையின் தொடர்ந்தும் உறுப்பினராக இருப்பதற்கான தகுதியினை இழக்கின்றார்.

(4) இலங்கை வலயங்கள் சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் இறக்கின்ற விடத்து, பதவி விலகுகின்ற விடத்து, அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து 65 மற்றும் 67 ஆம் பிரிவுகளை கருத்திற் கொண்டு அமைச்சரானவர் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக வேறொரு ஆளை நியமிக்க முடியும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் அடுத்துருகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் பதவியிலிருந்து அகற்றப்படாத வரை மேலும் ஒரு காலப்பகுதிக்கு தொடர்ச்சியாகவோ அல்லது வேறு விதமாகமோ மீள் நியமனம் செய்யப்படுவதற்கோ தகுதியுடையவராதல் வேண்டும்.

**70.** (1) இலங்கை வலயங்கள் சபையில் தற்றுணர்வை பிரயோகிப்பதுடன் தொடர்புடைய ஏதேனும் விடயங்கள் எவரேனும் ஆள், கம்பனி, முதலீடு ஆகியவற்றுடன் இலங்கை வலயங்கள் சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு நேரடியாக அல்லது மறைமுகமான நலன்கள் காணப்படுதல் அல்லது வாக்களித்தல் அல்லது நெறிப்படுத்தல் காணப்படுகின்ற பொழுது அது தொடர்பாக எழுத்து மூலமாக இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அத்தகைய நலன்களின் தன்மை பற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும். அத்தகைய வெளிப்படுத்தல்களின் பொழுது இலங்கை வயங்கள் சபைக் கூட்டங்களில் அவை முறையாக பதியப்படுவதுடன் அவ்விடயம் பற்றி கலந்தாராயப்படுதல் வேண்டும். அத்தகைய விடயங்கள் கலந்தாலோசிக்கப்படுகின்ற கூட்டத்திலோ அல்லது அத்தகைய நலன்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய ஏதேனும் தீர்மானம் மேற்கொள்ளல் அல்லது வாக்கெடுப்பு சம்பவங்களிலோ அத்தகைய உறுப்பினர் பங்குபற்றக் கூடாது.

அக்கறை முரண்பாடு

(2) மேற்படி (1) ஆம் உட்பந்தியின் பிரகாரம் அத்தகைய அக்கறை முரண்பாட்டினை பிரகடனப்படுத்துவதற்கு எவரேனும் இலங்கை வலயங்கள் சபை உறுப்பினர் தவறுதல் அல்லது புறக்கணிக்கும் பட்சத்தில் அத்தகைய உறுப்பினர் இலங்கை வலையங்கள் சபையில் உறுப்பினராக இருப்பதற்கான தகைமையை இழக்கின்றார்.

**71.** (1) இலங்கை வலயங்கள் சபைக் கூட்டங்களானது ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்தல் வேண்டும் அல்லது இப்பாகத்தின் மூலம் இலங்கை வலயங்கள் சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக அல்லது செயலாற்றுகின்ற நோக்கத்திற்காக தேவைப்படுகின்ற இப்பாகத்தின் மூலம் இலங்கை வலயங்கள் சபைக்கு வழங்கப்பட்டவைகள் அல்லது விதிக்கப்பட்டவைகள்.

கூட்ட நடைமுறைகள்

(2) இலங்கை வலயங்கள் சபையின் ஏதேனும் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பின??களாக இருத்தல் வேண்டும்.

(3) இலங்கை வலயங்கள் சபைக் கூட்டங்கள் பின்வருமாறு நடக்கலாம் -

(அ) கூட்ட நடப்பெண்ணில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை யிலான உறுப்பினர்கள் கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட இடத்தில், திகதியில், நேரத்தில் ஒன்று கூடல் அல்லது

(ஆ) கூட்டம் நடைபெறும் காலப்பகுதியில் ஒவ்வொரு உறுப்பினரும் கூட்ட நடப்பெண்ணின் படி பங்கு பற்றுகின்ற சகல உறுப்பினர்களையும் சம காலத்தில் பார்க்கவும் கேட்கவும் கூடியதாக இருப்பதுடன் பங்குபற்றும் சகல உறுப்பினர்களும் ஒலி மற்றும் ஒளி தொடர்பாடல் மூலம் பங்குபற்றுதல்.

(4) இலங்கை வலயங்கள் சபை ஏதேனும் கூட்டங்களின் பொழுது தீர்மானம் மேற்கொள்கின்ற சகல விடயங்களும் சமூகமளித் திருக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கு மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் வாக்குகள் சமநிலை ஏற்படும் பொழுது தவிசாளர் தனது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை செலுத்தலாம்.

(5) தவிசாளர் சமூகமளித்திருக்கின்ற சந்தர்ப்பங்களில் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். இலங்கை வலயங்கள் சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமூகமளிக்காதவிடத்து, சமூகமளித்திருக்கின்ற உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்படும் எவரேனும் உறுப்பினர் அத்தகைய இலங்கை வலயங்கள் சபை கூட்டங்களுக்கு தலைமை வகித்தல் வேண்டும்.

(6) இந்த பிரிவின் முந்தைய ஏற்பாடுகளின் பிரகாரம், இலங்கை வலயங்கள் சபை கூட்டங்களை நடாத்துதல், அவற்றிற்கான அழைப்பு விடுத்தல், தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை இலங்கை வலயங்கள் சபை ஒழுங்குபடுத்தலாம். அத்தோடு அத்தகைய கூட்டங்களுக்கான அலுவல்களையும் ஒழுங்கு படுத்தலாம்.

ஏதேனும் வெற்றிடத்தின் காரணமாக பெறுமதியற்றது என கருதக்கூடாத பொ.ஆ. சபை நடவடிக்கைகள் அல்லது செயல்கள்

**72.** தனது உறுப்பினர்கள் மத்தியில் ஏதேனும் வெற்றிடம் எவ்வாறு இருந்த பொழுதிலும், மற்றும் இலங்கை வலயங்கள் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கைகள் தனது உறுப்பினர்கள் மத்தியில் வெற்றிடத்தின் காரணமாக மாத்திரம் அல்லது உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் காணப்படும் ஏதேனும் குறைபாடுகளின் காரணமாக மாத்திரம் பெறுமதியற்றதாக அல்லது பெறுமதியற்றதாக கருதப்படக் கூடாது.

பொ.ஆ. சபை உறுப்பினர்களுக்கான ஊதியம்

**73.** நிதி விடயம் வழங்கப்பட்ட அமைச்சரின் ஒருங்கிணைவுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட்டவாறு தீர்மானிக்கப்பட்ட விதத்தில் அத்தகைய தீர்மானிக்கப்பட்ட முறையில் இலங்கை வலயங்கள் சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோருக்கு அத்தகைய ஊதியத்தை செலுத்தலாம்.

பொருளாதார ஆணைக்குழுவின் முத்திரை

**74.** (1) இலங்கை வலயங்களின் முத்திரையை இலங்கை வலயங்கள் சபையினால் தீர்மானிக்கலாம்.

(2) இலங்கை வலயங்களின் முத்திரையானது பின்வருமாறு -

(அ) இலங்கை வலயங்கள் வலயங்களினால் தீர்மானிக்கப் பட்டதன் படி அத்தகைய முறையில் மாற்றலாம்;

(ஆ) இலங்கை வலயங்கள் அவ்வப்பொழுது தீர்மானிக்கின்ற தன் படி அத்தகைய ஆள் அல்லது ஆள்களின் பாதுகாப்பில் வைத்திருக்கலாம்.

(3) இலங்கை வலயங்கள் சபையின் அனுமதி மற்றும் தவிசாளர் மற்றும் இலங்கை வலயங்களின் மற்றுமொரு உறுப்பினர் பிரசன்னத்தை தவிர ஏதேனும் கருவிகள் அல்லது ஆவணத்துடன் பொருளாதார ஆணைக்குழுவின் முத்திரை பொருத்தப்படக் கூடாது. அத்தோடு தமது பிரசன்னம் பற்றி கருவியில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிட வேண்டும்:

ஆயின் ஏதேனும் கருவி அல்லது ஆவணத்தில் பொருளாதார ஆணைக்குழுவின் முத்திரை பதிக்கப்படுகின்ற தருணத்தில் தவிசாளரினால் சமூகமளிக்க முடியாதவிடத்து தவிசாளரினால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட இலங்கை வலயங்கள் சபையின் வேறு எவரேனும் உறுப்பினர் அதன் சார்பாக அத்தகைய கருவியில் அல்லது ஆவணத்தில் இதன் உட்பிரிவின் முந்தைய ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பமிடுவதற்கு தகைமை படைத்தவராவார்.

(4) கருவிகள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான பதிவுப் புத்தகம் ஒன்றை இலங்கை வலயங்கள் சபை பேணுதல் வேண்டும். இதில் இலங்கை வலயங்களின் முத்திரை பதிக்கப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் XVIII

## பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் இலங்கை வலயங்கள் சபை பணியாட்டொகுதியினர்

இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர்

**75.** (1) பொருளாதார ஆணைக்குழுவின் ஆலோசனைப் படி இலங்கை வலயங்கள் சபையினால் நியமிக்கப்பட்ட இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் (இதன் பின்னர் "இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் என அழைக்கப்படுவார்) இருத்தல் வேண்டும். இவரே இலங்கை வலயங்களின் கணக்கீட்டு அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(2) இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் இலங்கை வலயங்கள் சபையின் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகள் மற்றும் கட்டுப்பாட்டின் பிரகாரம் பின்வருமாறு இருத்தல் -

(அ) நிருவாகம் மற்றும் பணியாட்டொகுதியினரை கட்டுப்படுத்தல் உள்ளடங்கலாக இலங்கை வலயங்களின் அலுவல்களை நிருவாகம் செய்வதற்கு பொறுப்பாக இருத்தல்;

(ஆ) இலங்கை வலயங்கள் சபையின் சகல தீர்மானங்களையும் நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக இருத்தல்;

(இ) இலங்கை வலயங்கள் சபையினால் அவருக்கு வழங்கப்பட்டதன் படி அத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

(3) இலங்கை வலயங்கள் சபையின் ஏதேனும் கூட்டங்களில் பங்குபற்றி உரையாற்று வதற்கான அருகதை இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு இருத்தல் வேண்டும், ஆயின் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கான உரித்து அவருக்கு இல்லை.

(4) இலங்கை வலயங்கள் சபையானது இப்பாகத்தின் கீழ் அத்தகைய அதனது தத்துவங்கள், கடமைகள், பணிகள்

ஆகியவற்றை தீர்மானிக்கின்றவாறு இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர், இலங்கை வலயங்களின் எவரேனும் அலுவலர் மற்றும் இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர், இலங்கை வலயங்களின் அலுவலர் அல்லது இலங்கை வலயங்களினால் வேலைக்கு அமர்த்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த பதவியை வகிக்கின்ற ஆள் ஆகியோருக்கு கையளிக்கலாம். இவர்கள் இலங்கை வலயங்களின் பணிப்புரை மற்றும் மேற்பார்வை ஆகியவற்றின் பிரகாரம் அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பயன்படுத்துதல், செயலாற்றுதல், நிறைவேற்றுதல் ஆகியவற்றை செய்யலாம்.

(5) இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் இலங்கை வலயங்கள் சபையின் ஒப்புதலுடன், இலங்கை வலயங்களின் ஏதேனும் நிருவாகப் பிரிவு அல்லது அலுவலகம் அல்லது ஊழியரை எழுத்து மூலமாக கையளிக்கலாம், அவ்வப்போது அவசியமானது என பரிசீலிக்கின்ற இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அத்தகைய தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை கையளிப்பதுடன் அத்தகைய நிருவாகப் பிரிவு அல்லது அலுவலகம் அல்லது அலுவலர் அல்லது ஊழியர் யாருக்கு அத்தகைய தத்துவங்கள், கடமைகள், பணிகள் கையளிக்கப்பட்டதோ அவர் அதற்கு பொறுப்பாக இருப்பதுடன், இலங்கை வலயங்கள் சபை அல்லது இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் ஆகியோரது பணிப்புரை மற்றும் மேற்பார்வையின் பிரகாரம் அவற்றை பிரயோகிக்கலாம்.

(6) இப்பாகத்தின் கீழ் தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றுதல், நிறைவேற்றல் ஆகியவற்றுக்கு இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் பொறுப்பாக இருப்பதுடன் இலங்கை வலயங்கள் சபைக்கு பதிலளிக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

(7) இலங்கை வலயங்களின் கலந்தாராய்வுடன் (8) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலரை பதவியிலிருந்து அமைச்சர் நீக்கலாம் -

(அ) தனது கடமைகளை செயலாற்றுவதற்கு நிரந்தரமாக ஆற்றலற்றவராக வருகின்ற பொழுது;

(ஆ) இலங்கை வலயங்கள் சபையின் கருத்துப் படி ஏதேனும் மோசடியான அல்லது சட்டவிரோதமான பண்புடைய அல்லது இலங்கை வலயங்களின் நலன்களுக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளை அவர் மேற் கொண்ட பொழுது; அல்லது

(இ) சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக ளுக்கு இணங்க தவறும் பட்சத்தில்.

(8) ஏழாம் உட்பிரிவின் கீழ் அகற்றுவதற்கு முன்னர், அவர் பதவியிலிருந்து ஏன் விலக்கப்படக் கூடாது என்பதற்கான காரணிகளை தெரிவிக்கும் படி எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றை இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் வழங்குதல் வேண்டும் மற்றும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக கருத்துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

(9) இறப்பு, (7) ஆம் உட்பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றுதல் அல்லது அப்பதவியை வகிப்பவர் அமைச்சருக்க முகவரியிட்டு பதவிவிலகல் கடிதத்தை சமர்ப்பித்தல் ஆகியவற்றின் படி இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலரின் பதவி வெற்றிடமாகின்றது.

(10) இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படுகின்ற பொழுது, அமைச்சரானவர், இலங்கை வலய சபையின் கலந்தாராய்வுடன், (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமனம் ஒன்று மேற்கொள்ளப்படும் வரை இலங்கை வலயங்கள் சபையின் பிரதான நிறைவேற்று அலுவலரின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றுதல், நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்காக சபையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம்.

(11) பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாராய்வுடன் இலங்கை வலயங்கள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் அத்தகைய ஊதியத்தை பிரதான நிறைவேற்று அலுவலருக்கு வழங்க முடியும்.

இலங்கை வலயங்கள் சபையின் பணியாட் டொகுதியினர்

**76.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் தனது கடமைகள் மற்றும் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்காக அதனது கடமைகளை வினைத்திறன்மிக்க முறையில் நிறைவேற்றுவதற்கு அவசியமானது என பரிசீலிக்கின்ற பதவிநிலைகளை உருவாக்கி அலுவலர்களையும் ஊழியர்களையும் இலங்கை வலயங்களினால் வேலைக்கு அமர்த்தலாம்.

(2) இலங்கை வலயங்கள் சபையானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம் -

(அ) அத்தகைய ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் தொடர்பான வேலைக்கான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல்;

(ஆ) நிதி விடயம் வழங்கப்பட்ட அமைச்சரின் கலந்தாராய்வுடன் அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்தல்

(இ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளை பிரயோகித்தல்;

(ஈ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஏற்புடைய ஒழுக்காற்றுக் கோவையொன்றை நடைமுறைப்படுத்தல்.

(3) (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சகல விதமான அல்லது ஏதேனும் விடயம் தொடர்பான விதிகளை இலங்கை வலயங்கள் சபை உருவாக்கலாம்.

(4) முதலீடு, வியாபாரம், ஏனைய தொடக்ஷபுடைய விடயங்கள் ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப ஆளணியினரை பயிற்சிகளை மேம்படுத்தி அதற்கான அனுசரணைகளை இலங்கை வலயங்கள் முகாமைத்துவம் மேற்கொள்ளலாம். இந்த நோக்கத்திற்காக அத்தகைய அலுவலர்களுக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் செலவுகளை செலுத்துவதற்கான அங்கீகாரத்தை இலங்கை வலயங்களுக்கு வழங்குதல் வேண்டும்.

(5) பின்வரும் சந்தர்ப்பங்களில் இலங்கை வலயங்களானது இலங்கை வலயங்களின் பணியாட்டொகுதிக்கு அத்தகைய எந்த நபரையும் நியமித்தல் கூடாது, அத்தகைய ஆள் -

(அ) சிவில் நீதிமன்றம் அல்லது நியாய சபையினால் குற்றமொன்றிற்காக அல்லது கடும் மோசமான நடத்தைக்காக ஏற்கனவே குற்றவாளியாக காணப்படும் பட்சத்தில் அல்லது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஒழுங்கு படுத்தினரினால் ஒழுங்கு படுத்தல், நன்னடத்தை கோவை அல்லது ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாகியிருத்தல்; அல்லது

(ஆ) இப்பாகம் அல்லது ஒழுங்குவிதிகள் அல்லது விதிகள் அல்லது அதனோடு மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகள் ஆகியவற்றை அல்லது அவற்றின் ஏற்பாடுகளை மீறியிருத்தல்

*அரசாங்க அலுவலர்களை இலங்கை வலயங்கள் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்*

**77.** (1) இலங்கை வலயங்களின் கோரிக்கையின் படி அரசாங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அலுவலர் மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் சம்மதத்துடன் தற்காலிகமாக இலங்கை வலயங்களின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படலாம். அத்தகைய காலப்பகுதியானது இலங்கை வலயங்களினால் தீர்மானிக்கலாம் அல்லது அத்தகைய பணியாளரின் சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) அரசாங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் தற்காலிகமாக இலங்கை வலயங்களின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுகின்ற பொழுது, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 14 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளானது அத்தகைய அலுவலர் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(3) அரசாங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் நிரந்தரமாக இலங்கை வலயங்களின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுகின்ற பொழுது, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 14 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளானது அத்தகைய அலுவலர் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(4) அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்ட நபரை இலங்கை வலயங்கள் வேலைக்கு அமர்த்துகின்ற பொழுது குறிப்பிட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதற்கு அவர் இணங்குகின்ற பொழுது, அந்த ஆள் எவ்வளவு காலம் பொருளாதார ஆணைக்குழுவில் பணி யாற்றுகின்றாரோ, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுகின்ற நோக்கத்திற்காக அந்த ஆள் அரசாங் கத்திற்கு சேவையாற்றியவராக கருதப்படுவார்.

## அத்தியாயம் XIX

## நிதி

*இலங்கை வலயங்களின் நிதி முகாமைத்துவம்*

**78.** (1) இலங்கை வலயங்களின் நிதி முகாமைத்துவம் மற்றும் இப்பாகத்தின் 79 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்ட நிதியத்தின் உரிய தொழிற்பாடு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றிற்கு இலங்கை வலயங்கள் சபை பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

*இலங்கை வலயங்களின் நிதியம்*

**79.** (1) இலங்கை வலயங்கள் அதன் சொந்த நிதியத்தை கொண்டிருத்தல் வேண்டும். (இப்பாகத்தில் "இலங்கை வலயங்கள் நிதியம்" என அழைக்கப்படும்).

(2) இலங்கை வலயங்கள் நிதியத்திற்கு பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும்-

(அ) இலங்கை வலயங்களின் பயன்பாட்டிற்காக பாராளு மன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடிய அத்தகைய சகல பணம்;

(ஆ) இப்பாகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நேரடியாகவோ அல்லது நிறுவனங்கள் மூலமாகவோ அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றுகை செய்தல், நிறை வேற்றல் மூலமாக இலங்கை வலயங்களிற்கு கிடைக்கப் பெற்ற அத்தகைய சகல விதமான பணம்;

(இ) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் கட்டணங்களாக செலுத்தப்பட்ட அத்தகைய சகல விதமான பணம்;

(ஈ) வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது முகவராண்மைகளிடமிருந்து மற்றும் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே இருபுடை மற்றும் பல்புடை முகவராண்மைகளிடமிருந்து அபிவிருத்தி உதவியாகப் பெறப்பட்ட பணங்களின் எல்லா அத்தகைய தொகைகளும்:

ஆயின் எவ்வாறாயினும், இலங்கை வலயங்கள் இப்பந்தியின்கீழ் பெறப்பட்ட எல்லா வெளிநாட்டு உதவி தொடர்பிலும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் முன்னதான எழுத்திலான அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்;

ஆயின் இலங்கை வலயங்களானது இந்த பந்தியின் கீழ் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு கொடைகள், பரிசுகள், நன்கொடைகள் தொடர்பில் வெளிநிலை வளங்கள் திணைக்களத்திடமிருந்து முன்கூட்டியே எழுத்து மூலமான ஒப்புதலை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(3) இலங்கை வலயங்கள் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) இப்பாகத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் தனது தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றல், நிறைவேற்றல் தொடர்பில் இலங்கை வலயங்களிற்கு ஏற்பட்ட செலவுகளை கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவையான சகல பணம்; மற்றும்

(ஆ) 14 ஆம் பிரிவின் (க) பந்தியின் கீழ் பொருளாதார ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு இப்பாகத்தின் கீழ் ஏதேனும் அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்காக இலங்கை வலயங்களினால் அறவிடப்பட்ட கட்டணங்களின் பத்து சதவீதம்.

(4) இலங்கை வலயங்களிற்கு சொந்தமான பணத்தை இலங்கை வலயங்கள் சபையினால் தீர்மானிக்கப்பட்டதன் படி அத்தகைய முறையில் இலங்கை வலயங்களானது முதலீடு செய்யலாம்.

இலங்கை வலயங்களின் நிதியாண்டும், கணக்குகளின் கணக்காய்வும்

**80.** (1) இலங்கை வலயங்களின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) இலங்கை வலயங்களின் வருமானமும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புகளும் மற்றும் அதன் வேறெல்லா நிதிசார் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனை இலங்கை வலயங்கள் செய்வித்தல் வேண்டும்.

(3) அரசாங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதுடன் தொடர்புடைய அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் இவ்வலுவலகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கும் ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(4) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் கூற்றுகளை கணக்காய்வாளரின் அறிக்கையுடன் சேர்த்து பாராளு மன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சருக்கு இலங்கை வலயங்கள் சபை சமர்ப்பித்தல் வேண்டும்.

## அத்தியாயம் XX

### முதலீட்டு வலயங்கள் தளத் தெரிவு

தளத் தெரிவு மற்றும் முதலீட்டு வலயங்களை தாபித்தல்

**81.** (1) பொருளாதார ஆணைக்குழுவினால் உருவாக்கப் பட்ட முதலீடு, சர்வதேச வியாபாரம், ஏற்றுமதிகள் மற்றும் முதலீட்டு வலயங்கள் தொடர்பான தேசியக் கொள்கைகள் இலக்கினை வெற்றிகரமாக அடைவதை இலகுபடுத்தும் முகமாக தேவைப்பாடுகள் தொடர்பான ஆய்வினை மேற்கொள் வதற்காக பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனை யுடன் இலங்கை வலயங்கள் சபை நடவடிக்கைகளை மேற் கொள்ளல் வேண்டும்.

(2) ஆய்வின் கண்டறிதல்களை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டு வலயங்களை தாபிப்பதற்கான விதப்புரைகளை பொருளாதார ஆணைக்குழுவிற்கு இலங்கை முதலீட்டு வலயங்கள்

சபை வழங்குதல் வேண்டும். அத்தகைய விதப்புரைகள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) ஏதேனும் முதலீட்டு வலயத்தை தாபிப்பதற்கான வியாபார ரிதியான நியாயப்பாடுகள்;

(ஆ) தளத் தெரிவு மற்றும் இடம்;

(இ) அத்தகைய முதலீட்டு வலயத்தினுள் இலக்காகக் கொண்டு மேம்படுத்தப்பட்டு தாபிக்கப்பட்ட அத்தகைய பிரேரிக்கப்பட்ட துறை சார்ந்த பணிகள்;

(ஈ) அத்தகைய முதலீட்டு வலயங்களில் முதலீடுகளை தாபித்து அவற்றை தொழிற்படுத்துவதற்கு அவசிய மான ஒப்புதல்கள் மற்றும் அதிகாரமளித்தல்கள்;

(உ) அத்தகைய முதலீட்டு வலயங்களுள் முதலீட்டாளர்கள் தாபிப்பதற்கு அவசியமான ஊக்குவித்தல்கள் மற்றும் விலக்களித்தல்கள் ஆகியவற்றை அனுமதித்தல்;

(ஊ) அத்தகைய முதலீட்டு வலயங்கள் சுமுகமாகவும் வினைத்திறன்மிக்க முறையிலும் தொழிற்படுவதை இயலுமையாக்கும் வகையில் நிறுவன ரிதியான வரைவுச் சட்டகம் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கத்திற்காக அரசாங்கம் அல்லது ஏதேனும் உள்ளூராட்சி சபை அல்லது நிறுவனங்களிடமிருந்து அவசியப்படுகின்ற ஏதேனும் துணை உதவிச் சேவைகள்;

(எ) அத்தகைய முதலீட்டு வலயங்களை தொழிற்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்கின்ற முறைகள், நேரடியாக இலங்கை வலயங்கள் சபை மூலமாகவா அல்லது தனியார் துறை உள்ளடங்கலாக வேறு மூன்றாம் தரப்புடன் கூட்டிணைந்து செயற்படுவதா அல்லது முகாமைத்துவ உடன்படிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதா;

(ஏ) அத்தகைய முதலீட்டு வலயங்களினுள் எவரேனும் பாவனையாளர்கள் மீது விதிப்பனவு செய்யப்பட்ட

அல்லது விதிக்கப்படக் கூடியவாறான எவையேனும் அறவீடுகள் அல்லது விதிப்பனவுகள்;

(ஐ) அத்தகைய முதலீட்டு வலயங்களை தாபித்து தொழிற்படுத்துவதற்கு பொருத்தமான ஏனைய ஏதேனும் விடயங்கள்.

(3) முதலீட்டு வலயத்தை தாபிப்பதற்கான ஒப்புதலை அமைச்சரவை வழங்கியதன் பின்னர் (450 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளற் சட்டம் அல்லது நன்கொடை அல்லது குத்தகை ஆகியவற்றின் அடிப்படையில் (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் இலங்கை முதலீட்டு வலயங்கள் சபைக்கு அவற்றை கையளிப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் மேற்கொள்ளலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின் பிரகாரம் கையளிக்கப்பட்ட ஏதேனும் காணி மற்றும் இலங்கை வலயங்கள் சபைக்கு கையளிக்கப்பட்ட காணி ஆகியன பொது நோக்கத்திற்காக வழங்கப்பட்டவைகளாக கருதப்படும்.

முதலீட்டு வலயங்களை தாபித்தல்

**82.** மற்றவற்றிற்கிடையில் பின்வருவனவற்றையும் உறுதிப் படுத்தி முதலீட்டு வலயங்களை தாபிப்பதற்கு பொறுப்பாக இலங்கை வலயங்கள் சபை இருத்தல் வேண்டும் -

(அ) முதலீட்டு வலயங்கள் தொழிற்படுவதற்கான அவசியமான ஒழுங்குவிதி நிறுவன ரிதியான மற்றும் பௌதீக ரீதியான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதுடன் பொருத்தமான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், இவற்றுள் தள திட்டங்களை தயாரித்தல், முதலீட்டு வலயத்தினுள் காணப்படுகின்ற முதலீடுகளின் தொழிற்பாட்டினை இலகுபடுத்தும் நோக்கத்திற்காக அவசியமான ஏனைய உட்கட்ட மைப்பு சேவைகள் பொருட்களை வழங்குதல் ஆகியன உள்ளடங்கிய பொழுதிலும் இவற்றிற்கு மாத்திரம் இவை மட்டுப்படுத்தபட்டவை அல்ல;

(ஆ) முதலீட்டு வலயங்களின் பணிகள் தொடர்பில் தொடர்ச்சியான தத்துவங்களைக் கொண்ட சகல சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளிடமிருந்தும் முன் விடுவித்தல்களையும் ஒப்புதல்களையும் பெற்றுக் கொள்ளல்;

(இ) ஒழுங்குவிதிகள் மூலமாக அமைச்சரினால் பணிகளை தொழிற்படுத்துவதற்கான விதிகள் மற்றும் நடைமுறைகள் ஆகியன அமைச்சரினால் உரிய முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல்;

(ஈ) முதலீட்டு வலயங்களை தாபித்தல், தொழிற் படுத்துதல், முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றுக்க அவசியமானது என கருதுகின்ற உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல். இவை அத்தகைய தரப்பினர் அரசாங்கம் அல்லது தனி ஆட்கள் அல்லது நிறுவனங்களாக இருக்கலாம்; அத்துடன்

(உ) முதலீட்டு வலயத்தினுள் எவரேனும் ஆளுக்கு வழங்கப்படுகின்ற ஏதேனும் சேவைகளுக்கான விதிப்பனவு, கட்டணம் தொடர்பான திட்டங்களை உருவாக்குதல்.

*முதலீட்டு வலயங்களை தொழிற்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்*

**83.** பொருளாதார ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இலங்கை வலயங்கள் சபையானது அத்தகைய முதலீட்டு வலயங்கள் தொழிற்படுத்தப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுகின்ற கட்டமைப்பு முறைகளை தீர்மானித்தல் வேண்டும். இலங்கை வலயங்கள் சபை மற்றும் பொருளாதார ஆணைக்குழுவின் தற்றுணிவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் அத்தகைய முதலீட்டு வலயங்களை சபை அல்லது மூன்றாம் தரப்புகளுடன் கூட்டிணைந்து (உள்ளூர் அல்லது வெளிநாடு) அல்லது முகாமைத்துவ உடன்படிக்கைகள் அடிப்படையில் முகாமைத்துவம் செய்யலாம்.

*முதலீட்டு வலயங்கள் அபிவிருத்தியாளர் அல்லது தொழிற்பாட்டாளரது உரிமைகள் மற்றும் கடப்பாடுகள்*

**84.** (1) முதலீட்டு வலயங்களின் அபிவிருத்தியாளர் அல்லது தொழிற்பாட்டாளருக்கு பின்வரும் உரிமைகள் இருத்தல் வேண்டும் -

(அ) இலங்கை வலயங்கள் சபையின் ஒருங்கிசைவுடன் செயற்படுதல் அல்லது நியமித்தல், அத்தகைய ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய விதிக்கப்பட்ட அனுமதிப்பத்திர தேவைப்பாடுகள் ஆகியவற்றின் பிரகாரம் முதலீட்டு வலய தொழிற்பாட்டாளர் அதன்

சார்பாக முதலீட்டு வலயங்களின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்தை முதலீட்டு வலய தொழிற் பாட்டாளர் பொறுப்பேற்றல்;

(ஆ) உரிமம் பெற்ற முதலீட்டு வலய தொழில்முயற்சி யாளர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு குத்தகை, உப குத்தகை, ஆகியவற்றிற்கு காணிகள் மற்றும் கட்டிடங்களை வழங்குதல். மேலும் வழங்கப் படுகின்ற ஏனைய சேவைகளுக்கான கட்டணங்கள் மற்றும் விதிப்புகளை அறவிடல்;

(இ) முதலீட்டு வலய காணிகள் அல்லது ஏனைய சொத்துக்களை பெற்றுக் கொள்ளல்;

(ஈ) ஏற்புடையதான ஒழுங்குவிதிகள், சட்டங்கள், அதனது முதலீட்டு அனுமதிப்பத்திரங்கள் ஆகியவற்றிற்கு ஒத்திசைவாக வலயங்கள் காணிகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல், தொழிற்படுத்துதல், சேவைகளை வழங்குதல்;

(உ) அனுமதிப் பத்திரங்களின் பிரகாரம் முதலீட்டு வலயத்தில் பயனீடுகள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல் மற்றும் அத்தகைய சேவைகளுக்கான கட்டணங்களை அறவிடல்;

(ஊ) ஏற்புடைய எழுதப்பட்ட சட்டங்களின் பிரகாரம் முதலீட்டு வலயத்திற்கு வெளியே பயன்பாடுகள் மற்றும் சேவைகளை வழங்குதல்;

(எ) தளத்தின் உள்ளே மற்றும் தளத்திற்கு வெளியே உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடங்கலாக முதலீட்டு வலய காணிகள் மற்றும் ஏனைய சொத்துக்களை அபிவிருத்தி செய்தல், தொழிற்படுதல், சேவை வழங்குதல் ஆகியவற்றுக்காக மூன்றாம் தரப்புகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்;

(ஏ) எவ்வித சட்ட ரீதியான தடைகளோ மட்டுப்பாடுகளோ அற்ற நிலையில் நிதி, கடன்கள், உத்தரவாதங்கள், ஏனைய நிதி ரீதியான வளங்களை பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நிதி சார் சந்தைகளில் பிரவேசித்து சுயாதீனமாக பங்குபற்றல்; மற்றும்

(ஐ) அனுமதிப் பத்திரங்களையுடைய முதலீட்டு வலயங்கள் தொடர்பில் வாய்ப்புள்ள முதலீட்டாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மத்தியில் விளம்பரம் செய்து மேம்படுத்துதல்.

(2) முதலீட்டு வலய அபிவிருத்தியாளர் ஒருவர் விதிக்கப்பட்ட முறையில் நடந்து கொள்ளல் வேண்டும் -

(அ) இலங்கை வலயங்கள் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் பிரகாரம் இலகுபடுத்தல் களை மேற்கொள்வதுடன் முதலீட்டு வலய தளத்தில் அத்தகைய பௌதீக அபிவிருத்தி வேலைகள் அல்லது அத்தகைய மேம்பாடுகளை மேற்கொள்ளல்;

(ஆ) வலயத்தினுள் நுழைகின்ற அல்லது வலயத்திலிருந்து வெளியேறுகின்ற ஆட்கள், ஊர்திகள், கலங்கள், பண்டங்கள் ஆகியவற்றை நகர்த்துவதற்கான பொருத்தமான ஏற்பாடுகளுடன் கூடிய வருமானத்தை பாதுகாப்பதற்காக சுங்கப் பகுதியிலிருந்து வலயத்தை தனியாக பிரிப்பதற்கு போதுமான வசதிகளை வழங்குதல்;

(இ) அனுமதிப் பத்திரத்தில் இலங்கை வலயத்தினால் தீர்மானிக்கப்பட்டதன் படி தளத்திற்கு போதியளவு பாதுகாப்பினை வழங்குதல் அல்லது அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

(ஈ) பாதுகாப்பான மற்றும் வினைத்திறன்மிக்க வியாபார தொழிற்பாடுகளை மேம்படுத்துகின்ற முதலீட்டு வலயத்தினுள் ஒழுங்குவிதிகளை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தல்;

(உ) அதன் பணிகள், தொழில் வாய்ப்பு புள்ளிவிபரங்கள், வியாபாரம் தொடர்பான போதியளவு முறையான கணக்குகள் மற்றும் பதிவுகளை பேணுதல், அத்துடன் வலய பணிகள், செயலாற்றுகைகள், அபிவிருத்தி

தொடர்பில் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு ஒரு முறை இலங்கை வலயத்தினால் தேவைப்படுத்தப்பட்டதன் படி இலங்கை வலயங்கள் சபைக்கு அறிக்கையிடல்; மற்றும்

(ஊ) சகல குத்தகைகளையும் இலங்கை வலயங்கள் சபையுடன் பதிவு செய்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (உ) பந்தியின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட கணக்குகள் மற்றும் பதிவுகள் ஆகியவற்றை ஏதேனும் அரச கரும மொழிகளில் பேணப்படுதல் வேண்டும்.

(4) போதியளவு முறையான கணக்குகள் மற்றும் இந்த பிரிவில் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் ஏனைய பதிவுகள் ஆகியவற்றை பேணுவதற்கு தவறிய அல்லது இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு இணங்க தவறிய முதலீட்டு வலய அபிவிருத்தியாளர் ஒருவர் அல்லது தொழிற்பாட்டாளர் ஒருவர் தவறு புரிந்தவராவார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது பத்தாயிரம் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகைக்கு குறையாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை இரண்டிற்கும் பொறுப்பாதல் வேண்டும்.

தொழினுட்ப குழுக்கள்

**85.** இலங்கை வலயங்கள் சபையானது அதனது தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறைக்கு அவசியமானது என கருதுகின்ற ஏதேனும் தொழில்நுட்ப குழு அல்லது நிபுணர்களை நியமிக்கலாம்.

வெளிப்படைத் தன்மை

**86.** (1) (அ) முதலீட்டாளர்கள் அத்தகைய தகவல்களையும் விடயங்களையும் இலகுவாக அணுகிப் பெற்றுக் கொள்வதற்காக தனியான இணையத்தளம் ஒன்றில் அனைத்து சட்டங்கள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள், விதிகள், மற்றும் சட்ட ரீதியாக அனுமதிக்கும் பட்சத்தில், தீர்ப்புகள் மற்றும் ஏனைய நிருவாக ரீதியான விதிகள் ஆகியவற்றை வெளியிடுவதற்கான முயற்சிகளை இலங்கை வலயங்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

(ஆ) தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னர், சட்டங்களை ஏற்றுக் கொள்ளல், ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரைகள் அல்லது முதலீட்டாளர்கள் என்ற முறையில் அவர்களது உரிமைகளை தாக்குகின்ற கட்டளைகள் உள்ளடங்கலாக பிரதிநிதித்துவங்களை மேற்கொள்வதற்கான போதியளவு வாய்ப்புகளை முதலீட்டு வலயங்களிலுள்ள முதலீட்டாளர்களது உரிமைகளை வழங்குவதற்கு இலங்கை வலயங்களுடன் ஆலோசித்தல் வேண்டும்.

(2) ஏதேனும் முதலீட்டாளர் அல்லது முதலீட்டு எதிராக ஏதேனும் நிருவாக ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் பட்சத்தில் எவரேனும் பிரசைக்கு வழங்கப்பட்ட சகல விதமான உரிமைகள், செயன்முறைகள், உரிய செயன்முறைகள் போன்றன அத்தகைய செயன்முறைகள் தொடர்பான சட்டத்தின் கீழ் முதலீட்டாளர் மற்றும் அத்தகைய முதலீடுகள் வழங்கப்படுதல் வேண்டும்.

*இலங்கை வலயங்கள் சபை மற்றும் முதலீட்டாளர் களுக்கிடை யிலான பிணக்குகளை தீர்த்தல்*

**87.** (1) முதலீட்டு வலயத்தினுள் முதலீட்டாளர்களுக்கும் முதலீட்டு வலய சபைக்குமிடையில் ஏதேனும் பிணக்குகள் ஏற்படுகின்ற பொழுது சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மத்தியில் கலந்தாலோசனைகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு உடனடியாக சுமுகமாக அவை தீர்க்கப்படுதல் வேண்டும்.

(2) சுமுகமான தீர்வை அடைய முடியாத பொழுது எவரேனும் முதலீட்டாளர் இலங்கையின் சட்டங்களின் கீழ் ஏனைய அனைத்து பரிகார முறைகளையும் பிரயோகிப்பதற்கு உரிமையுடையவர்:

*வேலையாட்கள் பிணக்குகள்*

**88.** இலங்கை வலயங்கள் தொழிலாளர் பிணக்குகள் மற்றும் முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு வலயங்களினுள் தொழிலிலமர்த்தப்பட்ட வேலையாட்கள் இடையிலான பிணக்குகளின் விரைவான தீர்வுக்கான ஏற்பாடுகளைச் செய்தல். மாற்றீடான பிணக்குத் தீர்வுமுறைசார் அல்லது பிணக்குத் தீர்வின் வேறேதேனும் வழிவகைகள் போன்ற பொறிமுறைகளை ஒழுங்குவிதிகள் என்ற வகையாக விதித்துரைக்கலாம்.

ஊக்குவிப்புகள்

**89.** இலங்கை வலயங்கள் காலத்துக்குக்காலம் முதலீட்டு வலயங்களினுள் முதலீட்டாளர்களுக்கு நிருவாக ஊக்கு விப்புகள் மற்றும் அளிக்கப்பட வேண்டிய இப்பாகத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் சட்டங்களிலிருந்து விலக்களிப்புகள் என்பவற்றிற்கு பொருளாதார ஆணைக்குழு வுக்கு விதப்புரை செய்யலாம்.

## அத்தியாயம் XXI

### பொதுவான ஏற்பாடுகள்

ஒப்புதல்களை துரிதப்படுத்து வதற்காக பொருளாதார ஆணைக் குழுவின் விசேட தத்துவங்கள்

**90.** (1) முதலீட்டு மேம்பாட்டு வலயத்தினுள் முதலீடு ஒன்றை மேற்கொள்வதற்காக இலங்கை வலயங்கள் சபைக்கு முதலீட்டாளர் ஒருவர் விண்ணப்பிக்கின்ற பொழுது முதலீட்டு ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்த முதலீட்டாளர் ஒருவர் அல்லது பொருளாதார ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட முதலீடு ஒன்று ஆகியவற்றுக்கு ஏதேனும் ஒப்புதல்கள் அதிகாரமளித்தல்கள் அல்லது அனுமதிகள் ஆகியன அமைச்சர்கள், அரசாங்க திணைக்களங்கள், நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், ஒழுங்கமைப்பு அலுவலர்கள் அல்லது அமைச்சரின் விதப்புரையுடன் அமைச்சரவையினால் பெயரிடப் பட்ட அமைப்புகள் மற்றும் இப்பாகத்தின் கீழ் ஒழுங்குவிதி களினால் விதிக்கப்பட்டவைகள் (இதன் பின்னர் "குறித்துரைக் கப்பட்ட நிறுவனங்கள்" என அழைக்கப்படும்) அத்தகைய ஒப்புதல்கள், அதிகாரமளித்தல்கள் அல்லது அனுமதிகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துவதற்கு இலங்கை வலயங்களிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி அங்கீகாரம், அதிகாரமளித்தல் அல்லது அனுமதி தொடர்பில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பொருளாதார ஆணைக்குழு விசாரணையொன்றை அல்லது கோரிக்கையை மேற்கொள்ளும் பொழுது, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட

நிறுவனமானது அத்தகைய விசாரணை அல்லது கோரிக்கை தொடர்பில் சம்மதத்தை தெரிவித்து அல்லது ஆட்சேபனையை தெரிவித்து அத்தகைய விசாரணை மற்றும் அல்லது கோரிக்கை தொடர்பில் அத்தகைய விசாரணை அல்லது கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் பதிலளிப்பதற்கு கடப்பாடுடையது. குறித்துரைக்கப்பட்ட நிறுவனமானது அத்தகைய விசாரணைக்கு பதிலளிக்க மறுத்தால் கோரிக்கை தொடர்பில் தவறினால் அவ்வாறு மறுத்தமைக்கான அல்லது தவறியமைக்கான காரணத்தை எழுத்து மூலம் பதினைந்து நாட்களுக்குள் தெரிவித்தல் வேண்டும்.

(3) சகல குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களும் இலங்கை வலயங்கள் தனது பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலுமை யாக்குகின்ற வகையிலும் அதன் நோக்கத்தை அடையக் கூடிய விதத்தில் கூட்டிணைந்து செயற்படுவதற்கு தேவைப்படுத்தப் பட்டுள்ளன.

(4) இப்பாகத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் படி அமைச்சர், அத்தகைய கூட்டிணைவுகளுக்கான நடைமுறைகளை விதிக்கலாம், கலந்தாலோசனை செயன்முறை மூலம் இலங்கை வலயங்களினால் உருவாக்கப்பட்ட முதலீட்டு கருத்திட்டங்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல் தொடர்பான நிலையியல் தொழிற்பாட்டு செயன்முறைகளின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினால் இணங்குதல் வேண் டும்.

(5) (2) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் விசாரணை அல்லது கோரிக்கை ஒன்றுக்கு பதிலளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் மறுக்கின்ற அல்லது புறக்கணிக்கின்ற பொழுது இலங்கை வலயங்கள் பொருத்தமானது என கருதுகின்ற பட்சத்தில், ஒப்புதல் அதிகாரமளித்தல் அனுமதி ஆகியவற்றுக்கான அத்தகைய கோரிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக அமைச்சர் அவற்றை அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

பொருளாதார ஆணைக் குழுவின் உறுப்பினர்கள், அலுவலர்கள், ஏனைய ஊழியர்கள் ஆகியோரை அரசாங்க சேவையாளர் களாக கருதுதல்

***91.*** இலங்கை வலயங்கள் சபையின் சகல உறுப்பினர்கள், இலங்கை வலயங்களின் பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் ஏனைய அலுவலர்கள், ஏனைய இலங்கை வலயத்தின் ஊழியர்கள் ஆகியோர் தண்டனைச் சட்டக் கோவை நோக்கங்களுக்காக (அத்தியாயமான 19) அர்த்தப்பாட்டினுள் பகிரங்க சேவையாளர் களாக கருதப்படுதல் வேண்டும்.

இலங்கை வலயங்களானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவகம் என கருதப்படுதல்

***92.*** 2023 ஆம் ஆண்டின 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லையினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாக இலங்கை வலயம் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அதன் பிரகாரம் பொருள் கோடல் செய்யப்படுதல் வேண்டும்.

இந்த சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை களுக்கான பாதுகாப்பு

***93.*** நன்னோக்கின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல்கள் அல்லது இந்த சட்டத்தின் கீழ் அவரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ற விடயங்கள் அல்லது அதிகாரமுடையவர் அல்லது சபையின் பணிப்புரையின் படி எது ஏற்புடையதோ அதன் படி, அவர் நன்னோக்குடன் நடந்ததாகவும் உரிய கவனத்தை பிரயோகித்ததாகவும், நியாயபூர்வமான கவனம் மற்றும் திறன்களை பயன்படுத்திய தாகவும் நிரூபிக்கின்ற பட்சத்தில் இலங்கை வலயங்கள் சபையின் எவரேனும் உறுப்பினர்கள், இலங்கை வலயங்கள் பிரதான நிறைவேற்று அலுவலர், அலுவலர் அல்லது இலங்கை வலயங்களின் ஊழியர் அல்லது முதலீட்டு இலங்கை சபையின் எவரேனும் உறுப்பின் ஆகியோருக்கு எதிராக எத்தகைய சிவில் அல்லது குற்றவியல் பணிகளை எடுத்தல் கூடாது.

ஒழுங்குவிதிகள்

***94.*** (1) இப்பாகத்தின் கீழ் விதிக்கப்படுவதற்கு தேவைப் படுத்தப்பட்ட அல்லது எவை தொடர்பில் ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய சகல விடயங்கள் தொடர்பிலும் இலங்கை வலயங்கள் சபையின் கலந்தாராய்வுடன் அமைச்சர் ஒழுங்குவிதிகளை உருவாக்க லாம்.

(2) குறிப்பாக, (1) ஆம் உட்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பொதுவான் தன்மைக்கு பங்கம் ஏற்படாமல், இலங்கை வலயங்கள் சபையின் கலந்தாராய்வுடன் இவை தொடர்பான ஒழுங்குவிதிகளை அமைச்சர் உருவாக்கலாம் -

(அ) இப்பாகத்தின் நோக்கங்களை அடைவதற்கு அவசியமான இப்பாகத்தின் அட்டவணையில் குறிப் பிடப்பட்ட ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்களில் சீர் செய்தல் அல்லது நோக்கெல்லை மற்றும் ஏதேனும் விலக்களித்தலின் அளவு ஆகியவற்றை தீர்மா னித்தல்;

(ஆ) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்து வதற்கு அவசியம் என கருதப்படுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் உள்ளடங்கியதாக காணப்பட்ட பொழுதிலும் இவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல –

(i) தளங்களை ஒதுக்குவதற்கான செயன்முறை மற்றும் முதலீட்டு வலயத்தினுள் பதிவு செய்தல்;

(ii) முதலீட்டு வலயத்தினுள் தொழிற்படுவதற்கான செயன்முறைகள்;

(iii) சுங்க செயன்முறைகள், விலக்களித்தல், முன் விடுவித்தல்கள், அதனோடு தொடர்புபட்ட முறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடங்கலாக விடயங்களுடன் தொடர்புடைய செயன்முறைகள்;

(iv) இப்பாகத்தின் கீழ் பதிவு செய்தல், அங்கீகாரம், உரிமமளித்தலுக்கான உரைகற்கள் மற்றும் நடவடிக்கை முறைகள் அல்லது வேறு ஏதேனும் ஏற்புடைய சட்டத்தின் கீழ் தேவைபடுத்தப் பட்டவைகள்;

(v) பணியாட்டொகுதியினர் தொடர்பிலான கருமங்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட எல்லா ஏனைய கருமங்கள்:

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவியை வகிக்கின்ற இலங்கை முதலீட்டுச் சபை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் எந்த தொழில் நியதி, நிபந்தனைக்கு 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் உரித்துடையவர்களாக இருந்தார்களோ அந்த நியதி, நிபந்தனைகளிலும் பார்க்க குறைந்த சாதகமான நியதி நிபந்தனைகளை வழங்குகின்ற ஒழுங்குவிதிகளை வழங்குகின்ற ஒழுங்குவிதிகளை இப்பிரிவின்கீழ் ஆக்குதலாகாது;

(vi) இப்பாகத்தின் கீழ் வழங்கப்படுகின்ற ஏதேனும் சேவைகளுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் விதிப்புகள்; அத்துடன்

(vii) குறிப்பிட்ட ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இப்பாகத்தின் கீழ் வருகின்ற சகல விதமான முதலீடுகளையும் இலங்கை வலயத்துடன் பதிவு செய்தல்.

(3) இப்பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட பிந்திய திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியி லிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள், ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதேவேளை ஒப்பதல் அளிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்கு விதியும் இரத்துச் செய்யப்பட்டதாக ஒப்புதல் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து கருதப்படும், ஆயின் அதன் கீழ் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட எதற்கும் பங்கம் ஏற்படாது.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும் திகதி தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

விதிகள்

**95.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இப்பாகத் தின் கீழ் எத்தகைய விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரமளிக் கப்பட்டுள்ளதோ அத்தகைய சகல விடயங்கள் தொடர்பான விதிகளை இலங்கை வலயங்கள் உருவாக்கலாம்.

(2) இலங்கை வலயங்களினால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு பிரசுரித்ததிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

சிரமங்களை அகற்றுதல்

**96.** இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதேனும் சிரமங்கள் எழும் பட்சத்தில் இலங்கை வலயங்கள் சபையின் கலந்தாராய்வுடன், வர்த்தமானியில் பிரசுரிக்கின்ற கட்டளை மூலம், இப்பாகத்தின் ஏற்பாடுகள் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் ஆகியவற்றுக்கு முரணாகாத அமைச்சருக்கு அவசியமானது என தோன்றுகின்ற அல்லது சிரமத்தை அகற்றுவதற்கு துரிதப்படுத்த வேண்டும் என தோன்றுகின்ற ஏற்பாடுகளை அமைச்சர் உருவாக்கலாம்.

அதேவேளை இப்பாகம் தொடங்கும் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் கடந்த பின்னர் அத்தகைய கட்டளைகள் உருவாக்கப்படவில்லை என்ற நிபந்தனையின் பெயரில் மேற்கொள்ளலாம்.

இப்பாகம் மேலோங்கி யிருத்தல்

**97.** இப்பாகத்தின் ஏற்பாடுகள் முதலீட்டு வலயங்களுடன் தொடர்புடைய (கொழும்பு துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தை தவிர) வேறு ஏதேனும் சட்ட ஏற்பாடுகளுக்கிடையில் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலோங்கியிருத்தல் வேண்டும்.

பொருள் கோடல்

**98.** (1) இப்பாகத்தின் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப் படுத்தினால் ஒழிய —

"முதலீட்டுச் சபை" என்பது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் உள்ள முதலீட்டு சபை என பொருள்படும்.

"முதலீட்டு வலயங்கள்" என்பது ஏற்றுமதி செயன்முறை வலயங்கள், கைத்தொழில் பூங்காக்கள், விசேட பொருளாதார வலயங்கள், ஏற்பாடுகள் வலயங்கள் அல்லது விசேட பொருளாதார வலயங்களை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் துறைகள் மற்றும் முதலீட்டு வலயங்களை தாபிப்பதற்கான ஏனைய ஒத்த பிரதேசங்கள், இப்பாகத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டவையாகவோ அல்லது இந்த சட்டவாக்கத்தில் குறிப்பிடப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தின் படியோ இருக்கலாம் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பிரதேசங்கள் மற்றும் உரிமம்பெற்ற வலயங்கள் என பொருள்படும்.

"சமூக உட்கட்டமைப்பு" என்பது தொழில்முயற்சிகளின் ஊழியர்களின் சேமநலன் மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பு என்பவற்றுக்கான அத்தியாவசிய வசதிகள் எனப்பொருள்படும் அத்துடன் நாள் கவனிப்பு நிலையம், மருத்துவ நிலையம், உறைவிடம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளையும் உள்ளடக்குதல் வேண்டும்..

## அட்டவணை

### (பிரிவுகள் 89 மற்றும் 94)

1. சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)
2. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம்
3. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்
4. 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நிதிச் சட்டம்
5. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்

6. 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன சட்டம்

7. 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக்கப்பற்றொழில் சட்டம்

8. 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம்

9. 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபை சட்டம்

10. 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்

11. 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டம்

12. 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்

## பாகம் III

## அத்தியாயம் XXII

### சர்வதேச வியாபாரத்துக்கான அலுவலகத்தைத் தாபித்தல்

*சர்வதேச வியாபாரத்துக்கான அலுவலகத்தைத் தாபித்தல்*

**99.** (1) (இச்சட்டத்தில் “சவிஅ” எனக் குறிப்பீடுசெய்யப் படும்) சர்வதேச வியாபாரத்துக்கான அலுவலகம் எனவழைக் கப்பட வேண்டிய அலுவலகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) சவிஅ ஆனது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும்

கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அப்பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**100.** அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம் "சவிஅ" என்பதன் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் - "சவிஅ" என்பதன் குறிக்கோள்கள்

(அ) இலங்கையின் சர்வதேச வியாபாரத்தை ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்;

(ஆ) இலங்கையில் சர்வதேச வியாபார பணிகளை ஒருங்கிணைத்தல்;

(இ) இலங்கை உற்பத்திகளினதும் சேவைகளினதும் ஏற்றுமதிகளின் வளர்ச்சியை வசதிப்படுத்தல்;

(ஈ) இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாரிய வியாபார, தொழில் மற்றும் ஏற்பாட்டியல் சார் மையமொன்றாக இலங்கையை மேம்படுத்துதல்; அத்துடன்

(உ) இலங்கையின் சர்வதேச வியாபார பணிகளின் நடைமுறைப்படுத்துகைக்காகவும் ஒருங்கிணைப்புக்காகவும் தலைமை முகவராண்மையாக சேவையாற்றுதல்.

**101.** "சவிஅ" என்பதன் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் - "சவிஅ" என்பதன் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

(அ) பின்வருவனவற்றுக்கான வழிமுறைகள் உட்பட சர்வதேச வியாபார பணிகள் பற்றி அமைச்சருக்கு விதப்புரைகளை செய்தல்

(i) சந்தை அணுகுகை தடைகளை நீக்கி அல்லது குறைத்து இலங்கை பண்டங்களும் சேவைகளும் சர்வதேச சந்தைகளினுள் பிரவேசிப்பதனை வசதிப்படுத்தல்;

(ii) பொதுவாக இலங்கைப் பண்டங்களுக்காகவும் மற்றும் சேவைகளுக்காகவும் குறிப்பாக கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் கடற்றொழில் உற்பத்திகளுக்காகவும் சர்வதேச சந்தைகளில் ஒப்புரவான நடாத்துகையை உறுதிப்படுத்தல்; மற்றும்

(iii) இலங்கை பண்டங்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதிகளை அதிகரித்தல்;

(ஆ) இலங்கையின் சர்வதேச வியாபாரத்தை வசதிப் படுத்தும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கைகளுக்கான மாற்றங்களை அவசியமானவிடத்து விதந்துரைத்தல்;

(இ) இருபுடை, பல்புடை, பிராந்திய மற்றும் சர்வதேச வியாபார –

(i) பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்னதாக சாத்தியக்கூறு கற்கைகளை நடாத்துதல்; அத்துடன்

(ii) செயன்முறை முழுவதும் பங்கீட்டுபாட்டாளர்கள் கலந்தாலோசனைகளை நடாத்துதல்;

(ஈ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட இருபுடை, பல்புடை, பிராந்திய மற்றும் சர்வதேச வியாபாரப் பேச்சுவார்த்தைகளை கொண்டு நடாத்துவதற்கு 114 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சர்வதேச வியாபாரத்திற்கான தூதுவருக்கு உதவியளித்தல்;

(உ) பின்வரும் ஆட்களுடனான கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக அத்தகைய நாடுகளுக்கு சர்வதேச வியாபார அலுவலர் ஒருவரை நியமித்தல்

(i) நிதி எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ii) வெளிநாட்டு அலுவல்கள் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(iii) முதலீடு எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அத்துடன்

(iv) வியாபாரம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்:

ஆயின் எவ்வாறாயினும், அமைச்சர் சவிஅ சபை மற்றும் (i) தொடக்கம் (iv) வரையிலான உட்பந்திகளில் குறிப்பீடுசெய்யப்படும் ஆட்களுடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய சர்வதேச வியாபார அலுவலர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை விதித்துரைத்தல் வேண்டும்;

(ஊ) இருபுடை வியாபாரத்தை நடாத்துவதற்கான நாடுகளின் எண்ணிக்கையை விசாரித்து வேறு நாடுகளுடனான இலங்கையின் இருபுடை வியாபாரத்தை மேம்படுத்துதல்;

(எ) இச்சட்டத்தின் கீழ் "சவிஅ" என்பதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு மற்றும் புரிவதற்கென அவசியமாக உள்ளவாறான அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்தல், தொழிலில் அமர்த்தல், ஊதியமளித்தல் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாட்டை பிரயோகித்தல் அத்துடன் பதவி நீக்குதல்;

(ஏ) "சவிஅ" என்பதன் நோக்கங்களுக்கென ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் வைத்திருத்தல் மற்றும் "சவிஅ" என்பதனால் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட அசையும் அல்லது

அசையா ஆதனங்களின் எவற்றையும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு கொடுத்தலும், ஈடு வைத்தலும், அடைமானம் வைத்தலும், விற்பனை செய்தலும் அல்லது வேறு வகையில் கையிருத்தலும்;

(ஐ) அதனது தத்துவங்கள், கடமைகள், பணிகளை பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு மற்றும் புரிவதற்கென அவசியம் என அது கருதக் கூடியவாறான எல்லா அத்தகைய ஒப்பந்தங்களையும் செய்தலும் நிறைவேற்றலும்;

(ஒ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஆட்கள் அல்லது ஆட்கள் குழாமிடமிருந்து காசாகவோ அல்லது வேறு வகையாகவோ பல்புடை முகவராண்மைகளிடமிருந்து அபிவிருத்தி உதவிகளை ஏற்றுக்கொள்ளுதலும் இச்சட்டத்தின் கீழ் அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலில், நிறைவேற்றுதலில் மற்றும் புரிவதில் அவற்றை பிரயோகித்தலும்:

ஆயின் எவ்வாறாயினும், சவிஅ ஆனது இப்பந்தியின்கீழ் பெறப்படும் எல்லா வெளிநாட்டு உதவிகள் தொடர்பிலும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் முன்னதாக எழுத்திலான அங்கீகாரம் பெறுதல் வேண்டும்;

(ஓ) சர்வதேச வியாபாரம் தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளில் ஈடுபடுதல்;

(ஔ) இலங்கையில் சர்வதேச வியாபாரத்தின் புள்ளி விபரங்களை சேகரித்தலும், பேணுதலும்; அத்துடன்

(க) "சவிஅ" என்பதன் குறிக்கோள்களை எய்துவதற்கான அவசியமான அததகைய வேறு செயல்களை அல்லது காரியங்களை பொதுவாக செய்தல்.

(2) சவிஅ ஆனது சர்வதேச வியாபாரம் தொடர்பில் ஏதேனும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட எல்லாத் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

## அத்தியாயம் XXIII

### "சவிஅ" என்பதன் நிருவாகமும் முகாமையும்

"சவிஅ" இன் முகாமைத்துவ சபையின் யாப்பு

**102.** (1) "சவிஅ" என்பதன் அலுவல்களை நிருவகித்தலும் முகாமை செய்தலும் (இச்சட்டத்தில் "சவிஅ சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமை சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) "சவிஅ" சபையானது, "சவிஅ" என்பதன் அலுவல்களை நிருவகித்து முகாமை செய்யும் நோக்கத்திற்காக இப்பாகத்தினால் "சவிஅ" என்பதற்கு அளிக்கப்பட்ட, அதற்கு குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், கடமை களையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறை வேற்றுதலும் வேண்டும்.

(3) சவிஅ சபையானது பின்வருவோரைக் கொண்டமைந்த தாதல் வேண்டும்-

(அ) 114 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட சர்வதேச வியாபாரத்திற்கான தூதுவர், அவர் சபையின் தவிசாளராகவும் "சவிஅ" என்பதன் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் இருத்தல் வேண்டும்;

(ஆ) திறைசேரியின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி; அத்துடன்

(இ) (இச்சட்டத்தில் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என குறிப்பீடு செய்யப்படுபவர்களும்) அரசியலமைப்புப் பேரவையின் பொறுப்பாற்றுடன் சனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர்களும், சர்வதேச வியாபாரம் என்ற துறையில் அறிவையும் அனுபவத்தையும் உடையவர் களுமான வேறு ஐந்து ஆட்கள்.

"சவிஅ" சபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கான தகைமை யீனங்கள்

**103.** ஆள் ஒருவர் பின்வருமாறு இருப்பின், அத்தகைய ஆள் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும். அவர் பாராளுமன்றத்தின் -

(அ) ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பின் அல்லது வரின்;

(ஆ) இலங்கை பிரசை ஒருவராக இராதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(இ) ஏதேனும் வேறு நாட்டின் பிரசை ஒருவராக உள்ள இலங்கை பிரசையாக இருப்பின் அல்லது வரின்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்குரோத்தானவராக வெளிப்படுத்தப்பட்டிருந்து, பொறுப்பு விடுவிக்கப் படாத கடனிறுக்க வகையற்ற அல்லது வங்கு ரோத்தான ஆள் ஒருவராக இருப்பின்;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீன மற்றவராக காணப்படின் அல்லது வெளிப்படுத்தப் படின்;

(ஊ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டின் நீதிமன்றம் ஒன்றினால் விதிக்கப்பட்ட மரண தண்டனை தீர்ப்பொன்றை அனுபவித்துக் கொண்டி ருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்;

(எ) "சவிஅ" என்பதனால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருப்பின், அல்லது துய்ப்பின்; அல்லது

(ஏ) சபையின் உறுப்பினர் ஒருவராக அத்தகைய ஆளினால் அவரது தத்துவங்கள், கடமைகள், மற்றும் பணிகள் பிரயோகிக்கப்படுவதை புரியப்படுவதை மற்றும் நிறைவேற்றப்படுவதனை பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய சாத்தியமுள்ளவாறாக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாத ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டி ருப்பின்;

*"சவிஅ" சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம்*

**104.** சபையின் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின் மூலம் பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினால் ஒழிய அவரது நியமனத் திகதியிலிருந்து நான்கு ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதிவியிலிருந்து அகற்றப் பட்டால் ஒழிய, தொடர்ச்சியானதுமாயினும் சரி அல்லது வேறு வகையானதுமாயினும் சரி, ஒன்றுக்கு மேற்படாத ஒரு மேலதிக காலத்திற்கு மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவி அகற்றுகை, பதவி விலகுகளை முதலியன*

**105.** (1) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், எந்நேரத்திலும், சனாதிபதிக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப் பட்ட கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அப்பதவிவிலகுகையானது எழுத்தில் எத்தேதி யன்று சனாதிபதியினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து அத்தகைய பதவி விலகுகை பயனுறுதலும் வேண்டும்.

(2) சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட் டுடன் அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்ட நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சபையின் உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்கோ அல்லது வேறேதேனும் தன்மையில் "சவிஅ" என்பதற்குச் சேவையாற்றுவதற்கோ தகவுடையவராத லாகாது.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறப்பின்மூலம், பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், சனாதிபதி, 102 மற்றும் 103 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும் அத்துடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியான

தாயினுஞ் சரி அல்லது வேறு வகையானதாயினுஞ் சரி ஒன்றுக்கு மேற்படாத மேலதிகக் காலத்துக்கு மீள நியமிக்கப் படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக் காகத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு அவர் இலங்கையில் இல்லாதிருப்பின், சனாதிபதி, 102 மற்றும் 103 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினர் இல்லாதிருக்கும்போது அவரினிடத்தில் செயலாற்ற வென வேறோராளை நியமித்தல் வேண்டும்.

(5) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், தவிசாளருக்கு அவர் வருகைதராமைபற்றி முற்கூட்டியே அறிவிக்காமல் சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர், அத்தகைய மூன்றாவது கூட்டத்தேதியிலிருந்து தனது பதவியை வறிதாக்கி யுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் சனாதிபதி, 102 மற்றும் 103 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தலும் வேண்டும்.

*சபையுறுப் பினர்களின் நிதிசார் அல்லது வேறு அக்கறைகள்*

**106.** (1) சனாதிபதியானவர், சபையுறுப்பினரொருவராக ஆளொருவரை நியமிக்குமுன்னர், சபையின் உறுப்பினரொரு வராக அத்தகைய ஆள் அவரது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பிரயோகிக்கப்படுவதை, புரியப்படுவதை மற்றும் நிறைவேற்றுவதனைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய சாத்தியமுள்ளவாறாக, "சவிஅ" என்பதன் அலுவல்களில் நிதிசார் அல்லது வேறு அக்கறையெதனையும் அவரோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களில் எவரேனும் கொண்டிருப்பதில்லையென பிரகடனம் செய்வதற்கு அத்தகைய ஆளை தேவைப்படுத்த வேண்டுமென்பதுடன் வெளிப்படுத்தப்பட்ட கருமங்களில் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளவேண்டும்.

(2) சபையின் உறுப்பினரெவரும் "சவிஅ" என்பதற்கு நியமிக்கப்பட்டதிலிருந்து (1) ஆம் உப்பிரிவில் அத்தகைய நிதிசார் அல்லது வேறு அக்கறையை கொண்டிருப்பதில்லை யென்பது பற்றி சனாதிபதி காலத்துக்குக் காலம் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(3) "சவிஅ" என்பதனால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில், உடன்படிக்கையில் அல்லது தொழிலில் அல்லது வேறேதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறை கொண்டுள்ள சபையின் உறுப்பினரொருவர், அவரது அக்கறையின் தன்மையையும் அளவையும் சபைக்கும் சனாதிபதிக்கும் உடனடியாக வெளிப்படுத்துதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்துதலும் சபையின் நிகழ்ச்சிக்குறிப்புகளில் பதியப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய உறுப்பினர், சனாதிபதி அதன் மீதான முடிவொன்றை எடுக்கின்றதான அத்தகைய காலம் வரை "சவிஅ" என்பதுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமத்தில் அதன் பின்னர் பங்குபற்றுதலுமாகாது.

(4) "சவிஅ" சபையானது விடயம் விடயமாக என்ற அடிப்படையில் அக்கறைகளின் முரண்பாடு பற்றிய இடாப்பொன்றை அல்லது பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

*ஊழியம் மீதான மட்டுப்பாடு*

**107.** சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புடைய ஊழியம் வழங்கப்படுகின்ற அல்லது வழங்கப்படாத வேறு ஏதேனும் பதவியையோ அல்லது தொழிலையோ ஏற்றுக் கொள்ளவோ பதவி வகிக்கவோ கூடாது.

(அ) அவரது பதவிக்காலத்தின் போது ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் நிறுவனமொன்றில்; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப அவரது பதவிக்காலம் முடிவடைந்த தேதியிலிருந்து அல்லது பதவி விலகல் அல்லது பதவி நீக்கல் மூலம் பதவி வெற்றிடமாகின்ற தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்று காலாவதியாகும் வரை சர்வதேச வியாபாரத்துடன்

தொடர்புபட்ட ஏதேனும் தனியார் நிறுவனத்தில், ஊதியமளிக்கப்பட்டோ அல்லது அன்றியோ சர்வதேச வியாபாரம் தொடர்புபட்ட வேறேதேனும் பதவி அல்லது ஊழியத்தை ஏற்றுக்கொள்ளுதலோ அல்லது வைத்திருத்தலோ ஆகாது.

"சவிஅ" சபையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்

**108.** *(1)* சபையின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் ஆகக்குறைந்தது ஒருதடவையேனும் அல்லது இப்பாகத்தினால் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றவாறாக நடாத்தப்படுதல் வேண்டும்.

*(2)* சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

*(3)* சபையின் கூட்டமொன்று பின்வருமாறு நடாத்தப் படலாம்; ஒன்றில் -

*(அ)* ஒரு கூட்டநடப்பெண்ணாக அமைகின்ற எண்ணிக்கை யினரான உறுப்பினர்கள் கூட்டத்துக்காக நியமிக்கப் பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்று கூடியிருப்பதன் மூலம்; அல்லது

*(ஆ)* கட்புல-செவிப்புலத் தொடர்பாடல் வழிவகைகள் மூலம்; பங்குபற்றுகின்றவர்களும் ஒரு கூட்டநடப் பெண்ணாக அமைகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும், இதன் மூலம், கூட்டம் நடைபெறும் நேரத்தின்போது ஒவ்வொரு பங்குபற்றுகின்ற உறுப்பினரையும் உடனிகழ்வாகப் பார்க்கவும் கேட்கவும் முடியும்.

*(4)* சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும், அத்தகைய கூட்டத்தில் சமூமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள்

சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர், அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(5) தவிசாளர், சமுகமாயிருப்பின், சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகை தராதிருக்கையில், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சபையின் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, சபையின் கூட்டங்களை அழைப்பதற்காகவும் நடாத்துவதற்காகவும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்காகவும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையைச் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

*சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடியற்றன வாகக் கருதப் படுதலாகாது*

**109.** சபையானது அதன் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் வெற்றிடம் ஆயினும்செயலாற்றலாமென்பதுடன் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாகவிருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

*"சவிஅ" சபையுறுப் பினர்களின் ஊதியம்*

**110.** சபையுறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*சபையானது கூட்டங்களுக்கு வருகைதரும்படி நிபுணர்களுக்கு அழைப்பு விடுத்தல்*

**111.** (1) சபையானது, அவசியமென அது கருதுகின்ற போதெல்லாம், சவிஅ என்பதன் பணிகளைப் பயனுற நிறைவேற்றுவதற்காகச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் கையாளப்படுகின்ற ஏதேனும் விடயத்தின்மீது நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள நிபுணர்களுக்கு, அத்தகைய விடயப் பொருளின்மீதான அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துக்காக அத்தகைய கூட்டத்துக்கு வருகை தரும்படி அழைப்புவிடுக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், சபையானது, அத்தகைய நிபுணர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்குத் தனித்தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிபுணர்கள் வாக்களிக்கும் உரிமைகளைக் கொண்டிருத்தலாகாது.

(3) சபையின் கூட்டங்களுக்கு வருகைதருவதற்காகச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மதிப்பூதியம் நிபுணர்களுக்குச் செலுத்தப்படலாம்.

(4) சபையினால் வரவழைக்கப்பட்ட நிபுணர் ஒவ்வொருவரும் சபையினால் ஈடுபடுத்தப்படுவதற்கு முன்பதாக, 124 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்படும் பிரகடனமொன்றை செய்தல் வேண்டுமென்பதுடன், சபையினால் கலந்துரையாடப்படும் எல்லாக் கருமங்களையும் சவிஅ என்பதுடன் அவரது ஈடுபாட்டின் நியதிகளின்படி அத்தகைய நிபுணரினால் கொள்ளப்பட்ட வேறேதேனும் தகவலை இரகசியமாக பேணுதல் வேண்டும். அவர் 106 ஆம் பிரிவின் (1) உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக சவிஅ என்பதன் அலுவல்களில் நிதிசார் அல்லது வேறு அக்கறைகளை கொண்டிருக்கவில்லை என பிரகடனமொன்றையும் அத்தகைய நிபுணர் ஒவ்வொருவரும் செய்தலும் வேண்டும்.

"சவிஅ" என்பதன் இலச்சினை

**112.** (1) சவிஅ என்பதன் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) சவிஅ என்பதன் இலச்சினையானது –

(அ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(ஆ) காலத்துக்குக்காலம் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) சவிஅ என்பதன் இலச்சினையானது, சபையின் வலு வளிப்புடன் தவிரவும் சபைத் தவிசாளரினதும் இன்னுமோர் உறுப்பினரினதும் சமூகத்தில் தவிரவும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமூகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்ப மிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், "சவிஅ" என்பதன் இலச்சினை யானது ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படும் நேரத்தின்போது தவிசாளர் சமூகமாயிருப்ப தற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, அதற்கெனத் தவிசாளரி னால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் வேறெவ ரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டுக் கிணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதி வாய்ந்தவராதல் வேண்டும்.

(4) "சவிஅ" என்பதன் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங் களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றைச் சபையானது பேணுதல் வேண்டும்.

*சவிஅ சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைக் கையளித்தல்*

**113.** (1) சவிஅ சபை, இப்பாகத்தின்கீழ் அது சார்பில் ஆக்கப்படும் விதிகள் மூலம் அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளில் எவற்றையும் பணிப்பாளர் ஒருவர் பதவி வரிசைக்குக் குறையாத அலுவலரொருவராக இருக்கவேண்டிய எவரேனும் அலுவலரொருவருக்கு கையளிக்கலாம்.

(2) ஓராம் பந்தியின்கீழ் எந்த அலுவலருக்கு ஏதேனும் தத்துவம், கடமை மற்றும் பணி கையளிக்கப்பட்டதோ அவ்வலுவலர் சவிஅ சபையினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய, அத்தகைய தத்துவம், கடமை மற்றும் பணியை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் வேண்டும்.

## அத்தியாயம் XXIV

### சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவர்

*சர்வதேச வியாபாரத் துக்கான தூதுவர்*

**114.** (1) சனாதிபதியானவர், அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட்டுடன், சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவராக விருப்பதற்கு, சர்வதேச வியாபாரம் என்ற துறையில் அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள ஆளொருவரை நியமித்தல் வேண்டும்-

(அ) அவர் சர்வதேச வியாபார பேச்சுவார்த்தைகளுக்கான பிரதான பேரம்பேசுபவராக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இலங்கையின் சர்வதேச வியாபாரத் தொடர்புகளைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கானது.

(2) உலக வியாபார ஒழுங்கமைப்பு (உவிஒ), வியாபாரம் மற்றும் அபிவிருத்திமீதான ஐக்கிய நாடுகள் சபை மாநாடு (விமஅஐநாசமா), சர்வதேச வியாபார ஒழுங்கமைப்பு (சவிஒ), பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியக் கூட்டமைப்பு (சார்க்), பொதுநலவரசு என்பன சம்பந்தமான சர்வதேச வியாபாரக் கருமங்களையும் பேச்சுவார்த்தைகளையும் மற்றும் ஏனைய சர்வதேச வியாபாரப் பேச்சுவார்த்தைகளையும் ஒருங்கிணைத்தல் சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவரின் கடமையாதல் வேண்டும்.

(3) சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவர், சனாதிபதிக்கு அது சார்பில் முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை சனாதிபதியினால் எத்தேதியன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(4) சனாதிபதியானவர், அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட்டுடன், பின்வரும் காரணங்களுக்காகச் சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்-

(அ) அவர், தனது கடமையைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வரின்;

(ஆ) அவர், சபையின் அபிப்பிராயத்தில், மோசடியான அல்லது சட்டவிரோதமான பண்பினதான, அல்லது சவிஅ என்பதன் நலனுக்குப் பங்கம் விளைவிப்பதான ஏதேனும் செயலைச் செய்திருப்பின்; அல்லது

(இ) அவர், சபையினால் விடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியிருப்பின்.

(5) சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவர், இறப்பின் மூலம், பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே தனது பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து நான்காண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியான தாயினுஞ்சரி அல்லது வேறு வகையினதாயினுஞ்சரி, ஒன்றுக்கு மேற்படாத மேலதிக காலத்திற்கு மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(6) சர்வதேச வியாபாரத்திற்கான தூதுவரின் பதவியிலிருந்து இறப்பு, பதவி விலகல் அல்லது பதவி நீக்குதல் மூலம் பதவி வெற்றிடமாகுகின்ற பட்சத்தில், சனாதிபதி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறொரு ஆளை நியமித்தல் வேண்டும். அத்தகைய ஆள், அவர் எந்த ஆளை அடுத்துறுகின்றாரோ அந்த ஆளின் பதவிக்காலம் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகுத்தலும் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியான தாயினுஞ்சரி அல்லது வேறுவகையினதாயினுஞ்சரி ஒன்றுக்கு மேற்படாத மேலதிக காலத்திற்கு மீளநியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

(7) சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவர், சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, அல்லது மூன்று மாதங்களுக்கு குறையாதவொரு காலப்பகுதிக்கு அவர் இலங்கையில் இல்லாதிருப்பின், சனாதிபதி, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு

களின் நியதிகளின்படி அவர் இல்லாதிருக்கும் போது சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவராக தற்காலிகமாக செயலாற்ற வென சபையின் உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

(8) சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவருக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனை யுடன் சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஊழியம் மீதான மட்டுப்பாடு

**115.** சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவர் –

(அ) சர்வதேச வியாபாரத்திற்கான தூதுவராக அவரது பதவிக்காலத்தின் போது ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் நிறுவனமொன்றில்; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப அவரது பதவிக்காலம் முடிவடைந்த தேதியிலிருந்து அல்லது பதவி விலகல் அல்லது பதவி நீக்கல் மூலம் பதவி வெற்றிடமாகின்ற தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்று காலாவதியாகும் வரை சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புபட்ட ஏதேனும் தனியார் நிறுவனத்தில்,

ஊதியமளிக்கப்பட்டோ அல்லது அன்றியோ சர்வதேச வியாபாரம் தொடர்புபட்ட வேறேதேனும் பதவி அல்லது ஊழியத்தை ஏற்றுக்கொள்ளுதலோ அல்லது வைத்திருத்தலோ ஆகாது.

சபையின் தத்துவங் களையும், கடமைகளையும், பணிகளையும் சர்வதேச வியாபாரத் துக்கான தூதுவருக்குக் கையளித்தல்

**116.** (1) சபையானது அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவருக்குக் கையளிக்கலாம்.

(2) சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவர், சபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கமைய (1) ஆம் உட்பிரிவின் கீழ் சபையினால் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) சபை சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவருக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை எந்நேரத்திலும் கைமீட்கலாம்.

## அத்தியாயம் XXV

### சவிஅ என்பதன் பணிப்பாளர் தலைமையதிபதியும் ஏனைய பணியாட்டொகுதியினரும்

சவிஅ என்பதன் பணிப்பாளர் தலைமையதிபதி

**117.** (1) சபையுடனான கலந்தாலோசனையில் அமைச்சரினால் நியமிக்கப்படும் (இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுகின்றவருமான) "சவிஅ" என்பதன் பணிப்பாளர் தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி நியமிக்கப்பட வேண்டிய ஆளின் தகைமைகளும் அனுபவமும் பணிப்பாளர் தலைமையதிபதியின் தொழில் நியதிநிபந்தனைகளும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, -

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகமும் கட்டுப்பாடும் உட்பட, "சவிஅ" என்பதன் அலுவல்களினது நிருவாகம் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) சபையின் எல்லா முடிபுகளினதும் நிறைவேற்றுகைக்காகப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்;

(இ) சர்வதேச வியாபாரத்துக்கான தூதுவர் இச்சட்டத்தின் கீழான அவரது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதில் அவருக்குதவுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) சபையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமளிக்கவும் உரையாற்றவும் உரித்துடையவராதல் வேண்டும், ஆனால் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்களிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை “சவிஅ” என்பதன் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எழுத்தில் கையளிப்பது அவசியமானதென அவர் கருதும்போதெல்லாம் அவ்வாறு செய்யலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதி, இப்பாகத்தின்கீழான அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் சபைக்குப் பொறுப்பாகவிருத்தலும் வகைகூறவேண்டியவராகவிருத்தலும் வேண்டும்.

(7) அமைச்சர், சபையின் கலந்தாலோசனையுடன், பின்வரும் காரணங்களுக்காக பணிப்பாளர் தலைமையதிபதியை பதவியிலிருந்து அகற்றலாம்–

(அ) அவர், தனது கடமையைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வரின்;

(ஆ) அவர், சபையின் அபிப்பிராயத்தில், மோசடியான அல்லது சட்டவிரோதமான பண்பினதான, அல்லது “சவிஅ” என்பதன் நலனுக்குப் பங்கம் விளைவிப்பதான ஏதேனும் செயலைச் செய்திருப்பின்; அல்லது

(இ) அவர், சபையினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியிருப்பின்.

(8) (7) ஆம் உட்பிரிவின் கீழ் அகற்றப்படுவதற்கு முன்னதாக, பணிப்பாளர் தலைமையதிபதி, அவர் ஏன் பதவியிலிருந்து அகற்றப்படக்கூடாது என்பதுபற்றி காரணங்

காட்டுமாறு எழுத்தில் அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அவருக்கெதிராக செய்யப்பட்ட ஏதேனும் சார்த்துதல்களுக்கு எதிராக கேட்கப்படுவதற்கு சந்தர்ப்ப மொன்றை வழங்குதலும் வேண்டும்.

(9) பணிப்பாளர் தலைமையதிபதியின், அவர் இறப்பதன் மேல், (7) ஆம் உட்பிரிவின் கீழ் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது அப்பதவியை வகிப்பவரினால் அமைச்சருக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவர் பதவி விலகுவதன் மேல் வறிதாக வருதல் வேண்டும்.

(10) பணிப்பாளர் தலைமையதிபதிப் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால், அமைச்சர், சபையின் கலந்தா லோசனையுடன், (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமனமொன்று செய்யப்படும்வரை பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோ கிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் எனச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

(11) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*"சவிஅ" என்பதன் பணியாட் டொகுதியினர்*

**118.** (1) "சவிஅ" என்பது, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் வினைத் திறனாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவ தற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கை யினரான அலுவலர்களையும் வேறு ஊழியர்களையும் "சவிஅ" என்பதன் பணியாட்டொகுதியினராக நியமிக்கலாம்.

(2) "சவிஅ" என்பது, (1) ஆம் உட்பிரிவின் கீழ் "சவிஅ" என்பதற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களும் வேறு ஊழியர்களும் தொடர்பில் -

(அ) அத்தகைய அலுவலர்களினதும் ஊழியர்களினதும் தொழில் நியதிநிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்;

(ஆ) அரசாங்கத்தின் தொடர்புபட்ட வழிகாட்டு நெறிகளுக்கிசையவும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்படும் அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் அத்தகைய அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் எந்த வீதங்களில் ஊதியமளிக்கப்படவேண்டுமோ அந்த வீதங்களை நிர்ணயிக்கலாம்; அத்துடன்

(இ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களைப் பதவி நீக்கலாம்.

(3) சபையானது, (2) ஆம் உப பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்.

(4) "சவிஅ" ஆனது, பகிரங்க அல்லது தனியார் துறையில் எவரேனுமாளினால் முன்னர்வகிக்கப்பட்ட ஏதேனும் பதவியிலிருந்து பதவிநீக்கப்பட்டுள்ள அத்தகைய ஆளை "சவிஅ" வின் அலுவலரொருவராக அல்லது வேறு ஊழியரொருவராக நியமித்தலாகாது.

பகிரங்க அலுவலர்களை "சவிஅ" என்பதன் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்

**119.** (1) "சவிஅ" என்பதன் கோரிக்கையின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் "சவிஅ" என்பதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சவிஅ என்பதன் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் "சவிஅ" என்பதன் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் “சவிஅ” என்பதன் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளை “சவிஅ” என்பது தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் சவிஅ என்பதற்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XXVI

### நிதி

*“சவிஅ” என்பதன் நிதியம்*

**120.** (1) “சவிஅ” என்பது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) “சவிஅ” என்பதன் பயன்பாட்டிற்கென பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய பணங்களின் அத்தகைய எல்லாத் தொகைகளும் “சவிஅ” என்பதன் நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்.'

(3) “சவிஅ” என்பது இப்பாகத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் “சவிஅ” என்பதன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*“சவிஅ” நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்*

**121.** (1) “சவிஅ” என்பதன் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சவிஅ என்பதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் அதன் வேறெல்லா நிதிசார் கொடுக்கல்வாங்கல்களும் பற்றி முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனை சவிஅ என்பது செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், “சவிஅ” என்பதன் கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

## அத்தியாயம் XXVII

### பொதுவான ஏற்பாடுகள்

குழுக்களையும் குழாங்களையும் தாபித்தல்

***122.*** (1) சபையானது, இப்பாகத்தின்கீழ் அதற்கு குறித்தளிக் கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதற்கு உதவுவதற்குக் குழுக்களையும் குழாங்களையும் தாபிக்கலாம்.

(2) அத்தகைய குழு அல்லது குழாம் ஒவ்வொன்றும் இயைபான அமைச்சின் மேலதிக செயலாளர் தரத்திற்கு குறையாததும், அத்துடன் அத்தகைய அமைச்சின்கீழ் செயற் படுகின்ற இயைபான அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது அத்தகைய அரசாங்க நிறுவனங்களின் தலைவர் களினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறானதும் அத்தகைய அமைச்சின் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் சிரேட்ட அலுவலர்களையும் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கொண்டமைதல் வேண்டும்.

(3) 103 மற்றும் 106 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் நியமனத்திற்கான தகைமையீனங்கள் மற்றும் நிதிசார் அல்லது வேறு அக்கறைகள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தாபிக்கப்படும் குழாக்கள் மற்றும் குழாம்களின் உறுப்பினர்களுக்கு ஏற்ற மாற்றஙகளுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) குழுக்களின் அல்லது குழாம்களின் உறுப்பினர்கள் நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் திர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய விகிதங்களிலும் அத்தகைய மதிப்பூதியம் செலுத்தப்படலாம்.

**123.** (1) சவிஅ என்பது, ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவிலிருந்து ஆறுமாதங்களினுள், அந்நிதியாண்டின்போது இருபுடை வியாபாரம் தனிப்பட்ட எந்நாடுகளுடன் நடாத்தப் படுகின்றதோ அந்நாடுகளுட்பட, “சவிஅ” என்பதனால் நிறைவேற்றப்பட்ட பணிகளும் சர்வதேச வியாபாரம் தொடர்பிலான முன்னேற்றமும் பற்றிய ஆண்டறிக்கை யொன்றைச் சனாதிபதிக்குச் சமர்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் அத்தகைய அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்– ஆண்டறிக்கை

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுக்காக சவிஅ என்பதன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்; அத்துடன்

(ஆ) அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எந்த ஆண்டு தொடர்பானவையோ அந்த ஆண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்ட பணிகள் பற்றிய ஓர் அறிக்கை.

(2) சனாதிபதியானவர், ஆண்டறிக்கை பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாதங்களினுள், அத்தகைய அறிக்கையை (1) ஆம் உப பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து, பாராளுமன்றத்தினால் கவனத்துட் கொள்ளப்படுவ தற்காகப் பாராளுமன்றத்தில் பட்டியலில் இடுதல் வேண்டும்.

**124.** சபையின் ஒவ்வோர் உறுப்பினரும் சவிஅ யின் பணிப்பாளர் தலைமையதிபதியும் சவிஅ என்பதன் மற்றெல்லா அலுவலர்களும் வேறு ஊழியர்களும், அவர்களது கடமைகளையேற்கு முன்னர், இப்பாகத்தின் கீழான அவர்களது இரகசியம் பற்றிய வெளிப் படுத்துகை

தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அவர்களது அறிவுக்கெட்டியுள்ளவையும் "சவிஅ" என்பதன் அலுவல்கள் சம்பந்தமானவையுமான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் தாம் கண்டிப்பான இரகசியத்தைக் கடைப்பிடிப்பார்களென வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் சந்தர்ப்பங்களிற்றவிர அத்தகைய ஏதேனும் கருமத்தைத் தாம் வெளிப்படுத்தமாட்டார்களென அத்தகைய வெளிப்படுத்துகைமூலம் வாக்குறுதியளித்தலும் வேண்டும்:-

(அ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போதும்; அல்லது

(ஆ) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகுவதற்கெனவும்.

*சனாதிபதியினாலான பணிப்புகள்*

**125.** (1) சனாதிபதியானவர், காலத்துக்குக்காலம், "சவிஅ" என்பதன் குறிக்கோள்கள் தொடர்பான அரசாங்கக் கொள்கைக்குத் தகுந்த பயன்கொடுப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் சவிஅ என்பதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் பற்றி அத்தகைய பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை எழுத்தில் "சவிஅ" என்பதற்கு வழங்கலாமென்பதுடன் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் "சவிஅ" என்பதன் கடமையாதலும் வேண்டும்.

(2) சனாதிபதியானவர், காலத்துக்குக்காலம், "சவிஅ" என்பதன் ஆதனம் மற்றும் பணிகள் தொடர்பிலான விபரத்திரட்டுக்களையும், கணக்குகளையும், வேறெவையேனும் தகவல்களையும் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் தனக்குக் கொடுத்துதவும்படி "சவிஅ" என்பதை எழுத்தில் பணிக்கலாமென்பதுடன் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் "சவிஅ" என்பதன் கடமையாதலும் வேண்டும்.

**126.** "சவிஅ" என்பதன் எல்லாச் சபையுறுப்பினர்களும், பணிப்பாளர் தலைமையதிபதியும் மற்றும் அலுவலர்களும் வேறு ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக் காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

"சவிஅ" என்பதன் உறுப்பினர் களும், அலுவலர்களும், ஏனைய ஊழியர்களும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**127.** "சவிஅ" ஆனது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட் டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

"சவிஅ" ஆனது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்

**128.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் "சவிஅ" என்பதனால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சவிஅ என்பதனால் உறப்பட்ட ஏதேனும் செலவு சவிஅ என்பதன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சவிஅ என்பதற்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் "சவிஅ" என்பதன் நிதிகளுக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

துடர்ச்சியிலான அல்லது குற்ற வழக்கிலான செலவுகள் "சவிஅ" என்பதன் நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல்

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது "சவிஅ" என்பதன் பணிப்புக்களின் மீது "சவிஅ" என்பதன் எவரேனும் சபையுறுப்பினரினால், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் அலுவலரினால் அல்லது வேறு ஊழியரினால் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்படு கின்றதாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அல்லது நியாயசபையின் முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் அறவிடப்பட்டாலொழிய, "சவிஅ" என்பதன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**129.** (1) அமைச்சர், "சவிஅ" என்பதன் கலந்தாலோசனையுடன், விதித்துரைக்கப்படவேண்டுமென இப்பாகத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அவைதொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள், அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாக அவ்வாறு கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**130.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, இப்பாகத்தின்கீழ் எக்கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் தொடர்பில் அல்லது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் விதிகளையாக்கலாம்:- விதிகள்

(அ) சபையின் கூட்டங்களை அழைப்பதற்கும் நடாத்துவதற்கும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதற்கும் எனப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும்; அத்துடன்

(ஆ) "சவிஅ" என்பதன் அலுவல்களை முகாமை செய்வதுடன் சம்பந்தப்பட்ட வேறெதேனும் கருமம்.

(2) சபையினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டின்மேல் நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

பொருள் கோடல்

**131.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினா லொழிய —

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் இச்சட்டத்தின் விடயம் மற்றும் இச்சட்டம் தொடர்பான பணிகள் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்.

## பாகம் IV

## அத்தியாயம் XXVIII

### தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவை தாபித்தல்

தேசிய உற்பத்தித் திறன் ஆணைக் குழுவை தாபித்தல்

**132.** (1) தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு என அழைக்கப்பட வேண்டிய மற்றும் அறியப்பட வேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் (இதனகத்து "உற்பத்தித்திறன் ஆணைக்குழு" என அழைக்கப்படும்).

(2) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்கு குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

(3) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது சுயாதீன அமைப்பாக இருப்பதுடன் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

(4) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை எல்லா சந்தர்ப்பங்களிலும் மதிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பாகத்தின் கீழ் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றை பிரயோகிக்கையில், செயலாற்றுகையில், நிறைவேற்றுகையில் ஆள் ஒருவர் தேவையற்ற செல்வாக்கினையோ அல்லது தலையீடுகளையோ மேற்கொள்ளக் கூடாது.

**உற்பத்தித்திறன் ஆணைக் குழுவின் குறிக்கோள்கள்**

***133.*** உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் குறிக்கோள் களானது நிலைபேறான முறையில் மக்களது நலன்களை மேம்படுத்துவதற்காக அதிகரித்த உற்பத்தித்திறன் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

**உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் தத்துவங்கள்**

***134.*** உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் குறிக்கோள்களை அடைவதற்கு அவசியமான அதனது கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு மற்றும் செயலாற்றுவதற்கு அவசியமான பின்வரும் தத்துவங்களை கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) 155 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஏதேனும் பகிரங்க நிறுவகம் அல்லது ஆட்களிடமிருந்து ஏதேனும் தகவல்கள், தரவுகள், புள்ளிவிபரங்கள், அல்லது ஆவணங்களை கோரல்;

(ஆ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப் பட்ட விசாரணையொன்று மற்றும் ஆய்வொன்று கண்டறிதல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரசபை களுக்கு மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் ஆகியவற்றை 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப் படும் அளவிற்கு வெளியிடல் மற்றும் பரப்புதல்;

(இ) ஏதேனும் வங்கியில் நடைமுறைக் கணக்கு, சேமிப்பு கணக்கு அல்லது ஏனைய வைப்புகள் ஆகியவற்றை திறத்தல், பேணுதல் மற்றும் மூடுதல். அவசியம் ஏற்படுகையில் அத்தகைய கணக்குகளை மூடுதல்;

(ஈ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான தத்துவங் களை பிரயோகிப்பதற்கான அவசியமான அத்தகைய சகல விதமான ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கை களை மேற்கொண்டு செயலாற்றுதல்;

(உ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் ஏதேனும் அசையக் கூடிய அல்லது அசையாத சொத்துக்களை வைத்தி ருத்தல், எடுத்தல் அல்லது குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு அமர்த்தல் அல்லது ஈடு வைத்தல் அல்லது அடைமானம் வைத்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல்;

(ஊ) பொதுவாக, உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நோக்கங்களை அடைவதற்காக இப்பாகம் மற்றும் விதிகள் ஆகியவற்றின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய சகலவிதமான செயல்கள் மற்றும் விடயங்களை மேற்கொள்ளுதல்.

**135.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் - உற்பத்தித் திறன் ஆணைக் குழுவின் ஆணைக் குழுவின் கடமைகளும் பணிகளும்

(அ) பின்வருவன உள்ளடங்கலாக ஆனால் அவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படாமல் உற்பத்தித்திறன் மற்றும் பொருளாதார செயலாற்றுகை ஆகியவற்றை அதிக ரிக்கும் முகமாக சான்றுகள் மற்றும் விசாலமான பகுப்பாய்வுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகளுக்கு விதப்புரைகளை மேற்கொள்ளல்;

(i) உற்பத்தித்திறன் தொடர்பான ஒழுங்குவிதிகளை சீர் செய்தல்;

(ii) ஆரோக்கியமான போட்டித்தன்மை மற்றும் போட்டிமிக்க சந்தைகள் ஆகியவற்றை மேம்படுத்தல்;

(iii) கட்டமைப்பு ரீதியான மாற்ற ஊக்கியாக செயற்படுதல்; மற்றும்

(iv) சர்வதேச போட்டித் தன்மையை உற்சாகப் படுத்தல்;

(ஆ) தேசிய போட்டித் தன்மைமிக்க கொள்கை ஒன்றை அறிமுகம் செய்வது தொடர்பில் அரசாங்கத்திற்கு விதப்புரைகளை மேற்கொள்ளல் மற்றும் அவ்வப் போது பின்னவர் அவசியப்படுகின்ற மறுசீரமைப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்;

(இ) உற்பத்தித்திறனுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய பொது விசாரணைகள் மற்றும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளை மேற்கொள் ளுதல், இவற்றை உள்ளக ரீதியாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ மேற்கொள்ளல் மற்றும் அத்தகைய விசாரணை மற்றும் ஆய்வுக்காக பயன்படுத்திய முறைகளை வெளியிடல்;

(ஈ) செயலாற்றுகை கண்காணிப்பு, மதிப்பீடு ஆகியவற்றை மேற்கொள்ளல் மற்றும் உற்பத்தித்திறன் தொடர்பான திறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்;

(உ) அடுத்த வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதி யினுள் உற்பத்தித்திறன் போக்குகள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு வருடாந்தம் அறிக்கையிடல்; மற்றும்

(ஊ) உற்பத்தித்திறன் மேம்பாட்டின் அவசியம் பற்றிய பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.

(2) (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தனது கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றை முதலீட்டு ஆணைக்குழுவானது நிறைவேற்றுகையில் மற்றும் செயலாற்று கையில் பின்வருவனவற்றை மேற்கொள்ளல் -

(அ) அமைச்சரவை அல்லது பாராளுமன்றம் அல்லது அதனது சுய முன்னெடுப்பு ஆகியவற்றில் குறித்துக் காட்டப்பட்டதன் படி நடத்தல்;

(ஆ) வியாபாரம் செய்யக் கூடிய மற்றும் வியாபாரம் செய்ய முடியாத பண்டங்கள் மற்றும் சேவைகள் உள்ளடங்கலாக தனியார் துறை மற்றும் அரசாங்க துறை ஆகிய இரண்டையும் பரிசீலித்தல்;

(இ) மக்களுடைய நலன்கள் மற்றும் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் விதப்புரைகளினால் பாதிக்கப் பட்டவர்களை அங்கீகரித்தல்; மற்றும்

(ஈ) நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்தல்.

விதப்புரைகளை மேற்கொள்வதற்கான நடைமுறைகள்

**136.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டதும் இப்பாகத்தின் குறிக்கோள்களினுள்ளும் வருகின்றதுமான ஏதேனும் விடயம் மீது கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியினுள் விதப்புரைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(2) அமைச்சரவையினால் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிற்கு ஏதேனும் விடயம் ஆற்றுப்படுத்தப்படும் பட்சத்தில் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது அதனது விதப்புரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) (அ) பாராளுமன்றத்தினால் உற்பத்தித்திறன் ஆணைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் அல்லது அதனது சுய முன்னெடுப்பில் மேற்கொள்ளப்பட்டவைகள், தொடர்பில் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது அதனது விதப்புரைகளை சபாநாயகருக்கு வழங்குதல் வேண்டும்.

(ஆ) இந்த உட்பிரிவின் (அ) பந்தியின் கீழ் ஆற்றுப்படுத்தப் பட்ட விதப்புரைகளை, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் அத்தகைய விதப்புரைகளுக்கான திருத்தங்களை மேற்கொள்வதற்காக அல்லது அவற்றை மீளாய்வு செய்து கருத்துக்களை தெரிவிப்பதற்காக தாபிக்கப்பட்ட பாராளுமன்ற குழுவொன்றிற்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் மேற்கொள்ளல் வேண்டும்.

(இ) அத்தகைய கருத்துக்கள் அல்லது அபிப்பிராயங்களை பாராளுமன்ற குழுவானது அத்தகைய விதப்புரைகள் கிடைக்கப் பெற்றதலிருந்து முப்பது நாட்கள் காலப்பகுதியினுள் சபாநாய கரிடம் கையளித்தல் வேண்டும். சபாநாயகர் அத்தகைய கருத்துக்கள் அல்லது திருத்தங்களை உற்பத்தித்திறன் ஆணைக் குழுவிற்கு அனுப்புதல் வேண்டும்.

(ஈ) பாராளுமன்ற குழுவின் அத்தகைய கருத்துக்கள் மற்றும் திருத்தங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததன் பின்னர் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது அது தொடர்பான விதப்புரைகளை சபாநாயகரிடம் தெரிவித்தல் வேண்டும்.

(4) தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், செயலாற்றுதல், நிறைவேற்றுதல் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத் திடம் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை தனது சொந்த முன்னெடுப்பின் மூலமாக உற்பத்தித்திறன் ஆணைக்குழு நாடலாம் அல்லது ஏதேனும் ஆவணத்தை சமர்ப்பித்தல் அல்லது அதனோடு தொடர்புபட்டவற்றை அறிக்கையிடல் ஆகியவற்றையும் மேற்கொள்ளலாம்.

## அத்தியாயம் XXIX

## உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் அலுவல்களை நிருவாகம் செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் அமைப்பு உருவாக்கம்

உற்பத்தித் திறன் ஆணைக் குழுவின் அமைப்பு உருவாக்கம்

**137.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது பின்வரு வோரை கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) திறைசேரியின் பணிப்பாளர் தலைமை அதிபதி (பொது நிதி) (இதனகத்து "பதவிவழி உறுப்பினர்" என அழைக்கப்படுவார்); மற்றும்

(ஆ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப் பினர்கள் (இதனகத்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் என அழைக்கப்படுவர்).

(2) (1) ஆம் உட்பிரிவின் (ஆ) பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நியமனங்களை மேற்கொள்கையில், அத்தகைய ஆட்கள், பொருளியல், சமூக விஞ்ஞானம், முதலீடு, நிதி, வியாபாரம் அல்லது வர்த்தகம், சட்டம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், வியாபாரம் அல்லது கணக்கியல் ஆகிய துறைகளில் அத்தகைய உறுப்பினர்கள் அறிவு, நிபுணத்துவம், அனுபவம், தேசிய அல்லது சர்வதேச ரீதியான அங்கீகாரம் ஆகியவற்றை கொண்டிருக்கின்றார்கள் என்பதை உறுதி செய்வதற்கான பரிசீலனைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஆகக் குறைந்தது 02 பேர் முழு நேர ஊழியர்களாக இருத்தல் வேண்டும்.

**138.** ஆள் ஒருவர் பின்வருமாயின், அத்தகைய ஆள் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும் -

*உற்பத்தித் திறன் ஆணைக் குழுவின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கான தகைமை யீனங்கள்*

(அ) இலங்கை பிரசை ஒருவராக இராதிருப்பின் அல்லது இல்லாதொழியின்;

(ஆ) அவர், பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்படின் அல்லது நியமிக்கப்படின்;

(இ) அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினராக இருத்தல்;

(ஈ) 143 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி உற்பத்தித் திறன் ஆணைக்குழுவின் உறுப்பினராக தனது கடமைகளையும் பணிகளையும் செயலாற்றுவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு பங்கமாக பாதிக்கக் கூடிய வகையில் நேரடியான அல்லது நேரடியல்லாத அத்தகைய ஒத்த ஏதேனும் நிதி ரீதியான நலன்கள் இருத்தல்;

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சுத்தசுயதீன மற்றவராக காணப்படின் அல்லது வெளிப்படுத்தப் படின்;

(ஊ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்குரோத்தானவராக வெளிப்படுத்தப்பட்டிருந்து, பொறுப்பு விடுவிக்கப் படாத, கடனிறுக்க வகையற்ற அல்லது வங்கி முறிந்த ஆளொருவராக இருப்பின்;

(எ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் நீதிமன்றம் ஒன்றினால் விதிக்கப்பட்ட மரியற் தண்டனை தீர்ப்பொன்றை அனுபவித்துக் கொண்டி ருப்பின் அல்லது அனுபவித்திருப்பின்;

(ஏ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் சார்பாக அல்லது அதனால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந் தத்தின் கீழ் நேரடியாக அல்லது நேரடியாக அல்லாத முறையில் ஏதேனும் உரிமை, உரித்துவங்கள் அல்லது நன்மைகளை வைத்திருத்தல் அல்லது அனுபவித்தல்.

*உற்பத்தித் திறன் ஆணைக் குழுவின் தவிசாளர்*

**139.** (1) முழு நேர உறுப்பினர் அல்லாத உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை சனாதிபதி தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர் சனாதிபதி முகவரியிட்டு அனுப்பப்படும் கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகுகை சனாதிபதியினால் அது எழுத்து மூலமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற திகதியி லிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) சனாதிபதி குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக தவிசாளரின் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய தவிசாளரின் பதவிக் காலம் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவில் அவரது உறுப்பாண்மை காலப்பகுதியாக இருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், சுகவீனம், வேறு உடற் தகுதியீனம், மூன்று மாதங்களுக்கு குறையாத காலப்பகுதியில் இலங்கையில் இல்லாமை, அல்லது வேறு ஏதேனும் காரணி ஆகியவற்றின் நிமித்தம் தற்காலிகமாக தனது கடமைகளை நிறைவேற்ற முடியாத பொழுது சனாதிபதி வேறு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை, நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக தவிசாளராக செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம்*

**140.** உற்பத்திதிறன் ஆணைக்குழுவின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், அவர் பதவி விலகுவதன் மூலம், அவரது இறப்பின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினால் ஒழிய, அவரது நியமனத் திகதியிலிந்து மூன்று ஆண்டு காலப்பகுதி ஒன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டால் ஒழிய தொடர்ச்சியாக அல்லது வேறு வகையாக மேலதிக ஒரு காலத்திற்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராகுதல் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவி விலகுகை மற்றும் பதவியிலிருந்து அகற்றுதல்*

**141.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சனாதிபதிக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்டதும் அப்பொருள் பட்டதுமான கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன் அத்தகைய விலகுகை எழுத்தில் சனாதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) சனாதிபதி குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்ட நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது வேறு ஏதேனும் தன்மையில் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவில் சேவையாற்றுவதற்கு தகவுடையவரலாகாது.

(3) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறக்கின்றவிடத்து, பதவி விலகுகின்ற விடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற விடத்து 137 மற்றும் 138 ஆம் பிரிவுகளை கருத்திற் கொண்டு சனாதிபதி, அவரது

இடத்திற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துருகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தின் முடிவுறா எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகித்தலும் வேண்டும். மேலும் ஒரு காலப்பகுதிக்கு தொடர்ச்சியாகவோ அல்லது வேறு விதமாகவோ மீள் நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராக இருத்தல் வேண்டும்.

(4) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிற்கு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகயீனம், வேறு காரணங்கள், அல்லது மூன்று மாதங்களுக்கு குறையாத காலப்பகுதியில் இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்ற விடத்து, 137 மற்றும் 138 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளை கருத்திற் கொண்டு சனாதிபதி அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு அவர் இல்லாத காலப்பகுதிக்கு வேறு ஒரு ஆளை நியமிக்கலாம்.

(5) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் ஒருவர் தனது வருகை தர முடியாமைக்காக முன்கூட்டியே உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிடமிருந்து மன்னிப்பை பெற்றுக் கொள்ளாமல் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காதவிடத்து மூன்றாவது கூட்ட முடிவிலிருந்து அத்தகைய உறுப்பினர் தனது பதவியை விட்டு விலகிச் சென்றதாக கருதப்படுவார். அப்பொழுது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு மற்றொரு ஆளை சனாதிபதி நியமிக்கலாம்.

*உறுப்பினர்களின் நிதி ரீதியான நலன்கள்*

**142.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினராக ஆள் ஒருவரை நியமிப்பதற்கு முன்னர் சனாதிபதி, குறிப்பிட்ட ஆட்களினாலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களோ உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் பணிகளை பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய எத்தகைய நிதி ரீதியான நலன்களும் இல்லை என்பதை பிரகடனப்படுத்துவதுடன் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் உறுப்பினராக பணியாற்றுவதன் காரணமாக தனது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுகின்ற பொழுது பங்கமான முறையில்

பாதிக்கக்கூடிய எவையும் இல்லை என்பதுடன் அவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் சனாதிபதி திருப்தியுறல் வேண்டும்.

(2) பொருளாதார ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் பொருளாதார ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட திலிருந்து எத்தகைய நிதி ரீதியான அல்லது அதனை ஒத்த நலன்களை பெற்றுக்கொள்ளவில்லை என்பதை அவ்வப்போது சனாதிபதியும் திருப்தியுறல் வேண்டும்.

(3) (அ) ஏதேனும் ஒப்பந்தம், உடன்படிக்கை, வியாபாரம் அல்லது உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப் பட்ட ஏதேனும் விடயங்கள் அல்லது மேற்கொள்ளவிருக்கின்ற பிரேரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் நேரடியாகவோ அல்லது நேரடியற்ற முறையிலோ ஆர்வமுடைய உற்பத்தித் துறை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் உடனடியாக ஆர்வத்தின் தன்மை மற்றும் அதன் அளவு ஆகியவற்றை உற்பத்தித்திறன் ஆணைககுழுவிற்கு அல்லது சனாதிபதிக்கு பொருத்தமான முறையில் அறிவித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்தல்களும் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கூட்ட அறிக்கையில் பதியப் படுவதுடன் அதன் பின்னர் அந்த உறுப்பினர் அத்தகைய ஒப்பந்தம், உடன்படிக்கை, வியாபாரம் அல்லது ஏனைய விடயம் தொடர்பில் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவுடன் தொடர்புடைய எந்த விடயத்திலும் பங்குபற்றுதல் கூடாது.

(4) ஒவ்வொரு விடயமாக பதிவுப் புத்தகம் ஒன்றை அல்லது அக்கறை முறன்பாடு தொடர்பான பதிவுகளை உற்பத்தித்திறன் ஆணைக்குழு பேணுதல் வேண்டும்.

உற்பத்தித் திறன் ஆணைக் குழுவின் கூட்ட நடப்பெண் மற்றும் கூட்டங்கள்

**143.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஆகக் குறைந்தது ஒரு தடவை நடாத்தப்படுதல் இப்பாகத்தின் கீழ் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிற்கு அதனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, செயலாற்றுவதற்கு, நிறைவேற்று வதற்கு வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட நோக்கங்களை தேவைப்பாட்டிற்கு ஏற்ப பயன்படுத்தல் வேண்டும்.

(2) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண்ணானது தவிசாளர் உள்ளடங்கலாக மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். தவிசாளர் இல்லாத விடத்து கூட்ட நடப்பெண்ணானது பதில் தவிசாளர் உள்ளடங் கலாக மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(3) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கூட்டம் ஒன்றில் -

(அ) கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட இடம், திகதி மற்றும் நேரத்தில் ஒன்று கூட கூட்ட நடப்பெண்ணை அமைத்து உருவாக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் நடாத்தப்படலாம்; அல்லது

(ஆ) எந்த கட்புல, செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம், பங்குபற்றுகின்றவர்களும் கூட்ட நடப் பெண்ணை அமைத்து உருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்ட காலவேளையின் போது ஒவ்வொரு பங்குபற்றும் உறுப்பினரை உடன் நிகழ்வாக பார்க்கவும் கேட்கவும் முடியுமோ அந்த கட்புல செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம் நடாத்தப்படலாம்.

(4) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் ஒவ்வொரு கூட்டங்களுக்கும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமூகமளிக்காதவிடத்து 141 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்கு பதிலாக கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர் அத்தகைய கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல் வேண்டும்.

(5) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடிவொன்றுக்கான எல்லா கேள்விகளும் அத்தகைய கூட்டத்திற்கு சமூகமளித்துள்ள உறுப்பினர்களும் பெரும்பான்மையோரின் வாக்கின் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாக இருக்கும் விடயத்தில் தவிசாளர் அவரது வாக்கிற்கு மேலதிகமாக அரிதியிடும் வாக்கொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது அதன் உறுப்பினர்களுக்கு மத்தியில் ஏதேனும் வெற்றிடம் எவ்வாறு ஆயினும்செயலாற்றலாம் என்பதுடன் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை முறை அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகாது அல்லது செல்லுபடியற்றதாக கருதப்படலாகாது.

(7) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு அமைய, அதனது கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்து அவற்றை நடத்துவது தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல்களை கொண்டு நடாத்துதல் ஆகியன பற்றிய ஒழுங்குவிதிகளை உற்பத்தித்திறன் ஆணைக்குழு மேற்கொள்ளலாம்.

*உற்பத்தித்திறன் ஆணைக்குழு உறுப்பினர் களுக்கான ஊதியம்*

**144.** திரட்டிய நிதியத்திலிருந்து அறவிடக் கூடிய விதத்தில் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய முறையில் அத்தகைய விகிதத்தில் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோருக்கான ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*உற்பத்தித் திறன் ஆணைக் குழுவின் இலச்சினை*

**145.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் இலச்சினையானது உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கின்றவாறு இருத்தல் வேண்டும்.

(2) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் இலச்சினையானது —

(அ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் முடிவு செய்யக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அல்லது

(ஆ) காலத்திற்கு காலம் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் முடிவு செய்யக் கூடியவாறான அத்தகைய ஆள் அல்லது ஆட்களின் கட்டுக் காப்பிலிருத்தல் வேண்டும்.

(3) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் வலுவளிப்புடன் உற்பத்தித் துறை ஆணைக்குழுவின் தவிசாளரினதும் வேறொரு உறுப்பினரதும் முன்னிலையில் தவிர ஏதேனும் சாதானத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதல் ஆகாது; அவர்கள் தாம் சமூகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுகின்ற பொழுது தவிசாளர் சமூகமளிப்பதற்கு இயலாதவராக இருக்கின்றவிடத்து அதன் சார்பாக தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் எவரேனும் உறுப்பினர், இவ்வுற்பிரிவின் முற்புகுந்த ஏற்பாட்டிற்கு இணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(4) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் இலச்சினை எந்த சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பு ஒன்றை நிறுவகம் பேணுதல் வேண்டும்.

உற்பத்தித் திறன் ஆணைக்குழுவானது கூட்டங்களுக்கு வருகை தரும் படி நிபுணர்களுக்கும் அல்லது தொழில் வாண்மை மிக்கவர்களுக்கும் அழைப்பு விடுத்தல்

**146.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது அவசியம் என அது கருதுகின்ற போதெல்லாம் உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதன் பணிகளை பயனுற நிறைவேற்றுவதற்காக ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் கையாளப்படுகின்ற ஏதேனும் விடயத்தின் மீது நிபுணத்துவத்தை கொண்டுள்ள நிபுணர்களுக்கு அல்லது தொழில்வாண்மை மிக்கவர்களுக்கு அத்தகைய விடயப் பொருள் மீதான அவர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நோக்கத் திற்காக அத்தகைய கூட்டத்திற்கு வருகை தரும் படி அழைப்பு விடுக்கலாம். ஆயின் எவ்வாறாயினும், உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது அத்தகைய நிபுணர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு தனித் தற்றுணிவை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படுகின்றதன் பிரகாரம் அத்தகைய நிபுணர்கள் அல்லது தொழில்வாண்மைமிக்கவர்களுக்காக ஊதியத்தை செலுத்தலாம். ஆயின், வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை.

(3) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் வரவழைக்கப்பட்ட நிபுணர் ஒவ்வொருவரும் அல்லது தொழில்வாண்மைமிக்க ஒவ்வொருவரும் உற்பத்தித்துறை ஆணைக்குழுவினால் ஈடுபடுத்தப்படுவதற்கு முன்பதாக 154 ஆம் பிரிவின் தேவைப்படுத்தப்படும் பிரகடனம் ஒன்றை செய்தல் வேண்டும் என்பதுடன், உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் கலந்துரையாடப்படும் எல்லா கருமங்களையும் உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதுடன் அவரின் ஈடுபாட்டின் நியதிகளின் படி அத்தகைய நிபுணரினால் அல்லது தொழில்வாண்மை மிக்கவரினால் கொள்ளப்பட்ட தகவலை இரகசியமாக பேணுதல் வேண்டும். உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதன் அலுவல்களில் நிதிசார் அல்லது வேறு அக்கறைகளை கொண்டிருக்கவில்லை என பிரகடனம் ஒன்றை அத்தகைய நிபுணர் அல்லது தொழில்வாண்மைமிக்க ஆள் ஒவ்வொருவரும் செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் XXX

## உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் பணியாட்டொகுதியினர்

உற்பத்தித் திறன் ஆணைக் குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர்

**147.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் உற்பத்தித் திறன் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளராக ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும் (இதனகத்து "நிறைவேற்றுப் பணிப்பாளர்" என அழைக்கப்படுவார்). இவரின் தகைமைகளும் அனுபவமும் தொழில் நியதி நிபந்தனைகளும் விதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) நிறைவேற்றுப் பணிப்பாளரே உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராகும்.

(3) நிறைவேற்றுப் பணிப்பாளர் உற்பத்தித்திறன் ஆணைக் குழுவின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய -

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகமும் கட்டுப்பாடும் உட்பட உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதன் அலுவல்களினது நிருவாகம் பொறுப்பிக்கப்பட்டவ ராதல் வேண்டும்;

(ஆ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கணக்கீட்டு அலுவலராக பணியாற்றல்;

(இ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் எல்லா முடிவு களினதும் நிறைவேற்றுகைக்காக பொறுப்பாக இருத்தல் வேண்டும்; மற்றும்

(ஈ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் அவருக்கு குறித்தளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) நிறைவேற்றுப் பணிப்பாளர் உற்பத்தித்திறன் ஆணைக் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் சமூகமளிக்கவும், உரையாற்றவும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(5) நிறைவேற்றுப் பணிப்பாளர் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் எழுத்திலான அங்கீகாரத்துடன் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்கு குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமை அல்லது பணியை உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதன் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எழுத்தில் கையளிப்பது அவசியமானது என அவர் கருதும் போதெல்லாம் அவ்வாறு செய்யலாம் என்பதுடன் அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் நிறைவேற்றுப் பணிப்பாளரின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கு அமைய அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகித்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(6) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது பின்வரும் காரணங்களுக்காக நிறைவேற்றுப் பணிப்பாளரை பதவியிலிருந்து அகற்றலாம் -

(அ) அவர் தனது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்கு நிரந்தரமாக இயலாதவரின்;

(ஆ) அவர் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில், மோசடியான அல்லது சட்டவிரோதமான பண்பினதான அல்லது உற்பத்தித் திறன் ஆணைக் குழு என்பதன் நலனுக்கு பங்கம் விளைவிப்பதான ஏதேனும் செயலை செய்திருப்பின்; அல்லது அவர் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதற்கு தவறியிருப்பின்.

(7) நிறைவேற்றுப் பணிப்பாளர், அவர் இறப்பதன் மேல், (6) ஆம் உட்பிரிவின் கீழ் அவர் பதவியிலிருந்து அகற்றப் படுவதன் மேல் அல்லது அப்பதவியை வகிப்பவரினால் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிற்கு முகவரியிட்டு அனுப்பப் பட்ட கடிததத்தின் மூலம் அவர் பதவி விலகுவதன் மேல் வறிதாக வருதல் வேண்டும்.

(8) நிறைவேற்று பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது உற்பத்தித் திறன் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரை (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமனம் ஒன்றை மேற்கொள்ளும் வரை நிறைவேற்றுப் பணிப்பாளரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக நியமிக்க முடியும்.

(9) ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் மற்றும் அவ்வப்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏதேனும் வழிகாட்டிகள் ஆகியவற்றின் பிரகாரம் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கான ஊதியத்தை உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்க முடியும்.

**148.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உற்பத்தித் திறன் ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களையும், கடமை களையும், பணிகளையும் வினைத்திறனாக பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக் கூடியவரான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களையும் ஊழியர் களையும் உற்பத்தித்திறன் ஆணைக்குழு நியமிக்கலாம்.

*உற்பத்தித் திறன் ஆணைக் குழுவின் பணியாட் டொகுதி யினர் நியமனம்*

(2) ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் அல்லது அரசாங்கத்தினால் அவ்வப்போது வழங்கப்படுகின்ற வழிகாட்டிகள் ஆகியவற்றின் பிரகாரம் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் பின்வருவனவற்றை பொருளாதார ஆணைக்குழு தீர்மானிக்கலாம் -

(அ) அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று கட்டுப்பாட்டை பிரயோகிக்கலாம் அல்லது அவர்களை பதவி நீக்கலாம்

(ஆ) ஆட்சேர்ப்பு திட்டம் உள்ளடங்கலாக அத்தகைய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான தொழில்வாய்ப்பு பற்றிய நியதிகளும் நிபந்தனைகளும்

(இ) அத்தயை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஊதியம் தொடர்பான விகிதங்கள்.

(3) உற்பத்தித்திறன் ஆணைககுழுவானது, பகிரங்க அல்லது தனியார் துறையில் எவரேனுமாளினால் முன்னர் வகிக்கப்பட்ட ஏதேனும் பதவியிலிருந்து பதவி நீக்கப்பட்டுள்ள அத்தகைய ஆளை உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் அலுவலர் ஒருவராக அல்லது வேறு ஊழியராக நியமித்தலாகாது.

*பகிரங்க அலுவலர்களை உற்பத்தித்திறன் ஆணைக்குழு வின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்*

**149.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில், பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான காலப்பகுதிக்கு உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக் கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் உற்பத்தித்திறன் ஆணைககுழுவின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படும் இடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவதால் வேண்டும்.

## அத்தியாயம் **XXXI**

## நிதி

*உற்பத்தித்திறன் ஆணைக்குழு வின் நிதியம்*

**150.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்தின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் -

(அ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் பயன்பாட்டிற் கென பாராளுமன்றத்தினால் காலத்திற்கு காலம் வாக்களிக்கப்படக் கூடிய பணங்களின் அத்தகைய

எல்லா தொகைகளும் உற்பத்தித்திறன் ஆணைக் குழுவின் நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) தனது தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகிய வற்றை பிரயோகிப்பதற்கு, செயலாற்றுவதற்கு, நிறைவேற்றுவதற்காக உற்பத்தித் திறன் ஆணைக் குழுவிற்கு கிடைக்கப் பெறுகின்ற அத்தகைய சகல பணமும் மற்றும் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக கடன்கள், நன்கொடைகள், பரிசுகள், விருப்புறுதிகள் அல்லது மானியங்களாக இலங்கையிலிருந்தோ அல்லது இலங்கைக்கு வெளியிலிருந்தோ எத்தகைய மூலங்களி னால் கிடைக்கின்றவைகள்.

(3) உற்பத்தித்திறன் ஆணைக்குழு இப்பாகத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்ப திலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உரப்பட்ட செலவினத்தை கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்பட்ட அத்தகைய எல்லா பணத் தொகைகளும் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

உற்பத்தித் திறன் ஆணைக்குழு வின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**151.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் மற்றும் வேறெல்லா கொடுக்கல் வாங்கல்கள் பற்றி முறையான கணக்குகள் பற்றிய புத்தகங்களை வைத்திருக்கப்படுவதை செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை ஏற்பாடுகள் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கணக்குகள் பற்றிய கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## அத்தியாயம் XXXII

### பொதுவான ஏற்பாடுகள்

குழுக்களையும் அல்லது குழாங்களையும் தாபித்தல்

**152.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது இப்பாகத்தின்கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதற்கு உதவுவதற்கு குழுக்களையும் குழாங்களையும் தாபிக்கலாம். அத்தோடு பொருளியல், முதலீடு, நிதி, வியாபாரம், வர்த்தகம், சட்டம், தகவல் தொழினுட்பம், பொறியியல், கணக்கியல் ஆகிய துறைகளில் அனுபவமிக்க நிபுணர்களை கொண்ட அத்தகைய ஆட்களை அத்தகைய ஏதேனும் குழுக்களில் அல்லது குழாங்களில் உறுப்பினர்களாக இருப்பது அவசியம் என உற்பத்தித்திறன் ஆணைக்குழு கருதுகின்றவர்களை நியமிக்கலாம்.

(2) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் அத்தகைய குழுக்களுக்கு அல்லது குழாம்களுக்கு வழங்கப்பட்ட செயலாற்றுகை நியதியில் குறிப்பிடப்பட்ட பணிகளையும் மற்றும் கடப்பாடு களையும் அத்தகைய குழு அல்லது குழாம் முன்னெடுத்தல் வேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட துறைகளில் தேவையான அறிவையும் நிபுணத்துவத்தையும் கொண்ட எவரேனும் ஆட்களை அத்தகைய குழுவிற்கு அல்லது குழாத்திற்கு இணைப்பது அவசியம் என உற்பத்தித்திறன் ஆணைக்குழு பரிசீலிக்கின்ற பொழுது அவ்வாறு செய்யலாம்.

(4) ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் அல்லது அவ்வப்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் வழிகாட்டிகள் ஆகியவற்றின் பிரகாரம் அத்தகைய குழுக்கள் அல்லது குழாம்களின் உறுப்பினர்களுக்கான மதிப்பூதியத்தை உற்பத்தித்திறன் ஆணைக்குழு தீர்மானிக்கலாம்.

(5) அத்தகைய குழுக்களின் அல்லது குழாம்களின் உறுப்பினர்கள் கூட்டங்களுக்கு சமூகமளிக்கலாம். அவர்களது

தேவை கோரப்பட்ட கூட்டங்களுக்கு சமூகமளித்து அவர்களது அபிப்பிராயத்தை தெரிவிக்கலாம். ஆயின் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கான உரிமை இல்லை.

ஆண்டறிக்கைகள்

**153.** (1) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது ஒவ்வொரு நிதியாண்டும் முடிவுற்று நான்கு மாத காலப்பகுதியினுள் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை சபாநாயகருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) வருடத்திற்கான உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் அதனுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் இணைக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) அத்தகயை அறிக்கை மற்றும் கணக்குகளுடன் தொடர்புடைய உடன் அடுத்துவரும் வருடத்திற்கான பிரேரிக்கப்பட்ட பணிகள் பற்றிய அறிக்கையொன்று.

(2) வருடாந்த அறிக்கை கிடைக்கப் பெற்ற திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள் சபாநாயகர் அத்தகைய வருடாந்த அறிக்கை மற்றும் (1) ஆம் உடபிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை பாராளுமன்றத்தின் பரிசீலனைக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

இரகசியம் பற்றிய வெளிப் படுத்துகை

**154.** உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினர், நிறைவேற்றுப் பணிப்பாளர், உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் சகல அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் 146 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் ஆலோசிக்கப்பட்ட சகல நிபுணர்கள் மற்றும் தொழில் வாண்மைமிக்கவர்கள் மற்றும் 152 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் குழாம்களின் உறுப்பினர்கள் ஆகிய சகலரும் அவர்களது கடமைகளை ஏற்க முன்னர் இப்பாகத்தின் கீழான அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும்,

நிறைவேற்றுவதிலும் அவர்களது அறிவுக்கு எட்டியுள்ளவையும் உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதன் அலுவல்கள் சம்பந்தமானவைகளான எல்லா கருமங்கள் தொடர்பிலும் தாம் கண்டிப்பான இரகசியத்தை கடைபிடிப்பார்கள் என வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகை ஒன்றை கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் சந்தர்ப்பங்களை தவிர அத்தகைய ஏதேனும் கருமத்தை தாம் வெளிப்படுத்தமாட்டார்கள் அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் வாக்குறுதியளித்தலும் வேண்டும் -

(அ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும் தேவைப்படுத்தும் போது;

(ஆ) இப்பாகத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தல், புரிதல், நிறைவேற்றல் நோக்கங்களுக்காக; அல்லது

(இ) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமை சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுக்கும் இணங்கியொழுகுவதற்கெனவும்.

தகவல் போன்றவற்றை வழங்கத் தவறுவது தவறாகும்

**155.** (1) இப்பாகத்தின் கீழ் தனது கடமைகள் மற்றும் பணிகளை செயலாற்றுகையில் மற்றும் நிறைவேற்றுகையில், உற்பத்தித்திறன் ஆணைக்குழு அல்லது எவரேனும் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் சார்பாக அதிகாரமளிக்கப் பட்ட எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர், எழுத்து மூலம் ஏதேனும் பகிரங்க நிறுவகம் அல்லது எவரேனும் நபரை உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிற்கு வழங்கும் படி தேவைப் படுத்தினால் அல்லது உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் அலுவலர் அல்லது ஊழியர் தேவைப்படுத்தினால் அத்தகைய அறிவித்தலில் அத்தகைய காலப்பகுதி குறிப்பிடப்படுதல் வேண்டும், அத்தகைய தகவல்கள், தரவுகள், புள்ளிவிபரங்கள் அல்லது ஆவணங்கள் ஆகியன அந்த அறிவித்தலில் குறித் துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) அந்த பகிரங்க நிறுவனத்தின் தலைவர் அல்லது (1) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய ஆள் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய ஏதேனும் தகவல்கள், தரவுகள், புள்ளிவிபரங்கள் அல்லது ஆவணங்களை வழங்குவது, அத்தகைய ஆள் கடமையாதல் வேண்டும்.

(3) எவரேனும் ஆள் -

(அ) இந்தப் பிரிவின் கீழ் கோரிக்கை விடுக்கப்பட்ட பொழுது, ஏதேனும் தகவல்களை, தரவுகளை, புள்ளி விபரங்களை அல்லது ஆவணங்களை வழங்குவதற்கு அல்லது இணைப்பதற்கு தவறினால்; அல்லது

(ஆ) அது பிழையானது அல்லது தவறானது என தெரிந்திருந்தும் ஏதேனும் கூற்றினை மேற்கொள்ளல் அல்லது தகவல்களை சமர்ப்பித்தல் அல்லது தரவுகள், புள்ளிவிபரங்களை சமர்ப்பித்தல் அல்லது ஆவணத்தை சமர்ப்பித்தல்,

இப்பாகத்தின்கீழ் தவறு புரிந்தவராவார் என்பதுடன் ஒரு நீதிவானினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்று பொறுப்பாதலும் வேண்டும்.

ஆட்கள் குழுவினாலான குற்றங்கள்

**156.** இப்பாகத்தின் கீழ் தவறொன்றிற்காக ஒன்றிற்காக ஆட்கள் குழுவினாலானர்களுக்கு குற்றத்தீர்ப்பளிக்கும் பட்சத்தில்-

(அ) அத்தகைய ஆட்கள் குழுவினாலானவர்கள் கூட்டிணைக்கப்பட்ட அமைப்பாக அல்லது கூட்டிணைக்கப்படாத அமைப்பாக இருப்பின், ஒவ்வொரு பணிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது முகவர்; மற்றும்

(ஆ) அத்தகைய ஆட்கள் குழுவினாலானர்கள் ஒரு நிறுவனமாக இருப்பின் அதன் ஒவ்வொரு பங்காளர், எவரேனும் அலுவலர் அல்லது அத்தகைய நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவர்,

சம்பந்தப்பட்ட தவறுகளுக்கு தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட தண்டனைக்கு பொறுப்பாதல் வேண்டும். ஆயின் கூட்டிணைக் கப்பட்ட அமைப்பு, கூட்டிணைக்கப்படாத அல்லது அத்தகைய நிறுவனத்தின் பங்காளர், அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாமலே புரியப்பட்டது என அல்லது அவர் அத்தகைய தவறு புரியப்படுவதை தடுப்பதற்கு எல்லா உரிய விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தவர் எம்பிப்பாராயின் அத்தகைய தவறை புரிந்தவராக கருதப்படலாகாது.

*உற்பத்தித்திறன் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள், நிறைவேற்றுப் பணிப்பாளர், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் பகிரங்க சேவையாளர் களாக கருதப்படுதல் வேண்டும். உற்பத்தித்திறன் ஆணைக்குழு வின் சகல உறுப்பினர்கள் நிறைவேற்றுப் பணிப்பாளர், அலுவலர்கள் மற்றும் உற்பத்தித்திறன் ஆணைக்குழு வின் ஊழியர்கள் அனைவரும் பகிரங்க சேவையாளர் களாக கருதப்படுதல் வேண்டும்*

**157.** உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் சகல உறுப்பினர்கள், நிறைவேற்றுப் பணிப்பாளர், அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோர் பகிரங்க சேவையாளர்களாக கருதப்படுதல் வேண்டும். உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் சகல உறுப்பினர்கள் நிறைவேற்றுப் பணிப்பாளர், அலுவலர்கள் மற்றும் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் ஊழியர்கள் அனைவரும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாக கருதப்படுதல் வேண்டும்.

*உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாக கருதப்படுதல் வேண்டும்*

**158.** உற்பத்தித்திறன் ஆணைக்குழுவானது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கமைய பொருள் அமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*குற்ற வழக்கிலான அல்லது துடர்ச்சியிலான செலவுகள் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல்*

**159.** (1) ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாய சபை ஆகியவற்றின் முன்னர் உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதனால் அல்லது அதற்கு எதிராக கொண்டு வரப்பட்ட ஏதேனும் குற்ற வழக்கில் அல்லது துடர்ச்சியில் உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதனால் உரப்பட்ட ஏதேனும் செலவு உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதற்கு செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் உற்பத்தித் திறன் ஆணைக்குழு என்பதன் நிதிகளுக்கு வரவு வைக்கப் படுதலும் வேண்டும்.

(2) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் பணிப்புரைகளின் கீழ் உற்பத்தித்திறன் ஆணைக்குழு என்பதன் எவரேனும் உறுப்பினர், நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்லது எவரேனும் அலுவலர் அல்லது உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் ஊழியர் ஆகியோரினால் செய்யப்படுகின்ற அல்லது செய்யப்படுகின்றதாக கொள்ளப் படுகின்ற ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அல்லது நியாய சபையின் முன்னர் அத்தகைய ஆளுக்கு எதிரகா கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அவரினால் உரப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு, அத்தகைய துடர்ச்சியில் அல்லது

குற்ற வழக்கில் அத்தகைய ஆளினால் அறிவிடப்பட்டால் ஒழிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

விதிகள்

***160.*** *(1)* இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, உற்பத்தித் திறன் ஆணைக்குழுவானது இப்பாகத்தின் கீழ் எக்கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டும் என அதிகாரமளிக் கப்படுகின்றதோ அக்கருமம் தொடர்பில் அல்லது பின்வரும் எல்லா கருமங்கள் தொடர்பில் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்: -

(அ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் கூட்டங்களை அழைப்பதற்கும், நடாத்துவதற்கும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை கொண்டு நடாத்துவதற்கும் என பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும்;

(ஆ) 155 ஆம் பிரிவின் உற்பத்தித்திறன் ஆணைக்குழுவிற்கு தகவல்கள் வழங்கப்பட வேண்டிய படிவம்;

(இ) உற்பத்தித்திறன் தொடர்பான பகிரங்க விசாரணைகள் மற்றும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் ஆகியன தொடர்பில் பயன்படுத்தப்பட வேண்டிய முறையியல்; மற்றும்

(ஈ) உற்பத்தித்திறன் ஆணைக்குழுவின் அலுவல்களை முகாமைத்துவம் செய்வதுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயங்கள்.

*(2)* உற்பத்தித்திறன் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிப்படுதல் வேண்டும் என்பதுடன் அது வெளியிடப்பட்ட திகதியிலிருந்து அல்லது அங்கு குறித்துரைக்கப்படும் பின்னரான வேறு ஒரு திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**161.** இப்பாகத்தின் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுத்தினால் ஒழிய - பொருள் கோடல்

"ஆள்" என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக் கப்படாத இயற்கை ஆட்கள் குழுவினாலானவர்கள் உள்ளடங்கலாக;

"பகிரங்க நிறுவனங்கள்" என்பது அரசாங்கத்தின் அமைச் சொன்று, அரசாங்க திணைக்களம், மாகாண சபை, மாகாண அமைச்சு அல்லது திணைக்களம் ஒன்று, உள்ளூர் அதிகாரசபை அல்லது இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் முகவர்; மற்றும்

"சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகள்" என்பது அமைச்சரவை மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## பாகம் V

## அத்தியாயம் XXXIII

## இலங்கை பொருளியல் மற்றும் சர்வதேச வியாபார நிறுவகத்தை தாபித்தல்

**162.** (1) "இலங்கை பொருளியல் மற்றும் சர்வதேச வியாபார நிறுவகம்" என அழைக்கப்பட வேண்டிய நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இதனகத்து பின்னர் "நிறுவகம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை பொருளியல் மற்றும் சர்வதேச வியாபார நிறுவகத்தை தாபித்தல்

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித் தளிக்கப்பட்ட பெயரினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத்தொடுக்கலா மென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**163.** பின்வருவன நிறுவகத்தின் குறிக்கோள்களாதல் வேண்டும் - நிறுவகத்தின் குறிக்கோள்கள்

(அ) பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபாரம் தொடர்பான ஆய்வுக்கும் கொள்கை உருவாக்கத்துக்குமான தளமொன்றாக இருத்தல்;

(ஆ) பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபாரத் துறைகளில் அதிநவீன ஆய்வு மற்றும் கற்கைகளை வழங்குதல்;

(இ) பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபாரம் தொடர்பில் தூண்டுதலான கொள்கைக்கும் மற்றும் கருத்தேற்புக்களுக்குமான யோசனைகளுக்குப் பங்களித்தல்; அத்துடன்

(ஈ) வினைத்திறனான சர்வதேச வியாபார மற்றும் பிராந்திய வியாபார ஒருங்கிணைப்புக் கொள்கைகளை ஆய்வுசெய்தல்.

**164.** நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் - நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

(அ) பாராளுமன்ற உறுப்பினர்கள், விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பகிரங்க அலுவலர்கள் மற்றும் தனியார்த்துறைப் பிரதிநிதிகளிடையே பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபாரக் கற்கைகளிலான அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குதல், மேம்படுத்துதல் மற்றும் வசதிப்படுத்துதல்;

(ஆ) பாராளுமன்ற உறுப்பினர்கள், சிரேட்ட பகிரங்க அலுவலர்கள் மற்றும் தனியார்த்துறைப் பிரதிநிதிகளிடையே பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபாரத்திலான அறிவைப் பரப்புவதற்கான விரிவுரைகள், நேரடிப் பயிற்சிகள், கற்கைச்

சுற்றுலாக்கள், தொழிலாற்றுனர் பரிமாற்றங்கள், சகபாடிகளுடனான பரஸ்பரக் கற்றல் மற்றும் வேறு முறைமைகளை ஒழுங்கு செய்தல்;

(இ) அரசியல் தலைவர்கள், பகிரங்க அலுவலர்கள், கல்வியியலாளர்கள், தொழிலதிபர்கள், நன்கொடையளிக்கும் முகவராண்மைகள் மற்றும் உலகளாவிய நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபாரம் என்ற துறைகளில் கருத்தாடலையும் பங்காண்மைகளையும் ஊக்குவித்து வளர்த்தல்;

(ஈ) அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் மற்றும் பயிற்சிச் பணிகளில் பங்குபற்றுவதற்குமென இலங்கைக்குள் ளும் இலங்கைக்கு வெளியேயுமுள்ள உள்நாட்டிலும் உலகளாவியரீதியிலும் பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபாரம் என்ற துறைகளில் புகழ்பெற்ற சிந்தனையாளர் அமைப்புக்களின் தலைவர்கள், நிபுணர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் வளவாளர்களுடன் இணைந்து பணியாற்றுதல்;

(உ) உள்நாட்டு சிந்தனையாளர் அமைப்புக்களுடன் கூட்டுழைப்புடன் செயற்பட்டு பாராளுமன்றம் மற்றும் அரச நிறுவனங்கள் சார்பில் பயிற்சிகளையும் ஆய்வுகளையும் பொறுப்பேற்று நடாத்தி அவ்வாய்வின் பெறுபேறுகளை அரசாங்கத்தின் அக்கறைகொண்டுள்ளோர் தமது திட்டமிடற் செயலாக்கங்களில் கூட்டிணைப்புச் செய்யக்கூடிய எய்தக்கூடிய திட்டங்களாக நிலைமாற்றுதல்;

(ஊ) காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல்:

ஆயின் எவ்வாறாயினும், நிறுவனமானது, அதற்கு அளிக்கப்படும் எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும்,

நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக் களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்;

(எ) அது தோதானதெனக் கருதக்கூடியவாறான ஏதேனும் வங்கியில் ஏதேனும் கணக்கைத் திறத்தலும் பேணுதலும் அத்துடன் அத்தகைய கணக்கு, நிலவுகின்ற ஏற்புடையற் பாலனவான எழுத்திலான சட்டங்களுக்கிணங்க செயற்படுத்தப்படுதலும் வேண்டும்;

(ஏ) நிறுவகத்தின் நிதியத்தை முகாமைசெய்தலும், கட்டுப் படுத்துதலும், நிருவகித்தலும் மற்றும் செயற் படுத்துதலும்;

(ஐ) இப்பாகத்தின் நோக்கங்களுக்கு உடனடியாக தேவைப்படாத, நிறுவகத்துக்குச் சொந்தமான அத்தகைய பணத்தொகைகளை முதலீடு செய்தல்;

(ஒ) ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தைக் கொள்வனவு செய்தல், வைத்திருத்தல், குத்தகை அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடகுவைத்தல், விற்பனைசெய்தல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ஓ) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் மற்றும் அதன் பணிகளை நிறைவேற்றும் கடமைகளைப் புரியும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கை களையும் அதன் எவரேனும் அலுவலர் அல்லது முகவரினூடாக ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் செய்துகொள்ளலும் புரிதலும்;

(ஔ) நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம் தொடர்பில் விதிகளை ஆக்குதல்;

(க) நிறுவகத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைக் கான கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடுதல்;

(ங) நிறுவகத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர் களையும், சேவையாளர்களையும் மற்றும் முகவர் களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்தல், அவர்களுக்கு ஊதியமளித்தல் மற்றும் அவர்கள்மீதான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்;

(ச) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே நிறுவகத்தின் அலுவலர்களையும் ஊழியர்களையும் பயிற்றுவித்தல்; அத்துடன்

(ஞ) இப்பாகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது இப்பாகத்தின்கீழ் நிறுவகத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு இடைநேர்விளை வான அல்லது உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

அத்தியாயம் XXXIV

## நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும்

*நிறுவகச் சபைக்கு உரித்தாக்கப் பட்ட நிறுவகத்தின் நிருவாகமும் முகாமையும்*

**165.** (1) நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம், முகாமை மற்றும் கட்டுப்பாடு (இச்சட்டத்தில் "நிருவகச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளுனர்கள் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) நிருவகச் சபையானது, நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்துக்காக, இப்பாகத்தினால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன்மீது விதிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

*நிறுவக சபையை அமைத்துரு வாக்குதல்*

**166.** நிருவகச் சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது –

(i) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியின் தரத்திற்கு குறையாத நிதியமைச்சின் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர்;

(ii) பொருளாதார ஆணைக்குழுவின் பிரதிநிதி;

(iii) சர்வதேச வியாபாரத்திற்கான தூதுவர்; மற்றும்

(ஆ) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்; அவர்கள் பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபாரக் கற்கைகள் துறைகளில் கல்வி மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர் கள்:-

(i) (289 ஆம் அத்தியாயமான) இலங்கை வர்த்தகப் பணிமனைக் கட்டளைச் சட்டத் தினால் தாபிக்கப்பட்ட இலங்கை வர்த்தகப் பணிமனையினால் பெயர் குறித்து நியமிக் கப்பட்ட உறுப்பினரொருவர்;

(ii) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்ட இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் பணிமனைகளின் சம்மேளனத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பின ரொருவர்; அத்துடன்

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால்

தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட பொருளியல் பேராசிரியரொருவர்.

நிறுவக சபையின் தவிசாளர்

**167.** (1) அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரை நிறுவக சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை அமைச்சரினால் அது ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) அமைச்சர், எழுத்தில் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக் காகத் தவிசாளரின் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடு களுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம் நிறுவக சபையின் அவரது உறுப்பாண்மைக் காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், சுகவீனம், வேறு உடற்றகுதியீனம், இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சர் வேறு எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை, நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராக அவரது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக தவிசாளராகச் செயலாற்றுவதற்கு நியமிக்கலாம்.

நிறுவக சபையின் உறுப்பின ரொருவராக விருப்பதற்கான தகைமை யீனங்கள்

**168.** ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் நிறுவக சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும் -

(அ) அவர் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லா தொழிந்தால்;

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீன மற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப் படுத்தப்பட்டால்;

(ஈ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்றவர் அல்லது வங்கிமுறிந்தவர் என வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராகவிருந்து பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற வராக அல்லது வங்கி முறிந்தவராகவிருந்தால்;

(உ) அபாயகரமான ஔடதங்கள், போதையூட்டும் ஔடதங்கள் அல்லது உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள் அல்லது மோசடி சம்பந்தமான தவறொன்று தொடர்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புலனாய்வொன்றுக்கு அமைந்தவராகவிருந்தால்;

(ஊ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்;

(எ) நிறுவகத்தினால் அல்லது அதன்சார்பாக செய்துகொள் ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை வைத்திருந்தால் அல்லது துய்த்தால்; அல்லது

(ஏ) நிறுவக சபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை அவர் நிறைவேற்றுவதை பங்கமான முறையில் பாதிக்கக்கூடிய ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்.

பதவிக் காலம்

**169.** நிறுவக சபையின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினரும், அவர் பதவி விலகுவதன்மூலம், அவரது இறப்பின்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப் பட்டாலொழிய தொடர்ச்சியாக அல்லது வேறுவகையாக மேலதிக வொரு காலத்துக்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

பதவிவிலகுகை மற்றும் பதவியிலிருந்து அகற்றப்படுதல்

**170.** (1) நிறுவக சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்டதும் அப்பொருள்பட்டதுமான கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகுகை எழுத்தில் அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், சுகவீனம், உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, அமைச்சர், 166 மற்றும் 168 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

(3) அமைச்சர் எழுத்தில் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக, நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், நிறுவகச் சபையின் உறுப்பினரொருவராக மீளநியமிக் கப்படுவதற்கு அல்லது வேறு ஏதேனும் தன்மையில் நிறுவகச் சபைக்கு சேவையாற்றுவதற்கு தகவுடையவராதலாகாது.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறக்கின்றவிடத்து, பதவிவிலகுகின்றவிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றவிடத்து, அமைச்சர், 166 மற்றும் 168 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

*நிறுவக சபையின் கூட்ட நடப்பெண் மற்றும் கூட்டங்கள்*

**171.** (1) நிறுவக சபையின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் நிறுவகச் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாகவிருத்தலும் வேண்டும்.

(2) தவிசாளர் நிறுவக சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்கு தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) நிறுவக சபையின் கூட்டமொன்று, ஒன்றில் -

(அ) கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடம், தேதி மற்றும் நேரத்தில் ஒன்றுகூடி கூட்டநடப்பெண்ணை அமைத்துரு வாக்குகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினால் நடாத்தப்படலாம்; அல்லது

(ஆ) எந்த கட்புல-செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம், பங்குபற்றுகின்றவர்களும் கூட்ட நடப்பெண்ணை அமைத்துருவாக்குகின்றவர்களுமான எல்லா உறுப்பினர்களும் கூட்டக் காலவேளையின்போது ஒவ்வொரு பங்குபற்றும் உறுப்பினரை உடனிகழ்வாகப் பார்க்கவும் கேட்கவும் முடியுமோ அந்த கட்புல-செவிப்புல தொடர்பாடல் வழிவகைகள் மூலம் நடாத்தப்படலாம்.

(4) நிறுவக சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபொன்றுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்துக்கு சமுகமளித்துள்ள

உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர், அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, நிறுவக சபையின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையை நிறுவக சபை ஒழுங்குபடுத்தலாம்.

ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக நிறுவக சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடி யற்றனவாகக் கருதப்படுத லாகாது

**172.** நிறுவக சபையானது, அதன் உறுப்பினர்களுக்கு மத்தியில் ஏதேனும் வெற்றிடம் எவ்வாறிருப்பினும் செயலாற்றலாம் என்பதுடன் நிறுவக சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கைமுறை அதன் உறுப்பினர் களிடையே ஏதேனும் வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

சபையின் உறுப்பினர் களின் ஊதியம்

**173.** நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் நிறுவக சபையின் உறுப்பினர்களுக்கு ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் இலச்சினை

**174.** (1) நிறுவகத்தின் இலச்சினையானது —

(அ) காலத்துக்குக்காலம் நிறுவக சபை முடிபுசெய்யக்கூடிய வாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்;

(ஆ) நிறுவக சபையினால் தீர்மானிக்கப்படக் கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் வலுவளிப்புடனும் நிறுவக சபையின் தவிசாளரினதும் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையிலும் தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது; அவர்கள், தாம் சமுகமாகியிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்ப மிடுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், நிறுவகத்தின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுகின்றபோது, தவிசாளர் சமுகமளிப்பதற்கு இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அதன் சார்பாக தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவகசபையின் வேறு எவரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டிற்கு இணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதியானவராதல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் இலச்சினை எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும் பற்றிய இடாப்பொன்றை நிறுவகம் பேணுதல் வேண்டும்.

அத்தியாயம் XXXV

## நிறுவகத்தின் பணிப்பாளரும் பணியாட்டொகுதியினரும்

*நிறுவகத்தின் பணிப்பாளரை நியமித்தல்*

**175.** (1) நிறுவக சபையுடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளரொருவர் இருத்தல் வேண்டும். பணிப்பாளர், இறப்பின்மூலம், சட்டத்தின் நடைமுறை மூலம், பதவி விலகுகையின் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, ஐந்து ஆண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் தொடர்ச்சியாக அல்லது வேறுவகையாக எவையேனும் இரண்டு அதிகபட்ச பதவிக்காலப் பகுதியொன்றுக்கு அமைய மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(2) பணிப்பாளர், நிறுவக சபையின் பொதுவான பணிப்புகள் மற்றும் மேற்பார்வைக்கு அமைய —

(அ) பணியாட்டொகுதியினரின் நிருவாகம் மற்றும் அவர்கள் மீதான கட்டுப்பாடு உட்பட நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்;

(ஆ) நிறுவக சபையின் எல்லா முடிபுகளையும் நிறை வேற்றுவதற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) நிறுவக சபையினால் அவருக்கு குறித்தளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர், நிறுவக சபையின் ஏதேனும் கூட்டத்துக்கு சமுகமளித்து உரையாற்றுதல் வேண்டும், ஆனால் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(4) பணிப்பாளர், நிறுவக சபையின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட அவரின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளுள் எவற்றையும் நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு எழுத்தில் கையளித்தல் அவசியமானதென அவர் கருதும்போதெல்லாம், அவ்வாறு செய்யலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி எந்த அலுவலர் அல்லது ஊழியருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அந்த அலுவலர் அல்லது ஊழியர், பணிப்பாளரின் பணிப்புகளுக் கமைய, அவற்றைப் பிரயோகித்தலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(5) அமைச்சர் நிறுவக சபையின் விதப்புரையின்மீது பணிப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்-

(அ) அவர், அவரது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வந்தால்;

(ஆ) ஒரு மோசடியான அல்லது சட்டவிரோதமான தன்மையினதானதென நிறுவக சபை முடிபு செய்துள்ள அல்லது நிறுவகத்தின் அக்கறைகளுக்குப் பங்கமாகவுள்ள ஏதேனும் செயலை அவர் செய்திருந்தால்; அல்லது

(இ) சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகத் தவறியிருந்தால்.

*நிறுவகத்தின் பணியாட் டொகுதியினரும் ஊதியமும்*

**176.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நிறுவகமானது அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை வினைத்திறனுடன் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் தொழிலுக்கமர்த்தலாம் அல்லது நியமிக்கலாம்.

(2) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கமைய இருக்கவேண்டிய அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் நிறுவகத்தின் பணிப்பாளருக்கும் பணியாட் டொகுதியினருக்கும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

*நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கு பகிரங்க அலுவலரை நியமித்தல்*

**177.** (1) நிறுவகத்தின் கோரிக்கையின் பேரில் பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன் நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின்

14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அரசாங்கத்துடனான எந்த ஒப்பந்தமொன்றின்மூலம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்குச் சேவையாற்றுவதற்கு எவரேனும் ஆள் உடன்பட்டுள்ளாரோ அந்த ஒப்பந்தத்தைச் செய்துள்ள அத்தகைய ஆளை நிறுவகம் தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினாலான நிறுவகத்திற்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிறுவகத்துக்கு உயர்கல்வி நிறுவனத்திலிருந்து அலுவலரை நியமித்தல்

**178.** (1) நிறுவகத்தின் கோரிக்கையின் பேரில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர், அவ்வலுவலரின் அல்லது ஊழியரின் சம்மதத்துடனும் அவ்வுயர்கல்வி நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அலுவலரின் சம்மதத்துடனும், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம். அத்தகைய நியமனமானது நிறுவகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான காலப்பகுதியொன்றுக் கானதாக இருத்தல் வேண்டும், அல்லது நிறுவகத்தினாலும் அத்தகைய முதன்மை நிறைவேற்று அலுவலரினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறான ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உள்ளடங்கலான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு அவரது சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப்படுவதாக இருத்தல் வேண்டும்.

(2) எவரேனும் அலுவலர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப் படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் நிறுவகத்தின் பணியாட் டொகுதியினது வேறெவரேனும் உறுப்பினரைப்போன்ற அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

மதியுரைக் குழுவொன்றை நியமித்தல்

**179.** (1) நிறுவக சபையானது -

(அ) இப்பாகத்தின் கீழான அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்று வதிலும் மற்றும் புரிவதிலும் அதற்கு உதவுவதற்கென கல்விசார் அல்லது உயர்தொழில்சார் தகைமை களைக் கொண்டுள்ள, அல்லது உயர்தொழில்சார் நிறுவனங்களை அல்லது அரசாங்க சார்பற்ற நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆட்களிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட அத்தகைய ஆட்களைக் கொண்டுள்ளதும், அவசிய மானதென அல்லது தோதானதென அச்சபை கருதக் கூடியவாறானதுமான மதியுரைக் குழுவொன்றை நியமிக்கலாம்; அத்துடன்

(ஆ) அதன் நிரந்தரப் பணியாட்டொகுதிக்கு வெளியேயுள்ள எவரேனும் நிபுணரின் சேவைகளை மதியுரைஞர்கள் அல்லது ஆலோசகர்கள் என்றவகையில் பெற்றுக் கொள்ளலாம்.

(2) நிறுவக சபையானது அவசியமானதென அது கருதக்கூடியவாறான அதன் அத்தகைய தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளை (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மதியுரைக் குழுவொன்றுக்குக் குறித்தளிக்கலாம்; ஆயின் எவ்வாறாயினும், அங்ஙனம் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணி எதனையும் நிறுவக சபை உரித்து நீக்குதலாகதாது. நிறுவக சபையானது மதியுரைக் குழுவொன்றினால் ஆக்கப்பட்ட முடிபெதனையும் திருத்துவ தற்கான அல்லது ஒழிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

(3) (அ) இப்பாகத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதிகளின்கீழ் ஆக்குவதற்கு நிறுவக சபையானது கோரப்படுகின்ற ஏதேனும் முடிபின்மீது அக்கறை முரண்பாட்டைக் கொண்டுள்ள அல்லது முறையற்ற செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கான நிலைமையிலுள்ள ஆளெவரும், மதியுரைக் குழுவின் உறுப்பின ரொருவராக அல்லது நிபுணரொருவராக (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவது நிறுவக சபையின் கடமையாதல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்கு, "முறையற்ற செல்வாக்கு" என்பது, நிறுவக சபை சாதாரண சூழ்நிலை களின்கீழ் வேண்டுமென்று பொறுப்பெடுக்காத அதனது முடிவுகளை ஆக்குவதில் அதனை கையாளுதல் வற்புறுத்துதல் என்ப பொருள்படும்.

(4) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய படிகள் மதியுரைக் குழுவின் உறுப்பினர்களுக்கும் (1) ஆம் உட்பிரிவின் கீழான எவரேனும் நிபுணருக்கும் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

(5) நிறுவக சபையானது மதியுரைக் குழுவின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறைக்கான விதிகளை ஆக்குதல் வேண்டும்.

அறிவுறுத்துநர் குழாமும் தொழிற்பாட்டுக் குழாமும்

**180.** (1) இப்பாகத்தின் நோக்கத்துக்காக, நிறுவக சபையானது பொருளியல், சர்வதேச நிதி மற்றும் சர்வதேச வியாபார அறிவைத் தோற்றுவிக்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் பகிரங்க நிறுவனங்கள் என்பவற்றிலிருந்தும், தனிப்பட்ட ரீதியில் நிதியளிக்கப்பட்ட சுயாதீன சிந்தனையாளர் அமைப்புக் களிலிருந்தும் அறிவுறுத்துநர் குழாமொன்றையும் தொழிற் பாட்டுக்குழாம் ஒன்றையும் மாற்றுச்சேவை அடிப்படையில் நியமிக்கலாம்.

(2) விடயத்துக்கேற்ப அறிவுறுத்துநர் குழாத்துக்கு அல்லது தொழிற்பாட்டுக் குழாத்துக்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள், இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

(3) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் அறிவுறுத்துநர் குழாத்தினதும் மற்றும் தொழிற்பாட்டுக் குழாத்தினதும் உறுப்பினர்களுக்கு ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XXXVI

### நிதி

நிறுவகத்தின் நிதியம்

**181.** (1) நிறுவகமானது, (இதனகத்துப்பின்னர் ''நிதியம்'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்-

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக் கூடியவாறான எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) இப்பாகத்தின் கீழ் நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து வருமானம், கட்டணங்கள், விதிப்பனவுகள், மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் என்றவகையாக நிறுவகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், நிறுவகமானது, அதற்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில், நிதி என்னும்

விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் -

(அ) இப்பாகத்தின் கீழ் நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) இப்பாகத்தினால் அல்லது இப்பாகத்தின் கீழ் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்கு தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**182.** (1) நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) நிறுவக சபையானது, நிறுவகத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றி முறையான கணக்குகள் பற்றிய புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையினதும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) நிறுவக சபையானது, எந்த நிதியாண்டுடன் கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்புடையதோ அந்த நிதியாண்டின் இறுதியிலிருந்து நூற்றி ஐம்பது நாட்களினுள்

அத்தகைய அறிக்கையுடன் சேர்த்து கணக்குகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சர், அத்தகைய கூற்றையும் அறிக்கையையும் பெற்றதிலிருந்து இரண்டு மாதங்களினுள் பாராளுமன்றத்தின் முன்னர் அவற்றை இடுதல் வேண்டும்.

## அத்தியாயம் XXXVII

## பொதுவான ஏற்பாடுகள்

**இப்பாகத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக் கைக்கான பாதுகாப்பு**

***183.*** நிறுவக சபையின் எவரேனும் உறுப்பினர், நிறுவகத்தின் பணிப்பாளர், எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது மதியுரைக் குழுவின், அறிவுறுத்துநர் குழாத்தின் அல்லது தொழிற்பாட்டுக் குழாத்தின் எவரேனும் உறுப்பினர் என்போரினால், விடயத்துக்கேற்ப, இப்பாகத்தின் கீழ் அல்லது நிறுவகத்தின் அல்லது நிறுவகச் சபையின் பணிப்புகளின்மீது அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவர் நல்லெண்ணத்துடன் செயலாற்றினார் மற்றும் உரிய விழிப்புக்கவனத்தையும், நியாயமான கவனத்தையும், திறனையும் பிரயோகித்தார் என அவர் எண்பித்தால், அவருக்கெதிராக குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப் படுதலாகாது.

**இரகசியம் பேணுவதற்கான கடமை**

***184.*** (1) நிறுவக சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், நிறுவகத்தின் பணிப்பாளர் மற்றும் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும், அல்லது மதியுரைக் குழுவின், அறிவுறுத்துநர் குழாத்தின் அல்லது தொழிற்பாட்டுக் குழாத்தின் ஒவ்வோர் உறுப்பினரும், அவரது பதவியின் கடமைகளை ஏற்குமுன்னர், இப்பாகத்தின்கீழ் அவரது தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் அவரால் பெறப்பட்ட அல்லது அவரது அறிவுக்கெட்டுகின்ற எவையேனும் தகவல்களை, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டளவுக்கு இப்பாகத்தின்

ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகத் தவிர அவர் வெளி விடமாட்டார் என வெளிப்படுத்துகையொன்றில் கையொப்ப மிடுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், இப்பாகத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தரவுத் தளம்

**185.** (1) நிறுவகமானது, இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் சேகரிக்கப்பட்ட எல்லாத்தகவல்களையும் பற்றிய தரவுத்தள மொன்றை உருவாக்கி முகாமைசெய்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) நிறுவகமானது, அதன் எல்லாத் தரவுத்தளங்களினதும் தரவுகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தொழில்நுட்பப் பாதுகாப்பு வழிமுறைகள் உட்பட எல்லா அவசியமான நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

நிறுவகமானது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்

**186.** நிறுவகமானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

நிறுவகத்தின் உறுப்பினர்கள், பணிப்பாளர், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பகிரங்க சேவையாளர்களாக கருதப்படுதல் வேண்டும்

**187.** நிறுவக சபையின், மதியுரைக் குழுவின், அறிவுறுத்துநர் குழாத்தின் மற்றும் தொழிற்பாட்டுக் குழாத்தின் எல்லா உறுப்பினர்களும், மற்றும் நிறுவகத்தின் பணிப்பாளரும், எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தினுள்ளும் அதன் நோக்கங் களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**188.** அமைச்சர், காலத்துக்குக்காலம் நிறுவக சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகை பற்றிய பொதுவான அல்லது விசேட பணிப்புகளை நிறுவகச் சபைக்கு வழங்கலாம். அமைச்சரின் பணிப்புகள்

**189.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நிறுவக சபையானது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம்:- விதிகள்

(அ) இப்பாகத்தின் கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப் படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அவ்வெல்லாக் கருமங்களும்;

(ஆ) நிறுவக சபையினதும் மதியுரைக் குழுவினதும் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டத்தில் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கைமுறை; அத்துடன்

(இ) அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நியமனம், பதவியுயர்வு, ஊதியம் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் அலுவலர்களுக்கும் ஊழியர் களுக்கும் லீவு மற்றும் வேறு வேதனாதிகள் வழங்கு தல்.

(2) நிறுவகத்தினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அது வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**190.** (1) அமைச்சர், இப்பாகத்தின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகளை நிறைவேற்றும் மற்றும் அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக ஒழுங்குவிதிகளை ஆக்குதல் வேண்டும். ஒழுங்குவிதிகள்

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின்

முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக் கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) எத்தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்

**191.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினா லொழிய-

'அமைச்சர்' என்பது, அரசியலமைப்பின் *44* ஆம் அல்லது *45* ஆம் உறுப்புரையின்கீழ், இலங்கை பொருளியல் மற்றும் சர்வதேச வியாபார நிறுவகம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்; அத்துடன்

'சிந்தனையாளர் அமைப்பு' என்பது, பொருளியல், சர்வதேச நீதி மற்றும் சர்வதேச வியாபாரம் துறைகளில் ஆய்வையும் ஆதரித்து வாதிடலையும் நிறைவேற்றுகின்ற ஒரு கொள்கை நிறுவகம் அல்லது ஓர் ஆய்வு நிறுவகம் எனப் பொருள்படும்.

## அத்தியாயம் XXXVIII

### நானாவிதமானவை

சிரமங்களை அகற்றுதல்

**192.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு ஏதேனும் சிரமங்கள் எழும் பட்சத்தில் பொ.ஆ. சபையின் கலந்தாராய்வுடன், வர்த்தமானியில் பிரசுரிக்கின்ற கட்டளை மூலம், இச்சட்டம் அல்லது விதிகள், அல்லது இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டளைகள், ஏற்பாடுகள் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் ஆகியவற்றுக்கு முரணாகாத அமைச்சருக்கு அவசியமானது என தோன்றுகின்ற அல்லது சிரமத்தை அகற்றுவதற்கு துரிதப்படுத்த வேண்டும் என தோன்றுகின்ற ஏற்பாடுகளை அமைச்சர் உருவாக்கலாம்.

அதேவேளை இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஐந்து வருடங்கள் கடந்த பின்னர் அத்தகைய கட்டளைகள் உருவாக்கப்படவில்லை என்ற நிபந்தனையின் பெயரில் மேற்கொள்ளலாம்.

(2) இப்பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் அது ஆக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களுள் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின்முன் இடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளை பாராளுமன்றத்தின் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டதன்மேல் மட்டும் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்

**193.** (1) இந்த சட்டத்தின் கீழ் விதிக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட அல்லது எவை தொடர்பில் ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய சகல விடயங்கள் தொடர்பிலும் பொ.ஆ. சபையின் கலந்தாராய்வுடன் அமைச்சர் ஒழுங்குவிதிகளை உருவாக்க லாம்.

(2) (1) உட்பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட பிந்திய திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியினுள், ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதே வேளை ஒப்பதல் அளிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும் இரத்துச் செய்யப்பட்டதாக ஒப்புதல் மறுக்கப்பட்ட திகதியி லிருந்து கருதப்படும், ஆயின் அதன் கீழ் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட எதற்கும் பங்கம் ஏற்படாது.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும் திகதி தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

நீக்குதல் மற்றும் சேமிப்பு

**194.** (1) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டு சபை சட்டம் இத்தாள் நீக்கப்படுகின்றது (இந்தச் சட்டத்தில் “நீக்கப்பட்ட சட்டம்” என குறிப்பிடப்படுகின்றது).

(2) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை நீக்கல் சட்டம் எப்படியிருந்த பொழுதிலும் கூட —

(அ) நீக்கப்பட்ட சட்டம் அல்லது ஏதேனும் எழுதப்பட்ட சட்டம் தொடர்பான ஏதேனும் ஏற்பாடுகள் பற்றிய ஒவ்வொரு சுட்டுதலும் பாகம் II, பாகம் III அல்லது இப்பாகத்துடன் தொடர்புடைய பாகம் II, பாகம் III அல்லது இப்பாகத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்புடையதாக பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தில் இலங்கை முதலீட்டுச் சபை தொடர்பான ஒவ்வொரு சுட்டுதலும் பொருளாதார ஆணைக்குழு அல்லது இலங்கை வலயங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பாகம் II, அல்லது பாகம் III, ஏற்புடய விதத்தில் அதற்கான ஏற்பாடுகள் என பொருள்கொள்ளப்பட்டல் வேண்டும்;

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையின் சபை உறுப்பினர்கள், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று செயற்படு பவர்கள் பாகம் II இன் கீழ் புதிய பொருளாதார ஆணைக்குழுவின் புதிய சபை நியமிக்கப்படும் வரை பாகம் II, பாகம் III, மற்றும் இப்பாகத்தின் ஆகிய நோக்கங்களுக்காக பொருளாதார ஆணைக்குழு சபையின் உறுப்பினர் களாக கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) இலங்கை முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிள்ளதுமான அங்கீகாரங்கள், உரிமங்கள், அதிகாரவளிப்புகள் மற்றும் அனுமதிகள் என்பன விடயத்துக்கேற்ப பொருளாதார ஆணைக்குழு அல்லது

இலங்கை வலயம் மற்றும் முதலீட்டாளர் இடையே உடன்பட்டவாறான அத்தகைய சீரமைப்புகளுக்கு அமைய வலிதானதாகவும் வலிவிலுள்ளதாகவும் இருப்பதாக தொடருதல் வேண்டும்;

(உ) முதலீட்டை மேம்படுத்துகின்றதும் வசதிப்படுத்து கின்றதுமான நோக்கத்திற்காக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டதும் அல்லது செய்துகொள்ளப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ளதுமான எல்லா அங்கீகாரங்கள், உரிமங்கள், அதிகாரவளிப்புகள் மற்றும் அனுமதிகள் அத்துடன் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது வேறு சாதனங்கள் விடயத்துக்கேற்ப பொருளாதார ஆணைக்குழு அல்லது இலங்கை வலயத்திற்கும் முதலீட்டாளருக்கும் இடையில் உடன்பட்டவாறான அத்தகைய சீரமைப்புகளுக்கு அமைவாக வலிதான தாகவும் வலிவிலுள்ளதாகவும் தொடருல் வேண்டும்;

(ஊ) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட எல்லா ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள் மற்றும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவைகள் ஆகியன இதுவரை அத்தகைய ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள் ஆகியன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரண்பாடாக இராதவை இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள், விதிகள் பணிப்புரைகள் மற்றும் கட்டளைகள் மூலம் திருத்தப்படலாம், இரத்துச்செய்யப்படலாம் அல்லது மாற்றப்படலாம்;

(எ) நீக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம் இ.மு.ச. விற்கு சொந்தமான அல்லது உடைமையாக இருந்த சகல

அசையக் கூடிய மற்றும் அசையாத சொத்துக்கள் தொடர்பில் பின்வருவனவற்றை கவனத்திற் கொள்க—

(i) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று காணப்படுகின்ற, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்படி, இந்த சட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற திகதியிலிருந்து செல்லு படியாகும் வகையில் பொருளாதார ஆணைக் குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்ட வைகள் மற்றும் ஆகியன பொருளாதார ஆணைக்குழுவின் சொத்தாக கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) உரிமம்பெற்ற வலயங்கள் தொடர்பில் மற்றும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று காணப்படுபவைகள், இச்சட்டம் ஆரம்பிக்கப்படும் திகதியிலிருந்து செல்லுபடி யாகின்ற விதத்தில் இலங்கை வலயத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டவைகள், இலங்கை வலயத்தின் சொத்தாக கருதப்படுதல் வேண்டும்;

(ஏ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் இமுச வினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங் களும், உடன்படிக்கைகளும் மற்றும் வேறு சாதனங் களும் -

(i) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன் நேர்முற்போந்த நாளன்று காணப்படுகின்றனவும் (ii) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, பொருளாதார ஆணைக்குழுவினால் அல்லது அதனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் சாதனங்களாக விருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன் நேர்முற்போந்த நாளன்று காணப்படுகின்ற இமுச வின் எல்லா உரிமைகள், சிறப்புரிமைகள், கடப்பாடுகள், கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் 11 ஆம் பாகத்தின்கீழ் பொருளாதார ஆணைக் குழுவின் உரிமைகள், சிறப்புரிமைகள்,

கடப்பாடுகள், கடன்கள் மற்றும் பொறுப்புக் களாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ii) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன் நேர்முற் போந்த நாளன்று அதன்கண் அமைந்துள்ள உரிமம்பெற்ற வலயங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் தொடர்பில், இலங்கை வலயங்களி னால் அல்லது அதனுடன், அவற்றுக்காகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் சாதனங்களாகவிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும். அது தொடர்பில் இமுச வின் எல்லா உரிமைகள், சிறப்புரிமைகள், கடப்பாடு கள், கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன் நேர்முற்போந்த நாளன்று காணப்படுகின்றதுமானவை III ஆம் பாகத்தின்கீழ் இலங்கை வலயங்களின் உரிமை கள், சிறப்புரிமைகள், கடப்பாடுகள், கடன்கள் மற்றும் பொறுப்புக்களாகவிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(ஐ) நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் –

(i) உட்பந்தி II இன் ஏற்பாடுகளுக்கமைவாக, இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறு வதாக II ஆம் பாகத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பொருளாதார ஆணைக்குழுவுக்குச் செய்யப் பட்ட விண்ணப்பமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க கையாளப் படுதலும் வேண்டும்; அத்துடன்

(ii) இந்த சட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற திகதியி லிருந்து செல்லுபடியாகும் விதத்தில் காணப் படுகின்ற உரிமம் பெற்ற வலயங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் தொடர்பில் பாகம் III இன் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வலயங்களிடம் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அதன் பிரகாரம் கையாளப்பட்டு கருதப்படுதல் வேண்டும்;

(ஒ) இ.மு.ச. இன் நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட சகல பணத் தொகைகளும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று காணப்படு கின்றவைகள் ஆகியன இச்சட்டம் தொடங்கும் திகதியன்று செல்லுபடியாகின்ற வகையில், பாகம் II இன் கீழ் தாபிக்கப்பட்ட பொருளாதார ஆணைக் குழுவின் நிதியத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்;

(ஓ) (i) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று நிலுவையிலுள்ள, (2) உட்பந்தியின் ஏற்பாடுகளின்படி இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் பொருளாதார ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப் பட்ட அல்லது அதற்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட வழுக்குகளாக, நடவடிக்கைகளாக அல்லது ஏனைய சட்ட நடவடிக்கைகளாக கருதப்படுதல் வேண்டும்;அத்துடன்

(ii) உரிமம்பெற்ற வலயங்கள் அல்லது அங்கு காணப்படுகின்ற தொழில்முயற்சிகள் தொடர்பான இலங்கை வலயத்தின் ஆளுகையின் கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பானவைகள் மற்றும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்புகுந்த நாளன்று நிலுவையிலுள்ளவைகள், இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து செல்லுபடியா கின்றவை எனவும், பாகம் III இன் கீழ் இலங்கை வலயங்களினால் ஆரம்பிக்கப்பட்ட அல்லது அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்குகள், செயல்கள் அல்லது ஏனைய சட்ட நடவடிக்கைகள் என கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், பொருளாதார ஆணைக்குழு மற்றும் இலங்கை வலயங்கள் ஆகியவற்றின் ஆளுகை யின் கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பான இ.மு.ச. இனால் மேற்கொள்ளப்பட்ட அல்லது அதற்கு எதிரான வழக்கு, செயல் அல்லது ஏனைய சட்ட நடவடிக்கைகள் என கருதப்படுதல் வேண்டும்.

(ஔ) இ.மு.ச. இன் சகல விதமான நலன்கள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், கடன்கள், பொறுப்புகள் ஆகியன –

(i) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்போந்த நாளில் உள்ள நிலுவைகள், (2) உட்பிரிவின் ஏற்பாடுகளின்படி, இச்சட்டம் செல்லுபடியாகின்ற தொடங்கும் திகதியிலிருந்து பொருளாதார ஆணைக்குழுவின் நலன்கள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், கடன்கள் என கருதப்படுதல் வேண்டும்;

(ii) உரிமம் பெற்ற வலயங்கள் மற்றும் அங்கு காணப்படுகின்ற தொழில்முயற்சிகள் தொடர்பில் பாகம் III தொடங்கும் திகதி நேர் முற்புகுந்த நாளிலிருந்து நிலுவையிலுள்ள, பாகம் III தொடங்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் இலங்கை வலயத்திற்கான நலன்கள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், கடன்கள் மற்றும் பொறுப்புகள் என கருதப்படுதல் வேண்டும்;

(க) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முற்புகுந்த நாளன்று இ.மு.ச. பதவி வகிக்கின்ற அலுவலர்களும் ஊழியர்களும் -

(i) இந்த சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் விதத்தில், பொருளாதார ஆணைக்குழுவின் அலுவலர்களாகவும் ஊழியர்களாகவும் நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் அவர்களுக்கு உரித்தான எந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் குறையாத நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கு அருகதையுடைவர்கள் என கருதப்படுதல் வேண்டும்;

(ii) உரிமம்பெற்ற வலயங்களில் பணியாற்றுபவர்களில் இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் விதத்தில் இலங்கை வலயங்களின் அலுவலர்களாகவும் ஊழியர்களாகவும் நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் காணப்பட்ட தொழில் வாய்ப்புகள் பற்றிய

நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் எந்த விதத்திலும் குறையாமல் பெற்றுக் கொள்வதற்கு அருகதையுடையவர்கள் என கருதப்படுதல் வேண்டும்;

(ங) பொருளாதார ஆணைக்குழுவின் பேரவையுடன் இணைவதற்கான அல்லது இலங்கை வலயங்களுடன் இணைந்திருப்பதற்கான தெரிவைச்செய்யாத இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற இமுச அலுவலர்களும் ஊழியர்களும் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட வேண்டிய வாறான தன்னிச்சையான இளைப்பாறல் திட்ட மொன்றின் நியதிகளின்படி செலுத்தப்படவேண்டிய அத்தகைய நட்டஈடு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இந்த சட்டத்தின் கீழ் பொருளாதார ஆணைக்குழுவிற்கு அல்லது இலங்கை வலயங்களுக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களிற்கு எந்தவித பங்கமும் ஏற்படாத வகையில், பொருளாதார ஆணைக்குழு அல்லது இலங்கை வலயங்கள் எதுவாக இருந்த பொழுதிலும் இ.மு.ச. தொடர்பிலும் மற்றும் அதிகாரப் பிரதேசம், உரிமம்பெற்ற வலயங்கள், உரிமம்பெற்ற தொழில்முயற்சிகள், பிரதேச தொழில்முயற்சிகள், நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது அதன் பிரகாரம் தாபிக்கப்பட்ட விடயங்களை சகல தத்துவங்களையும் தொடர்ச்சியாக பிரயோகிக்க முடியும். ஆனால் பொருளாதார ஆணைக்குழு அல்லது இலங்கை வலயம் ஆகியவற்றினால் பிரயோகிக்க கூடிய பொதுவான தத்துவங்களுக்கு இது மட்டுப்படுத்தப்பட்டதல்ல. எதுவாக இருந்த பொழுதிலும், இது தொடர்பில் 5, 16, 17, 18, 20, 20அ, 21, 22, 22அ மற்றும் 24 ஆம் பிரிவுகளின் கீழ் நீக்கப்பட்ட சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள் முழுமையான வலுவுடனும் பயனுறுமதிமிக்க முறையிலும் தொடரப்படுதல் வேண்டும்:

ஆயின், அதிகார இடப்பரப்புகளின் முகாமைத்துவம் அல்லது தொழிற்பாடு உரிமம்பெற்ற வலயங்கள், உரிமம்பெற்ற தொழில்முயற்சிகள், இடப்பரப்பு தொழில்முயற்சிகள் தொடர்பில்

விடயத்துக்கேற்ப பொருளாதார ஆணைக்குழு அல்லது இலங்கை வலயங்களினால் பிரயோகிக்கப்பட்ட அல்லது நிறைவேற்றப் பட்டவை தத்துவங்கள் அல்லது பணிகளின் தரக்குறைவில் இருத்த லாகாது.

(4) பொருளாதார ஆணைக்குழு இமுச வினால் ஆக்கப் பட்டதாக கருதப்படுவனவும் நீக்கப்பட்ட சட்டத்தின் 21 ஆம் மற்றும் 22 ஆம் பிரிவுகளின்கீழ் இமுச ஆக்கப்பட்டனவும் அத்துடன் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள எல்லா உப சட்டங்களையும் திருத்துகின்ற, இரத்துசெய்கின்ற அல்லது மாற்றுகின்ற நோக்கத்திற்கென உபசட்டங்களை ஆக்குவதற்கு தத்துவ முடையதாதல் வேண்டும்.

**195.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப் படுத்தினால் ஒழிய — பொருள்கோடல்

"அதிகாரப் பிரதேசம்" என்பது நீக்கப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரப் பிரதேசம் என பொருள்படும்;

"பிரதேச நிறுவனம்" என்பது நீக்கப்பட்ட சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இ.மு.ச. மேற்கொண்ட உடன்படிக்கையுடன் தொடர்புடைய நிறுவனம் மற்றும் அதிகாரப் பிரதேசத்தினுள் வியாபாரங்களை மேற்கொள்கின்ற அல்லது வியாபாரங்களை மேற்கொள்வதற்காக பிரேரிக்கப்பட்ட நிறுவனம் என பொருள்படும்;

"தொழில்முயற்சி" என்பது இ.மு.ச. இன் அபிப்பிராயப்படி இ.மு.ச இன் நோக்கங்களை அடைவதற்கு அல்லது அடைவதற்கு உதவக் கூடியவை என கருதக் கூடிய ஏதேனும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடுவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள வியாபாரங்கள் அல்லது கம்பனிகள், கூட்டுத்தாபன சமூகங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய தற்காலிகமாக வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட

முழுமையான உரிமைத்துவம், பங்காண்மை, கம்பனி அல்லது கூட்டுறவு சங்கம் எனப் பொருள்படும்;

"இ.மு.ச." என்பது நீக்கப்பட்ட சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டு சபை என பொருள்படும்;

"உரிமம்பெற்ற வலயங்கள்" என்பது நீக்கப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வலயங்கள் என பொருள்படும்;

"உரிமம் பெற்ற தொழில்முயற்சிகள்" என்பது நீக்கப்பட்ட சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட உரிமம் பெற்ற தொழில்முயற்சிகள் என பொருள்படும்;

III ஆம், IV ஆம் மற்றும் இப்பாகத்தின் நோக்கங்களுக்கு "அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 அல்லது 45 ஆம் உறுப்புரையின் கீழ் பொருளாதார வலயம் மற்றும் இலங்கை வலயங்கள் ஆகியவற்றுடன் விடயம் மற்றும் பணி குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என பொருள்படும்;

"வலய அபிவிருத்தியாளர்" என்பது, முதலீட்டு வலயமென்றின் அபிவிருத்தி குறித்தளிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்; அத்துடன்

"வலய தொழிற்படுத்துநர்" அபிவிருத்தியடைந்த முதலீட்டு வலயமென்றினை முகாமைசெய்கின்ற ஆளொருவர் எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**196.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.